282
4.60

மாலா

தீபாவளி மலர் 1960

விலை 50 கா

திரைப்படங்களிலேயே
சிகரமானது...
ரூ 125 லட்சம்
செலவில்
தயாரிக்கப்பட்டது
ஸ்டர்லிங்
இன்வெஸ்ட்மெண்ட்
கார்ப்பொரேஷன்
அளிக்கும்
அக்பர்
(மொகலே ஆஜம் - தமிழ்)
கூடிய சீக்கிரம் தமிழ்நாடெங்கும் வெளிவருகிறது

Over 40 Years

OF UNSTINTED SERVICE FOR THE CAUSE OF

PHOTOGRAPHY

WE ARE STILL AT YOUR COMMANDS FOR

STUDIO **PORTRAITS** ★ OUTSTATION **D & P SERVICE**

AMATEUR D & P SERVICE ★ PICTURE **FRAMING**

GROUP PHOTOGRAPHS ★ CAMERA & PROJECTOR **SALES & SERVICE**

WEDDING & **PARTY SNAPS** ★ **PROCESS BLOCK** MAKING

SUBSTANDARD **16 mm CINEMATOGRAPHY** COMMERCIAL **PHOTOGRAPHY**

Agfacolor PROCESSING & PRINTING

ALL UNDER EFFICIENT MANAGEMENT & COURTEOUS SERVICE

G. K. VALE & Co.,

PHOTOGRAPHERS & BLOCK MAKERS

MADRAS & BANGALORE

R. S. B. FILMS

Presents

a silver jubilee couple

VYJAYANTHIMALA

&

KISHORE KUMAR

in



'RUNGOLI'

Written & Produced by	:	**Rajindar Singh Bedi.**
Directed by	:	**Amar Kumar.**
Music by	:	**Shanker-Jaikishen.**
Songs by	:	**Shailendra & Hasrat.**

R. S. B. FILMS

MOTION PICTURE PRODUCERS.

★

218, Famous cine Bldg,
HAINES ROAD, MAHALUXM
BOMBAY-11.

உங்களுக்கு எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்

The Curvacious Dame of the Kelvey Group



"WEELOFAR"

5 வால்வு 3 பாண்டு

ரூ. 290

(உள்ளூர் வரி தனி)

Radio-De-Kelvey

★

The distinctive radio for the discriminating home



"DVKE"

6 வால்வு 6 பாண்டு

ரூ. 475

(உள்ளூர் வரி தனி.)

RADIO-DE-KELVEY

★

A sparkling Jewel from the Kelvey shell



"PRIYA'

7 வால்வு 8 பாண்டு

ரூ. 560

(உள்ளூர் வரி தனி.)

Radio-De-Kelevy.

★

Sole Distributors for the Southern Zone

KRISHNA (Sales) AGENCY,

28, Mount Road, Madras-2

Phone: 72024

Grams: Saletrend

For exquisite feel & excellent appeal...



Choose

MYSORE SILK SAREES ★

GOVT. SILK WEAVING FACTORY · MYSORE · TRADE MARK

Hallmark of quality

MYSORE GOVERNMENT SILK WEAVING FACTORY, MYSORE.

Sole Distributors in South India

MAHOMED EBRAHIM & Co., (Pte) Ltd.,

MADRAS - BANGALORE - HYDERABAD.

உணவு ருசியும் சத்தும் மிகுந்ததாய் அமைய....

RISING SUN BRAND

சூரியன் மார்க்

மைதா
சூஜி
ஆட்டா

"சூரியன் மார்க் மைதா, சூஜி அல்லது ஆட்டாவில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் எப்பொழுதும் ருசியும், சத்தும் மிகுந்ததாக இருப்பது எப்படி ?"

இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பது மிகவும் சுலபம் — தரக்கட்டுப்பாடு.

தேசத்தின் உணவுத் தேவைக்கு உதவும் பொறுப்பான பணியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். எனவே தயாரிப்புத் துறையில், உயர்தரக் கோதுமையைக் கொள்முதல் செய்வது முதல், தயாரான கோதுமைப் பொருள்களை விற்பனைக்கு அனுப்புவது வரையுள்ள ஒவ்வொரு கட்டத்திலும், கட்டுப்பாடான தரத்தணிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்து கடைப்பிடிக்கிறோம்.



இன்று கோதுமைப் பொருள்களை வாங்கும் பொழுது, சிறிதும் தயங்காமல், உடனடியாக நீங்கள் சூரியன் மார்க்கைத் தேர்ந்து எடுக்கிறீர்கள். இது எங்கள்மீது உங்களுக்குள்ள நம்பிக்கையின் அடையாளம். எங்களுக்கு மகிழ்வுதரும் செயல்

சென்னை செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிட்டெட் தயாரிப்புகள்

மானேஜிங் ஏஜண்டுகள் :

சௌந்தரராஜன் & கம்பெனி லிமிட்டெட்,

221, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்–1

போன்: 31241 & 31242 தபால்பெட்டி 1558 தந்தி: MATHOORAN

EP



விநியோகஸ்தர்கள்:- ஸிமெண்ட் மார்க்கடிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபிஸ்
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட், சென்னை-2.

நாளொரு
மேனியாக...
ரெக்ஸோனாவில் அடங்கி
யுள்ளது கேடில்; சரும
எழிலுக்கான பற்பல
எண்ணெய்கள் இணைந்த
விசேஷத் தைலமாகிய கேடில்,
சருமத்திற்கு ஊட்டமளித்து,
மழமழப்பாகவும், மென்மை
யுடனும் மிளிரச் செய்கிறது!
ரெக்ஸோனாவின் எடுப்பான
நறுமணம் இணைபிரியாமல்
உங்கள்மீது கமழ்ந்து
இளங்காலைப் புதுமலர்ச்சியுடன்
நாள்முழுதும் உங்களை விளங்கச்
செய்கிறது. உங்கள் அன்றாட
அழகுசாதனமாக ரெக்ஸோனா
உபயோகியுங்கள்!
Rexona
BLENDED WITH CADYL
...ரெக்ஸோனா உங்கள் மேனியெழிலை ஓங்கச்செய்கிறது
ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனா ப்ரொ. லிமிடெட் சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.
RP.165-50 TM



உங்கள் அருமை மகளுக்கு
நீங்கள் தரக்கூடிய
அன்பளிப்பு வைர மோதிரமே
வைரங்கள்
ஒரு பெரிய முதலீடு.
அவைகளை வாங்குவதற்கு
முன்னால் சோதித்துப் பாருங்கள்.
வைரங்களின் தரத்தை கண்டறிய உம்மிடியாரின் ஷோருமுக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள். இலவசமாக இதை செயல் முறையில் செய்து காட்ட தயாராக இருக்கிறோம்.
உம்மிடியார்
உம்மிடி ராமய்யா செட்டி, குருஸ்வாமி செட்டி & கோ
23லிருந்து 25, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை
VRG
JWT-VR-919

SRI GANESHRAM'S 777 BRAND
FOOD PRODUCTS · MADRAS · 1 · S · INDIA

திடீர் 3 நிமிஷ
தயாரிப்புகள்

அரிசி இட்லி, மைசூர் போண்டா
தக்காளி சாம்பார் & ரசம்

மேற்படி பவுடர்களை தண்ணீர் விட்டு கறைத்த உடனேயே தயாரிக்கலாம். ஊறவோ, புளிக்கவோ தேவையில்லை!

கிடைக்குமிடம்

இண்டியன் இண்டஸ்ட்ரியல் கோ., லிட்.,
(ஹைகோர்ட் எதிரில்) சென்னை-1.

இண்டு-கம்-என்டர் பிரைஸர்ஸ் (பி) லிட்.,
37, லால்பாக் ரோடு, ரிச்மண்ட் சர்க்கிள், பெங்களூர்-1.

Phone : 61552 Estd : 1926 Grams : Butter

அன்றும் இன்றும் என்றும்

சிறப்புடன் விளங்குவது

B. V. ராவ் & கோ.,

மனங்கவரும் மாயவரம் வெண்ணைக்கும்
மணங்கமழும் கோபிமார்க் நெய்யிற்கும்

மற்றும் பச்சரிசி, புழுங்கலரிசி, அப்பளம், வற்றல் முதலியவைகளுக்கும் புகழ் பெற்று விளங்குவது

கிளைகள் :

போன் : 87327
57, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

போன் . 71823
28, தெற்கு மாட வீதி
மைலாப்பூர், சென்னை.

நடம்புரியும் பாரதச் சிலம்பொலியோ

வடிவழகி நீயென்ற வாழ்த்தொலியோ!

ஒலிதனிலே இசைவளர்த்த அழகைப் போலே உடல்தனிலே எழில் வளர்த்த பாரதப் பெண்ணே! பொலிவழகால் புகழ்வளர்த்த பெருமை கொண்டாய்; பொன்னுடலைப் போற்றினையோ, பாரதப் பெண்ணே! நேர்த்தியான மேனியழகு இல்லையேல், பூர்த்திபெற்ற அழகில்லை என்பதை உணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய ராகினி கூறுகிறார்: 'அதனால்தான், மென்மைகுலவும் லக்ஸ் சோப்பின்மீது எனக்கு நம்பிக்கை. மணங்கமழும் அதன் நுரை எனது மேனியை மினிரச் செய்கிறது.'

சினிமா நட்சத்திரங்களின் **LUX** TOILET SOAP தூய, மென்மைகுலவும் அழகுசாதன சோப்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

LTS. 54-X29 TM

இன்றே விஜயம் செய்யுங்கள்

மதுரையில்
1901-ல் ஸ்தாபிக்கப்பட்டது
மூன்று தலைமுறையாக
நடைபெற்றுவரும்.

ஒரிஜினல்
நாகப்பட்டணம்
நெய் மிட்டாய் கடை

இது ஒன்றுதான்
20, மேலச் சித்திரை வீதி
(மேல கோபுரம் சமீபம்)

Prop: வி. வெங்கட்ருமய்யர் சன்.
வி. அனந்தநாராயணன் மதுரை.

Phone to 3725
or Call at
Telegs: Fullmoon



Chhotabhai's

191. CHINA BAZAAR ROAD., MADRAS.

கே. ஸி. பி. லிமிடெட்

38, மவுண்ட் ரோடு, சென்னை-6.

★

KRISHNA SWEETS

CHOICE, QUALITY.

★

★ நிபுணர்களது மேற்பார்வையில் உயர்ந்த ரக பழ ரஸங்களைக் கொண்டு, சுத்தமான சர்க்கரையிற் தயாரான மிட்டாய்கள்

★ குழந்தைகளுக்கு ஆரோக்கியமும் வலிமையும், அளிக்கின்றன.

★ ஆலையிலிருந்து அப்படியே புதிதாக விற்பனைக்கு வருகிறது.

★

KCP

கிருஷ்ணா மிட்டாய்கள்


கேசப்
பராமரிப்பின்
ரகசியம்
ஸ்வஸ்திக்
பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்

எல்லோருக்கும் எங்கள்

மனமார்ந்த தீபாவளி

வாழ்த்துக்கள்

கலிங்கா ட்யூப்ஸ் லிமிடெட்,

33, சித்தரன்ஜன் அவின்யு, கல்கத்தா—12.

தொழிற்சாலை:

சௌத்வார், கட்டாக், ஒரிஸ்ஸா

சென்னை மாநிலத்தில்

ஐந்தாண்டுத் திட்டங்கள்

ஆரம்பமாவதற்கு முன்னர்		ஆரம்பமான பின்னர் - இன்று
உணவு உற்பத்தி 38 லட்சம் டன்கள்.	...	உணவு உற்பத்தி 53 லட்சம் டன்கள்.
வேளாண்மையின் முழுப் பயனையும் விவசாயிகளே அனுபவிக்கச் செய்யக் கூட்டுறவுப் பண்ணைகள் இல்லை.	...	100 கூட்டுறவுப் பண்ணைகள் உள்ளன.
மின்சார வசதி பெற்றிருந்த கிராமங்கள் 1618.	...	★ மின்சார வசதி பெற்றுள்ள கிராமங்கள் 10,000.
மின்சார சப்ளை கிடைத்த பம்புகள் 14,373	...	மின்சாரத்தால் இயங்கும் பம்புகள் 1 லட்சம்.
16,037 தொடக்கப் பள்ளிகளும், 637 உயர்நிலைப் பள்ளிகளும், 36 கலைக் கல்லூரிகளும் இருந்தன.	...	25,074 தொடக்கப் பள்ளிகளும், 1125 உயர்நிலைப்பள்ளிகளும், 59 கலைக் கல்லூரிகளும் இருக்கின்றன.
பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களின் பசிப் பிணியை அகற்ற எந்த ஏற்பாடும் இல்லை.	...	★ சுமார் 9 லட்சம் மாணவர்களுக்குமேல் இலவச நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது.
பள்ளிகளில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் எண்ணிக்கை 22.31 லட்சம்.	...	பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 37.61 லட்சம்.
பள்ளி ஆசிரியர்களின் நிலை சீர்படாமல் இருந்தது.	...	பிராவிடெண்ட்,—இன்ஷூரன்ஸ்—பென்ஷன் திட்டத்தால் ஆசிரியர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி தோன்றியுள்ளது.

சிறு தொழில் வளர்ச்சிக்காக முனைப்பான ஆக்க வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.	...	சிறு தொழில் வளர்ச்சிக்காக மாநிலத்தில் 7 இடங்களில் தொழிற்பண்ணைகளும் காலனிகளும் அமைக்கப்பட்டுள்ளன.
சிறு தொழில் அதிபர்களுக்கு அரசாங்க நிதி உதவியும் இதர உதவிகளும் கிடைக்கவில்லை.	...	சுமார் 8000 தொழில் அதிபர்களுக்கு ரூபாய் 63 லட்சம் வரை நிதி உதவியும் தொழிற் பண்ணைகள் மூலம் இதர வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.
குடிசைத் தொழில்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து கிடந்தன.	...	ரூபாய் 1 கோடிக்கும் மேலாகச் செலவுச் செய்து 11 குடிசைத் தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன
கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு வேறு வகையில் வருமானத்தைப் பெருக்க வாய்ப்புகள் இல்லை.	...	கதர் இயக்கத்தின் மூலம் 5 லட்சம் மக்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொண்டு வருகின்றனர்.
பொதுவாகவே வேலை வாய்ப்பு அதிகரிக்காமல் இருந்து வந்தது.	...	கிண்டித் தொழிற் பண்ணையில் மட்டும் 1500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து தரப்பட்டுள்ளது.
கைத்தறி நெசவாளர்களின் நிலை அவலத்திற்கு உட்பட்டிருந்தது.	...	நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கைத்தறிக்கான நூல் மலிவான விலையில் கிடைப்பதற்காக அரசாங்கத்தின் பங்கு மூலதனத்துடன் மூன்று கூட்டுறவு நூற்பாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1225 வீடுகள் நெசவாளர்களுக்காகக் கட்டித் தரப்பட்டுள்ளன.

★ (அகில இந்தியாவிலும் முதல்தரமான சாதனை)

இந்த முன்னேற்றங்களுக்கு முக்கிய காரணம் தமிழ்ப் பெருமக்களின் சீரிய ஒத்துழைப்பே !

சென்னை அரசாங்க செய்தித்துறை நெறியாளர் வெளியிட்டது.

பொது மக்களின் விருப்பத்திற்கு இணங்க

எமது OK ஓ. கே. பரிசுத் திட்டம்

(குறுகிய காலத்திற்கு மட்டும்) புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

அழகான தந்த நிற ஓ. கே. பரிசுச சோப்புப் பெட்டியை அன்பளிப்பாகக் கொடுக்கும் எங்களது இலவசப் பரிசுத் திட்டத்தை, 'ஓ. கே.' ஆதரவாளர்கள் அநேகர் அடிககடி வேண்டிக் கொண்டதற்கு இணங்க இன்னும் சிறிது காலத்திற்குப் புதுப்பித்திருக்கிறோம.

இந்தத் திட்டம் தீபாவளிப் பண்டிகை காலத்திற்கும, அதன் பின்பு கைவசம் ஸ்டாக் இருககும் வரை மட்டுமே நீடிக்கும்.

தாமதம் வேண்டாம்—இப்பொழுதே வாங்குங்கள்

உங்கள் சருமத்திற்கு

அதிகப்படியான கிளிஸரின்
மென்மை ஊட்டுகிறது

லனோலின்
பாதுகாப்பு தருகிறது

ஆக்டெமர்
கிருமிகளை அழித்து
ஆரோக்கியம் அளிக்கிறது

OK

ஓ.கே சந்தன சோப்

இனாம்

3 கட்டி ஓ கே சந்தண சோப் வாங்குங்கள் கவர்ச்சிகரமான தந்த முலாம் சோப்புப் பெட்டி ஒன்றை முற்றிலும் இலவசமாகப் பெறுங்கள்

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்.
மதராஸ்-1

EP

THE STAR IS ON HER WAY



CO-STARRED FOR THE FIRST TIME WITH SENSATIONAL

Star RAJENDRA KUMAR.

Charming VYJAYANTHIMALA

Gives a great performance in

FILMYUG'S

AASKA PANCHHI

Produced by : ★ *Dialogue :* ★ *Lyrics :*
J.O.M. Prakash — Rajindar Singh Bedi — Shailendra & Hasrat

Music : ★ *Directed by :*
Shanker-Jaikishen — Mohankumar

வரப்போகும் நவம்பர், இதழ்...'மாலா'வில்

1. புதுமையான **பல அம்சங்கள்**
2. **துப்பறியும் கதைகள்;** வாழ்க்கையில் நடக்கும் முக்கிய சம்பவங்களைச் சித்தரிக்கும் சிறு கதைகள்;
3. வாழ்க்கையில நடந்த உண்மைச் சம்பவங்களைப் பின்னி எழுதப் பட்டு ஒரு பிரபல எழுத்தாளர் அளிக்கும் **தொடர் கதை;**
4. சுவையுள்ள **இலக்கியப் பாடல்களுக்குப்** படங்களுடன் விளக்கங்கள்;
5. **''கல்யாணமான பின்''** என்ற தலைப்பில் புதிதாகக் கல்யாணம் செய்துகொண்டவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் ரஸமான சம்பவங்களைக் கொண்டு பின்னிய கட்டுரை;
6. **''சினிமா நட்சத்திரங்கள்''** என்ற தலைப்பில் பல படங் களும், செய்திகளும்;
7. நமது 'மாலா' ஜோஸ்யர் என்று வழங்கிவரும் ''உச்சிஷ்ட மஹா கணபதியை ஆராதித்து அனுக்ரஹம் பெற்ற **''கணபதி ஜோஸ்யரின்''** விசேஷ கட்டுரைகள்;

   இவை தவிர **பிற நாடுகளில் நடக்கும் அதிசய சம்பவங் கள்.** விளக்கப்படங்களுடனும், செய்திகளுடனும்;
8. **'தலைக்கோல் சிறக்க'** என்ற தலைப்பில் நடன ஆசிரியர் திரு. சௌந்திரராஜன் எழுதும் கட்டுரை.

பிரதி மாதம் 10-ந் தேதியன்று 'மாலா' வெளிவரும்

'மாலா'வின் விலை 25 காசுகள்தான்;

'மாலா'வைத் தொடர்ந்து படிக்க விரும்பும் வாசகர்கள் அவரவர் வீட்டு விலாசத்திற்கே வரவழைத்துக் கொள்ளுங்கள்.

வருட சந்தா ரூ. 3—00 (ரூபாய் மூன்றுதான்)

ரூபாய் முன்றை M. O. மூலம் தொகை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

(விவரங்கட்கு)

மானேஜர், ''மாலா''

1-G, ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் ரோட்

ஆழ்வார்ப்பேட்டை :: சென்னை-18

மாலா

தீபாவளி மலர் (அக்டோபர்) 1960.

வெளியீட்டகம்

மாலா 10	போஷகர் : வைஜயந்திமாலா ஆசிரியர் : எஸ். எஸ். சர்மா	மலர் 7

சமர்ப்பணம் ... ஆசிரியர்
வண்டு ஊதிய சங்கு ... சர்மா
சினம் தணிந்த
செஞ்சடையான் ... சர்மா
ஆலய வழிபாடு ... எஸ். எஸ். சர்மா
திருப்பாவையின்
திருப்பணி ... எஸ்.எஸ்.சர்மா
9005 அடி உயரத்திலே! ... பிலோ இருதயநாத்
பொன்மொழிகள் ... பன்மொழிப் புலவர்
காதல் எனும் மாயை ... டி. எஸ். கே.
மனமாற்றம் ... எழுத்தாளர்
யார் தியாகி? ... கோவை வாணன்
தி.கோ.காவல் கிருஷ்ணையர்., எஸ்லார்வி
நான்கு அறிஞர்கள் ... த. ரா. ரா.
டாக்டர் பார்க்கவி ... கிருஷ்ணு
ராசி பலன் ... கணபதி ஜோஸ்யர்
சைக்கிள்காரி ... கௌடில்யன்
சந்திரனில் தீபாவளி ... சுப்பு

மற்றும் இதர அம்சங்கள்

குறிப்பு : 'மாலா'வின் கதைகளில் வரும் பெயர்கள், நிகழ்ச்சிகள் யாவும் கற்பனைகளே.

சமர்ப்பணம்

எங்கும் இருளகன்று ஒளிமயமாய் விளங்கும் இப்புனிதப் பொன்னாளிலே மாலாவின் பத்தாவது தீபாவளி மலரைக் கலையன்னையின் கமலத்திருவடிகளிலே சமர்ப்பிக்கிறோம். நாமகளின் நல்லருளாலே வாசக நேயர்களின் அபிமானமும் ஆதரவும் பெற்று நல்ல முறையில் வளர்ந்து வரும் மாலா பத்தாண்டு காலமாக வாசகர்கள் விரும்பி வரவேற்கும் வகையில் அரும்பணி யாற்றி வந்துள்ளது. வரும் இதழிலிருந்து பல புதிய செய்திகளைச் சேர்க்க விரும்பியுள்ளோம். அதனால் வாசகர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று நம்புகின்றோம்.

இம்மலரிலே அடங்கிய செய்திகள் அனைத்தும் வாசகர்களுக்கு மிகுந்த விருப்பத்தை உண்டாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. கருத்துக்கள் செறிந்த கதைகளையும் கட்டுரைகளையும் ஓவியங்களையும் உருவாக்கிக் கொடுத்தோருக்கும் விளம்பரம் தந்து உதவியவர்களுக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—ஆசிரியர்.

ஆதி சங்கராச்சாரியார் அவர்களின் சிஷ்யர்களுள் ஒருவரான தோடகாச்சார்யாரின் பரம்பரையில் வந்தவரும், இதோ பூஜை செய்து கொண்டிருப்பவருமான சகடபுரம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியஸ்வாமிகள் ''மெய்த்தவத்தின் பேரொளியாகவும், கருணை வெள்ளமாகவும், ஞானக்கடலாகவும் விளங்கிவருகிறார். இவரை தரிசனம் செய்துவருபவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் நன்மை அடைந்து வருகிறார்கள். இம்மஹான் பூஜை செய்யும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பிகையும், ஸ்ரீநீலகண்டேஸ்வரரும், ஸ்ரீவேணுகோபாலஸ்வாமியும், ஸ்ரீகுருதத்தாத்ரேயரும், நமக்கும் நம் மாலா வாசகர்கள் அனைவருக்கும், இப்படத்தைப் பார்த்ததனாலேயே, இந்த மங்களகரமான தீபாவளித் திருநாளில் அருள் புரியட்டும்.

வண்டு ஊதிய சங்கு!

பண்டைத் தமிழகத்தை மூவேந்தர்கள் ஆண்ட காலம் பொற்காலமாகும். முடிமன்னர் மூவரும் முத்தமிழைச் சிறப்பாக வளர்த்து வந்தனர். அதனல் புலவர்களுக்கு எல்லையில்லா மதிப்பு ஏற்பட்டது. நாவீறுபடைத்த நாவலர்கள் பலர்தோன்றினர். பொன்மொழிகள் கூறிப் புலவர்கள் புகழ்பெற்றனர். சுவைமிக்க கவிதைகளைப் படைத்த கவிஞர்களை அறிஞர்கள் பாராட்டினர். புவியரசரைவிடக் கவியரசரையே வையகம் போற்றிப் புகழ்ந்தது. செந்தமிழ்ப் புலவர்கள் செம்மையாக ஆதரிக்கப்பட்டனர். அத்தகைய கவிஞர்களின் கனிபோன்ற கவிதைகளிலே சொல் நயம், பொருள் நயம், அணிநயம் முதலிய பல நயங்களும் பொருந்தியுள்ளன. இங்ஙனம் பல நயங்களும் பொருந்திய அருங்கனியொத்த பாடல்கள் சிலவற்றைக் காண்போம்...

''புகழேந்திப் புலவர் பாடல்''

''மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணை தெரிந்து மெய்காப்ப—முல்லை மலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது''—

இது புகழேந்திப் புலவரால் பாடப்பெற்ற நளவெண்பாவில் உள்ளது. நளவெண்பா நயங்கள் அனைத்தும் பொருந்திய நற்றமிழ் நூலாகும். ஒட்டக்கூத்தர் முதலிய சிறந்த புலவர்களால் அலங்கரிக்கப்பெற்ற குலோத்துங்க சோழன் அவையில் புகழேந்திப் புலவர் தாமியற்றிய நளவெண்பாவை அரங்கேற்றும் பொழுது அவரிடம் முதிர்ந்த பகை கொண்டவரான ஒட்டக்கூத்தர் அவர்பாடல்களிலே எங்ஙனமேனும் குற்றம் கூறவேண்டுமெனப் பெருவிருப்பங்கொண்டார். புகழேந்திப் புலவர் ஒவ்வொரு பாடலாகக் கூறி வரும்பொழுது அந்திக்காலத்தை வருணிக்கும் பாடல் ஒன்றைப் பாடினர். அதுதான் 'மல்லிகையே'—என்று தொடங்கும் பாடல்...

'வெண்ணிறமுள்ள மல்லிகை அரும்பைச் சங்காகக் கொண்டு வண்டாகிய சங்கூதுவோன் சங்கநாதம் செய்ய (மல்லிகை அரும்பில் வண்டு மொய்க்க), கரும்புவில்லேந்திய மலர்க்கணையானாகிய மன்மதன் மறைந்திருந்து மலரம்புகளை இளநங்கையர்மீதும் இளைஞர்மீதும் தொடுத்து அவர்களுக்குக்காமத்தை வளர்க்க, அந்திவேளை மெல்ல நடந்துவந்தது என்பதே இதன் திரண்ட பொருளாகும்.

ஒட்டக்கூத்தர் இச்செய்யுளில் கற்பனைக் குற்றம் இருப்பதாக உரைத்தார்.

அது பின்வருமாறு: சங்கூதுவோன் சங்கின் அடிப்புறத்தை வாயினில் வைத்து ஊதுவது வழக்கம். வண்டு மல்லிகை அரும்பின் மேற்புறத்தில் மொய்க்கின்றதே அல்லால் அடிப்புறத்தில் அல்ல. ஆதலால் 'இத்தகைய கற்பனை குற்றமுடையது' என்று ஒட்டக்கூத்தர் எடுத்துரைத்தார். உடனே புகழேந்தியார் மதுவருந்தியவனுக்கு மேற்புறம் எது, கீழ்ப்புறம் எது என்று கண்டுபிடிக்கும் அறிவு ஏது? அங்ஙனமே மதுவருந்தி மாந்திக் கிடக்கும் மதுகரத்திற்கு மேல், கீழ் என்றறியும் மதி இருக்குமோ? என்று கூறி ஒட்டக் கூத்தரின் வாயையும் தருக்கினையும் அடக்கினர். அவையோரும் புகழேந்தியாரின் கற்பனைத் திறனைப் பாராட்டினர்—சர்மா.

தீபத் திருமகள்!

கவிஞர் - தமிழழகன்

தீபத் திருமகள் வந்துவிட்டாள்;—அங்கு
தெய்வநற் சன்னதம் தந்துவிட் டாள்!
பாபத் தவிப்பினைப் போக்கிவிட் டாள்;—பசி.
பஞ்சம் அனைத்தையும் நீக்கிவிட் டாள்! (1)

செஞ்சுடர்ச் சோதியை வீசிவிட் டாள்;—அதன்
சித்திரப் பொற்கரத் தாசி யிட்டாள்!
ஐஞ்சுடர்க் கண்ணால் அருள்விரிந் தாள்;—அவள்
ஆனந்த தேனுகப் பூச் சொரிந் தாள்! (2)

வானிலும் தீப வரிசையிட்டாள்;—அங்கு
வைர மணியாம் பரிசையிட் டாள்!
நானெனும் பொய்யையும் சாய்த்து விட்டாள்;—நம்வாழ்
நாளும் விழாவென்றே வாழ்த்திவிட் டாள்! (3)

உள்ளும் புறமும் உவந்திருப் போம்;-கைகள்
ஓங்க அவள் முன் குவிந்திருப்போம்!
அள்ளும் கருணை யமைதியிலே-இங்கவ்
அன்னையின் நாடகம் கண்ணுறு
வோம்! (4)

சினம் தணிந்த செஞ்சடையான்!!

எஸ். எஸ். எஸ்.

★

தேவர்கள் அனைவரும் வணங்கும் சிறந்த தேவனாக விளங்குவதால் மகாதேவன் என்றும், எப்பொழுதும் மங்களத்தையே அளிப்பதால் சதாசிவன் என்றும், அனைவருக்கும் நன்மையை அளிப்பதால் சம்பு என்றும், எல்லார்க்கும் முதல்வனாதலால் ஆதிதேவன் என்றும், ஜீவர்களுக்குத் தலைவனாதலால் பசுபதி என்றும், என்றும் நடம் புரிவதில் ஒப்பற்றவனாதலால் நடராசப்பெருமான் என்றும் – பல காரணப்பெயர்களைப்பெற்று விளங்கும் கூத்தப் பெருமானாகிய ஆடல் இறைவன் ஆன்மாக்கள் அனைத்தும் அறியாமை அகன்று உய்யவே அனவரதமும் ஆனந்த தாண்டவம் புரிகின்றான். அவிர்சடையான் நடம்புரியத் தொடங்கியதற்கு ஒரு சிறு வரலாறும் உண்டு. ஒரு சமயம் காளிதேவி பூதங்களையும் பேய்களையும் படைத்து அவற்றுடன் சேர்ந்து தாருகாசுரனை வதம் செய்தாள். அசுரனைக் கொன்றும்கூட அவள் சினம் தணியவில்லை. சினத்தீ சொலித்தது. அதனால் அனைவரும் அஞ்சினர். உலகமே நடுங்கியது. அமரர்கள் சிவபெருமானைச் சரணடைந்தனர். அவர் காளியின் அருகே சென்று குழந்தை வடிவில் தோன்றி அழுதார். காளிதேவி இரக்கங்கொண்டு பால் கொடுத்தாள். சிவபெருமான் மகிழ்ச்சியடைந்தார். காளியை மகிழ்விக்க ஆடினார். அவர் தாண்டவத்தைக்கண்டு பூதங்களும் பேய்களும் ஆடின. காளிதேவியும் ஆடினாள். மானவரும், தானவரும். வானவரும் ஆடினர். அனைவரும் ஆடினர். உலகமே ஆடியது. அதுமுதற்கொண்டு ஆடலழகனாகிய அவிர்சடைக் கடவுள் நாடோறுமே ஆடுகின்றார். அதனால் துன்பங்கள் அனைத்தும் அகலுகின்றன. சக்தியும் ஆட்டத்தில் பங்கு கொண்டு ஒருமுறை ஆடியபோது சிவதாண்டவம் உக்கிரமாக மாறியது. பராசக்தி பயந்தாள். பரம்பொருளின் பாத கமலங்களில் மலர்தூவி பற்றி அருள்புரியமாறு வேண்டுகின்றாள். கூத்தப் பெருமானும் களிப்படைகின்றான். அனைவரும் ஆனந்தமடைகின்றனர். —(சர்மா)

For

QUALITY DIAMONDS

&

NOVEL JEWELLERY

★

SURAJMAL'S

MADRAS-1.

★

Phone 21650 Grams: MORALITY.

திருப்பாவையின் திருப்பணி

எஸ்.எஸ்.சர்மா

உலகில் செயற்கரிய சிறந்த செயல்கள் பல வற்றைச் செய்யும் திறன் சிலருக்குத்தான் உண்டு. நம் நாட்டில் அரும்பெருந் திருப் பணிகள் பல செய்து நற்புகழெய்திய சான்றோரைப்பற்றி நாம் கதை கள் வாயிலாக அறிகின்றோம். அத்தகைய நற்றொண்டுகளில் முக்கியமானவை ஆலயங்கள் எழுப்புதல், அன்ன சத்திரங்கள் அமைத்தல், கலைக்கூடங்கள் நிறுவுதல், ஒப்பற்ற நூல்கள் இயற்று தல் முதலியவையாகும். அவற்றுள் முன்னோர் இயற்றிய சிறந்த நூல்களில் அடங்கிய உண்மைகளைப் பல மக்கள் அறியுமாறு செய்வதும் ஒரு நற்றொண்டுதானே!

பல்லாண்டுகளுக்கு முன் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியின் திருப்பாவையை ஏற்றுக்கொண்டார் எம்பெருமான். உலகம் உய்ய, பாவை நோன்பு நோற்கும் முறையினையும் அதன் பயன்களையும் தமதுநூலில் வெளியிட்டுள்ளார் ஸ்ரீ ஆண்டாள். அத்தகைய நோன்பு நோற்பதற்கு ஏற்ற காலம் மார்கழித் திங்களென வருணிக்கப்பட் டுள்ளது. மாதங்களுள் சிறந்தது மார்கழி மாதம் என்பதையும் 'நானே அந்த மார்கழி மாதமாக விளங்குகிறேன்' என்பதையும் கணணபிரான் கீதையில் எடுத்துரைக்கின்றார். பகவானுக்குமிகவும் பிடித்த மான மாதம் என்பதைஎண்ணித்தான், அன்று ஆண்டாள் தமதுதோழிகளுடன் மார்கழியில் நோன்பு நோற்று மாயோனை மகிழ்வித்தாள் அன்றோ?

பைந்தமிழினை வளர்த்துப் பாரினில்பல் புகழ்பெற்ற பாண்டிய நாட்டின் பழம்பதியெனச் சிறப்பிக்கப்பெற்ற ஸ்ரீவில்லிப்புத்தூரிலே, பன்னிரு ஆழ்வார்களுள் பெருமை வாய்ந்த பெரியாழ்வார் பெண் ணாக விளங்கிய ஆண்டாள், திருமாலை இடைவிடாது நினைந்து அவரது திருவிளையாடல்களை எண்ணி எண்ணி மனம் உருகி உலகம் உய்யும் பொருட்டுக் கண்ணபிரானுக்குச் சூட்டிய பாமாலையே திருப் பாவையாகும்.

முப்பது பாடல்களைக் கொண்ட திருப்பாவை நூலினை மார்கழித் திங்களிலே விடியலில் பாராயணம் செய்யும் பக்தர்கள் பெரும் பய னடைவர் என்பதைப் பல நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய திருப்பாவையில் அடங்கிய பாடல்கள் அனைத்துமே தித்திக்கும் தேன் மொழியாகிய தமிழ் மொழியிலே பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப் பட்டவை.

அன்று சூடிக்கொடுத்த சுடர்க்கொடி பாடிக்கொடுத்த திருப்பாவையின் உண்மைக் கருத்துக்களை, இன்று மக்கள் அனைவரும் தெளிவாக அறிந்துகொள்ளும் வகையில் அத்திருப்பாவையையே ஆடிக்கொடுக்கும் ஆடலழகியின் திருப்பணிச் சிறப்பினை அறியாதார் யார்? ஆடிக்கொடுத்த நாச்சியார் "வைஜயந்திமாலா" அவர்கள் தமது அபிநயங்களின் மூலம் பாடல்களின் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக் காட்டும் முறையே சிறந்த முறையாகும். அதனை யாருமே மறக்க வியலாதன்றோ! ஆடற்கலையில் ஈடிணையற்று விளங்குவதனாலே பாரெங்கும் புகழ்பெற்ற வைஜயந்திமாலா அவர்களின் எண்ணிலடங்கும் இலட்சியங்களுள் ஒன்றே இத்திருப்பாவைத் திருப்பணியாகும். ஆண்டாள் வேடத்திலே அற்புதமாக நடனமாடும் வைஜயந்திமாலா அவர்களைக் கண்ணுறக்காணும் மக்களுள் சிலர் ஆண்டாளே வைஜயந்திமாலாவாக அவதரித்துள்ளார் என்றும், மற்றும் சிலர் அன்று நாம் பார்த்திராத ஆண்டாளைத் தற்பொழுதுபார்க்கிறோம் என்றும், மனமாரக்கூறுவதை நாம் கேட்டிருக்



பெங்களூரில் நடந்த உயர்திரு. விச்வேஸ்வரய்யாவின் நூற்றாண்டு விழாவின் போதுவைஜயந்தி மாலா அவர்களின் "திருப்பாவை" நடனம் நடைபெற்றது. அச்சமயம், நிஜலிங்கப்பா, ஹுமாயுன் கபிர் நேருஜி—மைசூர் கவர்னர் டி. வி. எஸ். உயர்திரு. ராஜம் முதலியோர் திருப்பாவையைக் கண்டு ரஸிக்கின்றனர்.

கிறோம். இங்ஙனம் தமது இலட்சியங்களுள் ஒவ்வொன்றையும் சிறந்த முறையில் வைஜயந்திமாலா அவர்கள் நிறைவேற்றி வருகின்றார். பலர் பல காரியங்களைச் சாதிக்க வேண்டுமெனத் திட்டம் திட்டுவர். திட்டங்கள் பல இருக்கலாம்; ஆனால் ஒன்றுகூட நன்கு நிறைவேறாமல் அல்லற்படுவோர் பலர் உண்டு. ஆனால், வைஜயந்திமாலா, அவர்களின் குறிக்கோள்களுள் எதுவுமே நிறைவேறாமல் நின்றதில்லை. நிறைவேற்றும் முறையும் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தது என்று கூறுவதும் மிகையல்ல. இலட்சியங்கள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக இங்ஙனம் வெற்றியடைவதற்கு இவரது போஷகராகிய திருமதி யதுகிரி தேவியாரின் அறிவுரையும், அதனை வைஜயந்திமாலா அவர்கள் பின்பற்றுதலுமே காரணமாகும். திருமதி யதுகிரி தேவியார் அவர்கள் மிகுந்த அனுபவமும், ஆழ்ந்த அறிவுத் திறனும், எடுத்த காரியத்தைத் திறம்பட முடிக்கும் வல்லமையும் பெற்றவர். திருப்பாவைப் பாடல்கள் அனைத்துமே அவருக்கு மனப்பாடம். இறைவனிடத்தில் எல்லையற்ற பக்தியுடையவர். இத்தகைய சிறப்புக்கள் அனைத்தும் பொருந்திய திருமதி யதுகிரி தேவியாரின் அனுபவம் கலந்த ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு திருப்பாவைப் பாடற்கருத்துக்களை அபிநயத்தின் மூலம் மக்கள் உள்ளங்களில் என்றும் நிலவும்படியாகப் பதியவைக்கும் வைஜயந்திமாலா அவர்களின் திருப்பாவையின் திருப்பணிச் சிறப்பினை அனைவருமே அறிந்து வாயார வாழ்த்துகின்றனர். அன்று ஆண்டாள் சூடிக்கொடுத்த நாச்சியார் எனப் பாராட்டப் பெற்றார். இன்று. வைஜயந்திமாலா அவர்கள் ஆடிக்கொடுத்த நாச்சியாராகவே அமைந்துவிட்டார் என்று மீண்டும் கூறுவது மிகையாகாது! இவரது திருப்பாவையின் நாட்டிய நாடகத்தின் சிறப்பினைக் கேட்டு ஆங்காங்கு "திருப்பாவை நடனமே" எங்களுக்கு வேண்டும்என்று கேட்க ஆரம்பித்துவிட்டனர் — ஐந்நூறு இடங்களிலே திருப்பாவை நாட்டியமே நடந்தது— ஆண்டாள் வேடத்திலே இவர் அழகாக அபிநயத்தின் மூலம் திருப்பாவையைச் சிறப்பித்த இடங்கள் படங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளன



திருப்பாவையின் அரங்கேற்றம் கலா மண்டபத்தில் பார்த்தஸாரதி ஸபையின் ஆதரவில் நடைபெற்றது. அவ்வமயம் கனம் மந்திரி ஸி. சுப்ரமண்யம் அவர்கள் தலைமை தாங்கினார்.

தி. நகர் கிருஷ்ணகான சபா ஆதரவில் நடந்த திருப்பாவை நடனத்திற்கு மத்திய அரசாங்க மந்திரி டாக்டர் உயர்திரு சுப்பராயன் அவர்கள் தலைமை வகித்தார்:

★

இது தவிர மதருஸ் கலாநிகேதன் ஆதரவிலும். ரஸிக ரஞ்சனி சபை ஆதரவிலும் "திருப்பாவை நடனங்கள் நடைபெற்றன, "திருப்பாவையை "நாட்டிய மூலம் செய்து காண்பித்த குமாரி வைஜயந்தி மாலா அவர்கள் மேன்மேலும் பல நாட்டிய நாடகங்கள் செய்து காண்பிக்க இறைவன் அருள்புரியட்டும்.



(புகைப்படங்கள் : சாமி)

ஆலய வழிபாடு

உலக வாழ்வு என்பது ஒரு பெருங்காடாகும். அக்காட்டில் இன்பக் கனிகளுடன் துன்பம் தரத்தக்க எட்டிக்காய்களும் உண்டு. இன்பக் கனிகளுடன் எட்டிக்காய்கள் கலந்திருக்கின்றன என்பதை அறியாது அவற்றையும் பறித்துச் சாப்பிட்டு வேதனை அடைகின்றான் மனிதன். சிற்றறிவுபெற்ற மனிதனுக்குப் பேரறிவு பெற்ற ஞானிகளின் தொடர்பு கிட்டுவதில்லை. எல்லோரும் குருடர்களாயிருப்பதால் குருடனுக்குக் குருடன் வழிகாட்ட முடியுமா? தெளிந்த ஞானிகள்தான் உதவி செய்யக் கூடும். அத்தகைய ஞானிகளின் தொடர்பைப்பெற இயலாவிடினும் ஞானிகளின் உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட அருள் வாக்குகளையாவது கடைப்பிடிக்க வேண்டும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதனும நமச்சிவாயவே

உள்ளம் ஒன்றுபட்டு உருக்கமான பாடல்களைச் சொல்லிக் கண்ணீர் விட்டு ஆண்டவன் முன்னே வழிபடுவோரை நல்லநெறிக்கு அனுப்புவது 'நமச்சிவாய' என்ற பஞ்சாட்சரமேயாகும். நமது முன்னோர்கள்

எஸ். எஸ். சர்மா

ஆன்மா கடைத்தேறப் படிப்படியான பயிற்சியை அமைத்திருக்கிறார்கள். உலக இன்பங்களிலே மூழ்கித் திளைக்கும் ஆன்மாவைத் திடீரென்று ஆன்மலயத்தில்சேர்ப்பதென்றால் கடினமல்லவா? அதற்காகவேபாமரனும் மேனிலைபெற ஆலய வழிபாடு என்று அமைத்துள்ளனர். ஆலய வழிபாடு அதிகரித்துவிட்டால் ஆன்மா இறைவனுடன் தானாகவே லயமாகி விடும்.

'ஆலயம்' என்பதற்கே பொருள் என்ன? (ஆ = லயம் = ஆ) ஆன்மாவை, லயம் = லயப்படுத்துதல் (ஒன்று படுத்துதல்) பரம்பொருளுடன் ஆன்மாவை ஒன்றுபடுத்துதற்கு ஏற்றஇடமே ஆலயமாகும்.

தேவர், மனிதர், விலங்கு, பறப்பவை, ஊர்வன, நீர்வாழ்பவை, தாவரம்—என்னும் எழுவகைப் பிறவிகளுள் மனிதப்பிறவியே சிறந்தது என்றனர் ஆன்றோர். முத்தி நிலை பெறுவதற்கு மனிதப் பிறவியில் தான் இயலுமாம். இன்பம் அனுபவிக்கப் பிறக்கும் பிறவிதான் தேவ பிறவி. இன்பமும் துன்பமும் கலந்தபிறவி மானிடப்பிறவியானதாம், இன்பமும் துன்பமும் தாண்டிய நிலையினைப் பெற்றுவிட்டால் முத்தி நிலை பெறக்கூடும்.

'எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிதுகாண்; இப்பிறவிதப்பினால்
எப்பிறவி வாய்க்குமோ. ஏதுவருமோ அறிகிலேன்.

என்றார் தாயுமானவர். கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை நாம் பயன் படுத்திக் கொள்ளாவிடில் கைக்கு எட்டி வாய்க்கு எட்டாத நிலை போலத் தான் ஆகிவிடும்.

'முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும்
முடிவில் ஒரு பிடி சாம்பராய் வெந்து மண்ணுவதும்'

என்பதைக் கண்டும் நமக்கு அறிவு ஏற்படவில்லை யென்றால் அது நம்முடைய தீவினைப் பயன் என்றுதான் கூறவேண்டும்.

ஈக்களில் இரண்டுவகையுண்டு. ஒன்று தேனை மட்டும் பருகும்; மற்றொன்று எந்த அசுத்தமான பொருள் மீதும் உட்காரும். அதேபோன்று மனிதர்களாகிய நாமும் இரண்டுவகைப் படுகிறோம். குடும்பப் பொறுப்புடன் வழிபாட்டு முறையையும் கடைப்பிடிப்பர் ஒரு சாரார்; மற்றொரு சாரார் உலக இன்பங்களிலேயே இடைவிடாது ஈடுபட்டுக் கொண்டிருப்பவர். உலகப்பற்று மிக்குச் சென்றால் அமைதியற்ற வாழ்விலேயே இறுதிவரைகழிக்கவேண்டியதுதான். நம்முன்னோர்கள் நம் உடலின் கண் எப்பொழுதும் ஆனந்த வடிவமாய்த் திகழ்ந்துகொண்டிருக்கும் ஆன்மாவை உணர்ந்து இன்பம் பெற ஆலயவழிபாட்டை எப்படி அமைத்திருக்கிறார்கள் பார்ப்போம்;

கோபுரம், பலிபீடம், கொடிமரம், பஞ்சபிராகாரங்கள், நந்திபீடம் துவார பாலகர்கள், சுவாமி சந்நிதிகள், மூலஸ்தானம் இப்படியெல்லாம் அமைத்திருப்பதன் உட்கருத்தை ஆராய வேண்டும்.

ஆலயத்தையே நமது உடலாகக் கற்பனை செய்து கொள்வோம். முதலில் உடலின்கண் திகழும் ஆன்மாவை அறிவதற்கு வழி.

முதலில் ஆலயத்தில் திகழும் இறைவனைக் கண்டால் போதும். அந்தப் பயிற்சியே நமக்கு ஒரு புத்துணர்ச்சியை நாளடைவில் உண்டாக்கும்.

நம்முடைய உடலின் உறுப்புக்களைக் காண்போம். கோபுரம்—பாதம், பலிபீடம்—உந்தி. கொடி மரம்—ஹிருதயம், நந்தி பீடம்—கழுத்து துவாரபாலகர்கள்—மூக்குத்துவாரங்கள், விநாயகர் சந்நிதி—வலக் கண், சுப்பிரமணியர் சந்நிதி—இடக் கண், தக்ஷிணாமூர்த்தி சந்நிதி—வலக் காது, சண்டேசுரர் சந்நிதி—இடக் காது, பஞ்சபிராகாரங்கள்—பஞ்ச கோசங்கள், சிவலிங்கம்—ஆன்மா,...'காயமே! கோயில்' என்று கொண்டால் இம்முறையில் கொண்டு வழிபடவேண்டும்.

'ஆலயம்' என்பது அவசியந்தானா? என்று கேட்டால் முதலில் பாமரனுடைய உள்ளத்திற்கு மிகவும் இன்றியமையாததாயிருக்கிறது. எங்கும் பரவியிருக்கும் பரம்பொருளை ஒரு குறிப்பிட்ட இடமாகிய ஆலயத்தில் இருப்பதாக நம் முன்னோர் ஏன் ஏற்படுத்தினர் என்றால், பல ஆசைகளில் அலைப்புண்ட உள்ளம் 'ஒருமுகப்படுவதற்குத்தான்.

நிலத்தின் அடியில் எங்கும் தண்ணீர் பரவியிருப்பினும் பொது மக்கள் அதைப்பெற, கிணறு அவசியமாயிருக்கிறது அல்லவா? அதே போன்று பாமரமக்களுக்கும் ஆலயம் மிகத் தேவையாயுள்ளது.

எங்கும் பரவியிருக்கும் பரம்பொருளுக்கு விக்கிரகம் அவசியம்தானா வென்றால் அதுவும் மிகவும் முக்கியமாயிருக்கிறது. ஆண்டவன் அருளாகிய நெருப்பைப் பெறுவது எப்படி? ஒன்றோடு மற்றொன்றை உராய்ந்தால்தானே கனல் உண்டாகும். அதேபோல நமது உள்ளத்தையும் விக்கிரகத்தையும் உராய்ந்தால்தான் ஆண்டவன் அருள் கிடைக்க

பெறும். உராய உராயக் கனல் அதிகமாவது போல் கண்ணீர் பெருகப்பெருக அருள் மிகுதியாகும். பஞ்சாகிய நமதுள்ளத்தில் ஆண்டவன் அருளாகிய கனல்பற்ற, இடையில் விக்கிரகமாகிய ஒரு கருவி தேவையாயிருக்கிறது. பசுவின் உடலெங்கும் பால் பரவியிருந்தாலும் அதைப்பெறுவதற்கு ஒரு வடிவம் தேவையாயிருப்பது போன்று ஆண்டவன் அருளை அடைய இடையில் விக்கிரகம் சிறப்பாக வேண்டியுள்ளது. பாலினுள்ளிருக்கும் நெய்யை உடனேயே பெற்றுவிட முடியுமா! தயிராகத் தோய்த்துத்தானே பெறவேண்டும். எவ்வளவு முறை மத்து கொண்டு கடைய வேண்டியிருக்கின்றது? அது போன்று கோயிலுக்குச் சென்று விக்கிரகத்தைக் கண்ட மாத்திரத்தில் அருளைப் பெற்றுவிட முடியுமா? 'காதலாகிக் கசிந்து கண்ணீர்விட வேண்டாமா? அதற்கேற்ற இடம் ஆலயம்தானே? ஆலயம் சென்றால் உள்ளம், வேறு எதையும் நினைக்கக்கூடாது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆண்டவன் அருளைப்பெற எங்கெங்கெல்லாம் சுற்றி எப்படியெல்லாம் துன்புற்றிருக்கிறார்கள் பாருங்கள்! அவர்கள் யாவரும் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை வீணாக்கிக் கொள்ளாது பயன் படுத்திக் கொண்டு நம்மைப் போன்றவர்களுக்குச் சேமநிதியும் கொடுத்துச் சென்றனர் அல்லவா!

அச்சேமநிதியைக் காப்பாற்ற வேண்டியது நம் கடமையாகும்.

ஆலயத்திற்குச் செல்லும்போது நாம் எப்படிச் செல்லவேண்டுமென்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உடலினை நன்கு சுத்தம் செய்துகொண்டு உலர்ந்த ஆடை உடுத்து அவரவர் சமயச் சின்னங்களை அணிந்துகொண்டு 'ஓம் நமச்சிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரத்தை ஜபித்துக்கொண்டும் 'ஓம் நமோ நாராயணாய' என்ற அஷ்டாட்சர மந்திரத்தை ஜபித்துக்கொண்டும் செல்ல வேண்டும். கோயிலின் உள்ளே செல்லும்போது மீண்டும் கைகால்களைச் சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இரண்டு கைகளையும் தலைமேற் குவித்து ஒருமுகப்பட்ட உள்ளத்துடன் கோபுர தரிசனம் செய்துவிட்டு உள்ளே நுழைவோம். யாவரும் ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு உள்ளே செல்வோம்.

நாம் செய்த தவற்றினை ஒப்புக்கொண்டு நம் வாழ்நாளை இனி ஒவ்வொரு கணமும் ஆண்டவனைக் காணுதல், பேசுதல் முதலிய தொழில்களிலே செலுத்துவோம்.

'எள்ளுக்குள் எண்ணெய் போல்
எங்கும் வியாபகமாய்
உள்ளவொன்றை உள்ளபடி
ஓரும் நாள் எந்நாளோ?'— என்று கதறுவோம்.

தற்பொழுது கோயிலினுள்ளே பலி பீடத்தருகே வந்து விட்டோம். ஆண்டவன் முன்னே, காமம், வெகுளி முதலிய அறுவகைக் குற்றங்களையும் பலியிட்டதாகச் சொல்லிக் கொண்டு கொடிமரத்தை உற்றுநோக்குவோம். கொடிமரம் செங்குத்தாக நிற்பது தெரிகிறதல்லவா? அதே போன்று நமது உள்ளத்தினையும் ஆடாது அசையாது செங்குத்தாக

நிறுத்துவோம். இறைவனை அடைந்தவர் அழிவற்ற ஆனந்தத்தில் நிலைத்திருப்பர் என்பதை நினைவுபடுத்திக் கொள்வோம். ஆண்களாயிருப்பின் அஷ்டாங்க நமஸ்காரம் செய்யவேண்டும். தலை, செவியிரண்டு, கையிரண்டு தோள்களிரண்டு. மோவாய்க்கட்டை ஆகிய எட்டு அவயவங்களும் பூமியில் படும்படி வணங்கவேண்டும். பெண்களாயிருப்பின் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யட்டும். தலை,கையிரண்டு, முழந்தாளிரண்டு ஆகிய ஐந்து அவயவங்களும் பூமியில் படும்படி வணங்கட்டும். வணங்கும்போது வாயை மூடிக்கொண்டிருக்கலாமா! ஏதாவது தோத்திரம் சொல்ல வேண்டும்.

பிராகாரங்களை யெல்லாம் சுற்றி வருவோம். விநாயகர் சந்நிதிக்கு வந்துவிட்டோம். இவருடைய அருள் இல்லாவிட்டால் எந்தச் செயலையும் செய்ய முடியாது.

வலக்கையை இடக்கையின் முன்னே வைத்து வலக்கையால் இடப்புறத்திலும் இடக்கையால் வலப்புறத்திலும் தலையில் படும்படி மூன்று முறை குட்டுகள் போட்டுக்கொள்வோம். நாம் செய்த பிழைகளை இவரிடம் சொல்லி மன்னிப்புக் கேட்கின்றோம். வலக்கையால் இடக்காதையும், இடக்கையால் வலக்காதையும் பிடித்துக்கொண்டு மூன்று முறை தோப்புக்கரணமிடுவோம். விநாயகர் தோத்திரத்தைச் சொல்லுவோம்.

'ஐந்துகரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே'.

நாம் செய்த பாவங்கள் யாவும் தேங்காய் போன்று உருண்டு திரண்டுள்ளன அல்லவா? அவைகள் சிதறட்டும் என்று தேங்காயை உடைப்போம் தேங்காய் தெறித்துப்போய் விட்டதைப் பாருங்கள். அதே போன்று நமது தீவினைகளும் ஆண்டவன் அருளால் தெறித்து விட்டன.

மீண்டும் திரும்பி வந்து கர்ப்பக்கிருகத்திற்குள் நுழைவோம். வாயிற்படியில் நின்று காவல் புரிந்து கொண்டிருக்கும் துவார பாலகர்களிடம் உள்ளே ஆண்டவனைப் பார்க்க அனுமதி கேட்போம். அவர்களும் அனுமதி கொடுத்து விட்டார்கள். உள்ளே செல்வோம். நம் வினைகள் நீங்கவும், நமக்கு ஆண்டவன் அருள் ஏற்படவும் கையில் கொண்டு வந்திருக்கும் அருச்சனைப் பொருள்களைக் கொடுப்போம் அருச்சனை நடைபெறுகிறது.

கர்ப்பூர தரிசனமாகிறது பாருங்கள். கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு ஆனந்தப்படுவோம். விபூதி பிரசாதம் பெற்றுக்கொள்வோம். கண்களில் கர்ப்பூரத்தை ஒற்றிக்கொண்டு ஆன்ம தரிசனம் செய்துவிட்டு வெளியே வருவோம்.

தட்சிணாமூர்த்தி சந்நிதி வந்து விட்டோம். கல்லாலின் கீழ் சனகாதி முனிவர்களுக்கு உபதேசம் செய்த புண்ணிய குருமூர்த்தி அல்லவா! சுட்டுவிரலைப் பெருவிரலுடன் சேர்த்து மற்றைய மூன்று விரல்களையும் அகலவிட்டுக் காட்டும் சின் முத்திரையைக் காணுங்கள். ஆணவம், கன்மம், மாயை என்ற மூக்குற்றங்களையும் அகற்றி இறைவனை அடைய வழிதேடு, என்று உபதேசிக்கிருர் பாருங்கள். நமக்கு நல்லுரை பகரும் குருவானதால் வழிபாடு செய்வோம்.

அடுத்தாற்போல முருகன் சந்நிதானம் வருவோம். ஆறுமுகங்கள், பன்னிரு கரங்களுடன் வள்ளி தெய்வயானை வடிவேலுடன் மயில்மீது காட்சியளிக்கிறார் பாருங்கள். வள்ளி தெய்வயானை வடிவேல் மூன்றும் இச்சா சக்தி, கிரியாசக்தி ஞானசக்தி என்பவற்றைக் குறிக்கின்றன. சிவபெருமானுடைய ஆறு குணங்களும் ஆறுமுகங்களைக் குறிக்கின்றன. இவர் முன்பு தோத்திரம் சொல்லுவோம்.

பிறகு சிவலிங்க தரிசனம் செய்வோம்; அத்துடன். அம்பாள் தரிசனமும் செய்வோம் சிவலிங்க அமைப்பை உற்றுப்பார்க்க வேண்டும். அடிப்பாகத்திலே உடுக்குப் போன்ற பீடமும் மேலே உருண்டு திரண்ட நீண்ட முனையில்லாத லிங்கமும் தென்படுகின்றது. ஆவுடையின் மீது அமைக்கப்பட்டுள்ளது லிங்கம். சக்தியும் சிவனும் ஒன்று என்பதைக் காட்டுகிறது. இரண்டையும் பிரிக்க வியலாது என்பதும் புலப்படுகின்றது. லிங்கம் சிவத்தையும் ஆவுடை சக்தியையும் குறிக்கின்றது. ஆவுடையின் மேற் பாகத்தில் 'கோமுகி' வெளியே நீண்டிருப்பது, சிவசக்தி, உயிர்களுக்கு அருள் செய்வதைக் காட்டுகின்றது. சிவலிங்கத்தின் முன்னே நந்தி அமைந்திருப்பதைக் காண வேண்டும். பரம்பொருளுடன் ஆன்மா ஒன்றுபட சத்துவகுணம் உதவி செய்வது போல் சிவனருளைப் பெற நந்திதேவர் உதவி செய்கிறார் என்று கொள்ள வேண்டும்.

சிவலிங்க தரிசனம் செய்துவிட்டு அம்பாள் தரிசனமும் செய்துவிட்டு சண்டேசுரரிடம் நாம் கோயிலுக்கு வந்ததையும் அவருக்கு இறைவன் அருள் செய்வதுபோல் நமக்கும் அருள் செய்யவேண்டும் என்பதையும் தெரிவிப்போம்.

நெற்றியில் குங்குமமிட்டுக்கொண்டு சண்டேசுரர் சந்நிதிக்கு வந்துவிட்டோம். இவர் எப்பொழுதும் சிவத்தியானத்திலேயே இருப்பவர். சிவத்தியானத்திலிருக்கும் இவரை மூன்று முறை கையால் கொட்டிச் சிவதரிசன பலனை இவரிடம் வேண்டிக்கொள்வோம்.

இவரை நாம் வழிபட்டதற்கு அடையாளமாக நூலைப் போட்டுவிட்டு வந்து விடுவோம். மனித வாழ்வுக்கே முக்கியமான நவக்கிரகங்களை வழிபட வருவோம்.

நம் வாழ்விலே நல்லபலனைப் பெறவேண்டுமானால் இவர்களின் அருள்தான் மிகவும் வேண்டற்பாலது. நாம் பிறந்த காலம் முதற்கொண்டு நம்மை விடாது தொடர்ந்துகொண்டிருப்பவர்கள் இவர்களே.

சிவதரிசனம் செய்துவிட்டு வந்துள்ளபடியால் நவக்கிரகங்களும் நமக்கு அருள் செய்துவிடும் என்பது கருத்து. நேரம் கடந்துவிட்டபடியால் ஆண்டவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு திரும்புவோம்.

மீண்டும் கொடிமரத்திற்குச் சற்று தூரம் விலகி நிற்போம். மூலமந்திரத்தை நூற்றெட்டு முறை சொல்வோம். சற்று நேரம் தியானத்தில அப்படியே ஆழ்ந்துவிடுவோம். மீண்டும் எழுந்து வணக்கம் செலுத்திவிட்டு நடராஜர் சந்நிதியை வலம்வந்து எதிரே நின்று அவர் கோலத்தைப்புகழ்ந்து பாடி அம்பாள் சந்நிதானம் வந்து தரிசனம் செய்வோம்.

இனி வீடு திரும்புவோமா? வீட்டிலிருந்து கொண்டே ஆலய வழிபாடு செய்துவிட்டோம் இத்தீபாவளிப் பண்டிகையில்.

மிட்டாய்கள்

Nutrine

சுவை மிகு நியூட்ரைன் டாபிகள்

நீங்கள் ஆசையுடன் வைத்துக்கொள்ள விரும்பும்
அழகான டின்களில் கிடைக்கின்றன.

நியூட்ரைன் டின்களில் நிறைய **டாபிகள்** கிடைக்கின்றன.

காரணம் டின் முழுவதும் டாபிகளால் நிரப்பப்படுகின்றன.
அரைகுறையாக நிரப்பப்படுவதில்லை.

நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி (பி) லிட்,
சித்தூர், ஆந்திர பிரதேசம்

தீபாவளி தின வாழ்துக்கள்

விருந்தளிப்பதில் இணையற்றவள்

சாமிஸ் காபி

விருந்தளிப்பதில் பெயர் பெற்ற குடும்பத் தலைவிகள், எல்லாவிடங்களில் இதையே விரும்புகின்றனர். அபூர்வ ரகத்தைச் சேர்ந்த இவை சகலருக்கும் வேண்டிய தரங்களில் கிடைக்கும்.

வறுக்காதது. வறுந்தது. பொடி

சாமிஸ் காபி
மான்யுபாக்சரிங்
கம்பெனி
சென்னை-1.
போன் : 3637

Deepavali Greetings!

★

Premier Insurance Co., Ltd.,

★

Largest motor Insurance Co., of South India

★

Yearly Premium Income Exceeds Rs. 17,00,000.

No. of Vehicles Insured Exceeds 40,000

★

289, THAMBU CHETTY STREET, MADRAS-1

Phone { Shoow Room : **2002** / Residence 61725 — Post Box 1625 — **Grams** "NATHELLA"

DEEPAVALI GREETINGS



Fashionable
GOLD Jewellery
Variety of
Latest
designed
Gem - Setted
Jewellery

Silver-Trophies
Cinema Shields
Water - Drums
a numb er of
attractive
articles

Please pay a visit to our Showrooms

NATHELLA SAMPATHU CHETTY & SON,

177, N. S. C. BOSE ROAD, MDRAS-I.

9005 அடி உயரத்திலே என் பயணம்!

★ பிலோ இருதயநாத் ★

இந்தியாவில் புண்ணிய தீர்த்தங்களும், முக்தி அளிக்கும் க்ஷேத்திரங்களும், இன்பக் கோலட இடங்களும் இருக்கின்றன. இவ்வகை இடங்களுக்கு யாத்திரை செய்வதால் தூய்மை எய்துவதோடு தேச சரித்திரத்தையும், பழம் பெருமைகளையும், விலைமதிக்க முடியாத சிற்பம், சித்திரம் முதலிய பல்வேறு கலைகளின் சிறப்புக்களையும் ஒருவன் அறியக் கூடும். ஆகையால் இத்தகைய பிரயாணங்களை நாம் அடிக்கடி மேற்கொள்ள வேண்டும். அதையொட்டி நான் கோடையில் நீலகிரிக்குச் சென்றேன்.

இரயில் வண்டி சென்னையை விட்டு வெகு தூரம் ஓடியது. 'தொண்டையப் பாளையம்' ஸ்டேஷனைத் தாண்டியதும் எல்லா வீடுகளும், கோயில்களும், பாறையினால் கட்டப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் எங்குச் சென்றாலும், கோவில்களைக் காணலாம்.

பாறைகள் காட்டில் ஏன் வீணாக இருக்க வேண்டும் என்று திருப்பூருக்கு அருகில், 'தனலக்ஷ்மி மில்லை' பாறைக் கற்களைக் கொண்டே கட்டி இருக்கின்றனர்.

மேட்டுப் பாளையம் ஸ்டேஷனில் வண்டி நின்றது இது சமுத்திர மட்டத்திற்கு மேல் 1069 அடி உயரத்திலிருக்கிறது. இங்கிருந்து வண்டி மேடான இடத்தில்தான் போக ஆரம்பித்தது. நீலகிரி வண்டிகள் லாரியின் பின் பாகத்தை மேல் பகுதியில் மூடி இருப்பது போல் இருக்கின்றன. இதற்குத் தனி ஜன்னல்கள் கிடையா. இரண்டு பக்கங்களும் திறந்து இருக்கின்றன. மழைக்கு உபயோகிக்க, 'கித்தான்' துணி மறைப்புகள் இருக்கின்றன சாமான்கள் வைப்பதற்குப் பெரிய இடங்கள் கிடையா. எவ்வளவு லேசாக வண்டியை ஓட்ட முடியுமோ அவ்வளவு லேசாக ஓட்டுகின்றனர். இரயிலுக்குப் பின்னால்தான் இஞ்சின் பூட்டி இருக்கிறது.

கல்லார் ஸ்டேஷனுக்கு அருகில் எங்குப் பார்த்தாலும் பாக்குத் தோப்புகளைக் காணலாம். கல்லார், சமுத்திர மட்டத்திற்கு 1250 அடி உயரம். இந்த ஸ்டேஷனில் தான் இரயில் வண்டியின் தண்டவாளத்திலிருக்கும் 'பல் சக்கரத்தை வண்டியுடன் இணைக்கின்றனர். வண்டிகள் சரிந்து கீழே விழாத வண்ணம் இங்ஙனம் இணைக்கப்

'மலைவாசிகள் ஆசி பெறுதல்'

படுகின்றன. இந்தப் பல் சக்கரத்திற்கு, 'ராக்வீல்' என்று பெயர். இந்த வண்டியில் ஒவ்வொரு பெட்டியிலும், ஒவ்வொரு, 'பிரேக்ஸ் மேன்' இருக்கிறார் அவர்கள். 'பிரேக்' போட்டாலும் சரி இஞ்சின் டிரைவர் பிரேக் போட்டாலும் சரி உடனே வண்டி நின்று விடும்.

இரயில் வண்டி ஓடும்போதோ 'வண்டித் தொடர்' எப்படி குகைக்குள் போகிறது என்று பார்க்கலாம். குகைக்குள் போவதற்கு முன் இஞ்சின் கூவும். உடனே எல்லா வண்டியிலிருக்கும் பிரேக்ஸ்மேனும் ரைட் என்று கொடியைக் காட்டுவார்கள். இதைப்போல் பதினாறு குகைகளிலும் காட்டப்படுகின்றன. இங்குப்பல இடங்களில் பல நீரோடைகள் ஓடி வரும் காட்சியைக் காணலாம்.

சென்னை இராஜதானியில் சிறப்புற்று விளங்கும் ஜில்லாக்களில் ஒன்றாகும் நீலகிரி ஜில்லா. தூரத்துப் பார்வைக்கு இம்மலை நீலநிறமாய்க்காணப்படுகிறதால் இதற்கு நீல+கிரி என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.

நீலகிரி கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சேருமிடத்திலிருக்கிறது. இந்த ஜில்லாவில் கோடைக்காலம் காற்றுக் காலம், மழைக்காலம் பனிக் காலம் என்ற நான்கு பருவங்கள் உண்டு. மார்ச்சு எப்ரல் மே மாதங்களே வெயில் காலம். அது மக்களுக்கு ஆரோக்கியமான காலம். பல நாடுகளிலிருந்து வந்த மக்கள் அந்த மாதங்களில் இங்குத் தங்குகிறார்கள்.

ஜூன் ஜூலை ஆகஸ்டு மாதங்களில் ஈண்டு பெருங்காற்று அடிக்கிறது. மரங்களும் வீட்டுக்கூரைகளும் சேதமடையும். அப்பொழுது கோடை மழை பெய்வதுண்டு. செப்டம்பர், அக்டோபர் நவம்பர் மாதங்களில் கனத்த மழை பெய்யும். இக்காலங்களில் பயிர்கள் சேதமடைவதுமுண்டு, டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் கடும் பனிக்காலம்.

இந்தமலை ரோடுகளில் பஸ்ஸை மிகவும் ஜாக்கிரதையாகவும், கவனமாகவும் ஓட்டுகிறவர்கள் இங்கு வந்து மோட்டார் ஓட்ட வேண்டுமென்றால் பழகும் வரையில் மிகவும் கஷ்டந்தான் என்று சொல்லுகிறார்கள். இந்தக் குறுகிய சாலையில் பஸ்ஸோ அல்லது காரோ போகும் போது மற்றொரு வண்டி எதிரில் வந்தால் இருவரும் வண்டியை நிறுத்தி முதலில் மேட்டிலிருந்து கீழே வரும் வண்டிக்கு இடங்கொடுத்த பிறகுதான் கீழிருந்து மேட்டுக்குப் போகும் வண்டிபோகிறது.

இந்த டிரைவர்கள் அடிக்கடி வண்டியின் பிரேக் சரியாக இருக்கிறதா? என்று பார்த்துக் கொள்ளுகிறார்கள். இங்கு சாதாரணமாய் இராக் காலத்தில் வண்டிகள் ஓட்டுவதில்லை. சில இடங்களில் பஸ் சுமார் 8 அல்லது 10 மைல்கள் ஓடி இருக்கும். ஆனால் மலையின் உச்சி மாத்திரம் நாம் முன் பார்த்ததைப் போலவேதான் தோன்றும்.

வழிகளில் பஸ்ஸுக்கு அடிக்கடி தண்ணீர் பிடித்து ஊற்றுகிறார்கள். இப்படியேதான் மேட்டுப்பாளையம் தாண்டியதும், அடிக்கடி இரயில் இஞ்ஜினுக்குத் தண்ணீர் பிடித்துக் கொள்ளுகிறார்கள். சாலையில் ஆடு மாடுகள் பஸ்ஸைக் கண்டதும் மிரண்டு ஓடாமல் ஓரமாகவும் வரிசையாகவும் நின்று விடுகின்றன. ஏனென்றால் ஒரு பக்கம் மலை; மற்றொரு பக்கம் பிரம்மாண்டமான பள்ளத்தாக்கு. வேறு வழி கிடையாது. அந்த வழியில் சில சமயங்களில் காட்டுத் தீ பிடித்துக்கொள்வதுமுண்டு.

பண்டையகால மக்கள் நடந்தே சென்றார்களாம். பிறகுதான் டோலியில் தூக்கிச் செல்வதும், மாட்டு வண்டிப் பிரயாணமும் உண்டாயின. அங்ஙனம் பிரயாணம் செய்யுங்காலத்தில் துஷ்டமிருகங்களால் பல ஆபத்துக்களும் ஏற்பட்டன. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் இரயில் வண்டிப் பிரயாணம் உண்டானதாம்.

நீலகிரியில் சிலர் 1924-ஆம் ஆண்டு முதற்கொண்டே பஸ்

வண்டி உண்டானது என்று கூறுவர்.



'மலைமேலுள்ள ரிஸர்வாயர்'

இங்கு காக்கைகள் இல்லை என்று கூறுவதற்கில்லை. ஆனால் இங்கு அதிகாலையில் முதலில் மலைப் பறவைகள்தான் கூவுகின்றன. சுமார் ஏழரை மணிக்குதான் காக்கைகள் எங்கிருந்தோ பறந்து வருகின்றன. அப்பொழுது அவைகள் வரும் திக்கைக்கண்டால், மலைகளை விட்டுச் சற்றுத்தாழ்ந்த பீட பூமிகளுக்குக் குளிருக்குப்பயந்து போய்விடுகின்றனவோ என்று தோன்றும்.

'நல்ல குளிர் காலங்களில் காக்கைகள் இப்பொழுது காணப்படுவதைவிட இன்னும் குறைவாகவே காணப்படும்' என்று கூறுகிறார்கள்.

காலையில் வந்த திசையின் பக்கமாகவே, மாலை நான்கு அல்லது ஐந்துமணிக்கெல்லாம் காக்கைகள் கூட்டங் கூட்டங்களாகப் பறந்து போவதைக் காணலாம். சாதாரணமாக, காக்கைக் கூடுகள் எங்கேயாவது ஒன்று இரண்டு இருக்கின்றன.

நீலகிரியைச் சேர்ந்த கோத்தகிரியில் இரயில்வே ஸ்டேஷன் கிடையாது. இரயில்வே ஸ்டேஷனுக்கு ஊட்டி அல்லது குன்னூர் அல்லது மேட்டுப் பாளையம்தான் போக வேண்டும். ஆனால் கோத்தகிரியில் ஓர் இரயில்வே ஸ்டேஷனைப்போல டிக்கெட்டு கொடுக்கின்றனர். அதை வாங்கிக் கொண்டு பஸ்ஸில் போகலாம். மறுபடியும் இரயில் டிக்கெட்டு வாங்கவேண்டியதில்லை.

ஊட்டிக்கு, "ஒத்தக் கல் மந்து" என்று முதலில் பெயர்: ஏனென்றால் நீலகிரியில் வாழும் தொதுவர்களும், கோத்தர்களும் சுமார் ஐந்தடி உயரமான ஒத்தைக்கல்லை வைத்து வணங்குவதால், இப்பெயர் வழங்கலாயிற்று நாளாக ஆக. "ஒத்தக்கல் மந்து" "உதகமண்டலம்" என்று மாறி, பின்னர் சுருக்கமாக "ஊட்டி" என்றுமாறிவிட்டது. இதன் உயரம் 7228 அடி உதகை இரயில்வே நிலயத்தின் பக்கமாக இரவில் பார்த்தால், "அடாடா! என்ன இரமணீயமான காட்சி! கட்டடங்கள் காலரியில் அடுக்கிவைத்தாற்போல் தோன்றும்.

மேட்டுப் பாளையம் முதல் குன்னூர் வரையில் தான் அதிகமேடும் மலைக் குகைகளும் இருக்கின்றன. ஆகையால் இரயில் வண்டி அந்த இடத்தில் மணிக்கு 8—9 மைல் வீதம் செல்லுகின்றது. இரயில் மார்க்கமாக மேட்டுப் பாளையம் முதல் ஊட்டிவரையில் மொத்தம் 29 மைல்கள் இருக்கின்றன.

மறுநாள் ஊட்டியில் காட்டுவழியாக 'நட்சத்திர பங்களா' போக வேண்டும். அது 9000 அடி உயரத்திலிருக்கிறது. ஆகையால் அப்பிரயாணத்திற்கு வேண்டியசாமான்களைத்தயார் செய்து கொண்டோம்.

காலை 8 மணி வீட்டைவிட்டு நேராகத்தலையாட்டி மந்து வழியாக "தொட்ட பெட்டா ரிசர் வாயர்"க்

குச் சென்ருேம். இங்கு மூன்று தண்ணீர் தடாகங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுக்கு "டைகர் ஹில் ரிசர்வாயர்" என்று பெயர். இது சமுத்திரமட்டத்திற்கு 7758: அடி உயரமிருக்கிறது. 1903-ஆம் ஆண்டு ஆடமி என்னும் மேலை நாட்டினர் கட்டினுர். இதிலிருந்து குழாய்களின் மூலம், கிராமங்களுக்குத் தண்ணீர் அனுப்பப்படுகிறது.

இதன்மேல் பனிமலை கடம்பை மலை, கூட்டமலை என பலமலைகளின் சிகரங்கள் சூழ்ந்து இருக்கின்றன. கடம்பை மான்கள் அதிகமாய் இருப்பதால் அதில் ஒன்றுக்கு 'கடம்பை மலை' என்று பெயர். அந்த மலையில் மான்வேட்டைக்குப் பலர் வருவார்கள்.

ஒரு பெரிய கிரைக்கட்டின் மத்தியில் ஒரு சிற்றெறும்பைப் போலிருந்தது நாங்கள் போகும் ஒற்றையடிப்பாதை பெரிய சோலைகள் நிறைந்த இடம். வானமே தெரியாதபடி மரங்கள் மூடிக்கொண்டிருந்தன. நாம் நடக்கும் சப்தம் மாத்திரம் அந்த மலைகளின் மேல் எதிரொலி கொடுத்துக் கொண்டிருந்தது. இருக்க இருக்க எங்களுக்கு பயம் அதிகமானது. மலைச் சரிவுகளின் மூலமாகத் தொட்ட பெட்டா மலைக்குச் செல்லும் ஒடுக்கமான ஒற்றையடிப் பாதைகளும் ஒடுங்கிக் கிடந்த பள்ளத்தாக்குகளும் ஆகாயத்தில் இருப்பன போலத் தோன்றின. உச்சியிலிருந்து பார்த்தால் பசுமைதவழ்ந்திருக்கும் மலைச் சரிவுகளை ஒரு பக்கத்தில் காணலாம். இன்னொரு பக்கத்தில் பசுமை யென்பது மருந்துக்குக் கூடத் தென்படாது. பாறைகளும் குன்றுகளும் கண்ணில்படும்.

அப்பொழுது நாங்கள்கடற்கரையிலிருந்து 8858 அடி உயரத்திற்கு மேல் உள்ள ஒரு மலைமீது இருந்தோம். ஒவ்வோர் அடி யெடுத்து வைக்கும்போது மூச்சுவாங்க ஆரம்பித்தது. ஒரே பிடிவாதமாக மலை உச்சியைப் போய்ச் சேர்ந்தோம். சிறிது நேரம் இளைப்பாறிய பின், திரும்பி நடக்க ஆரம்பித்தோம். அன்று மாலை ஐந்து மணிக்குக் கால் வலிக்க, காதடைக்க வீடு வந்து சேர்ந்தோம்.

அந்த, நட்சத்திர பங்களாவிலிருந்து பார்த்தால் வெகு தூரத்திலிருக்கும் சில ஊர்களைக் காணலாம். கிரகங்களின் சலனங்களையும் காணலாம்.

சில இடங்களில், மலையைக் குடைந்து 'டன்னல்'களிலும் இரயில் வண்டிகள் போகின்றன. அப்படி மொத்தம் நீலகிரி ஜில்லாவில் பதினறு டன்னல்கள் இருக்கின்றன. 'எதற்கும் அசையாதபாறை கடைசியில் மரத்தின் வேருக்குப் பிளவுபட்டு அசைந்து விடுகிறது'

சாதாரணமாய் நீலகிரி ஜில்லா முழுவதும் செம்மண் பூமியாக இருக்கிறது. இந்த ஜில்லாவில் காப்பிக் கொட்டை தேயிலை சின்கோனு ஜாலப் இயூகலிப்டஸ் தைலம் கோதுமை பார்லி சாமை ராகி முதலிய தானியங்களும், மேல் நாடுகளில் உண்டாகும் பழவகைகளும் காய்கறிகளும் நானுவிதக் கிழங்குகளும் வெங்காயம் வெள்ளைப்பூண்டு வெந்தயம் கடுகு கீரைவகைகள் முதலியவைகளும் பயிராகின்றன. எல்லோருடைய வீடுகளிலும் தரையில் நார்ப்பாயை விரித்திருக்கிருர்கள். நார்க்கட்டிலோ பிரம்புக் கட்டிலோ மரக் கட்டிலோ ஒன்று இரண்டு வைத்திருக்கிருர்கள். அதன்மேல் எப்பொழுதும் கம்பளம் விரித்திருக்கிருர்கள். இங்குக் குப்பைக்காரன் என்றும் கூலிக்காரன் என்றும் கடைக்காரர் என்றும் தொழிலாளி என்றும் வித்தியாசம் தெரிந்துகொள்வது சற்றுக் கடினம்தான். ஏனென்ருல் சிராய் கம்பளிக் குல்லாய் கம்பளி பனியன் முதலியவைகள் அணிந்துகொண்டு மிகவும் மரியாதையாக இருக்கிருர்கள்.

ஈண்டுள்ள மக்கள் சாதாரணமாய் காலில் 'சப்பல்' அல்லது பூட்ஸ்' அல்லது "கால் கட்டை"

முதலியவைகளை அணிந்திருப்பார்கள் இங்கு பாம்பு தேள் பல்லி முதலியவைகள் அதிகமில்லை. இங்கு சைக்கிள் வண்டிகள் வெகுகுறைவு. டவுனாகஇருக்குமிடங்களில் மட்டும் குழாய்கள் இருக்கின்றன, மற்ற இடங்களில் வாழும் மக்கள் கிணறுகளும் ஊற்றுகளும் உபயோகப் படுத்துகிறார்கள். ஈண்டு உப்புத் தண்ணீரேகிடையாது. நீலகிரி முழுவதும் வீடுகளில் 'தொட்டி'' அல்லது ''குழிக்கக்கூசு'' தான் உபயோகப்படுத்தப் படுகின்றது.

இங்குவாழும் மக்கள் சாதாரணமாய்ப் பலமொழிகளை பேசுகிறார்கள்.

ஏனென்றால் பல இன மக்கள் பல ஊர்களிலிருந்து கோடைக் காலத்தில் வருவதால், அதன் மூலம் பல மொழிகளை இங்கு வாழும்மக்கள் பழகிக் கொள்ளுகின்றனர். ஆனால் இங்குத் தமிழும், படகர் மொழியும் கன்னடமும் மலையாளமும் தான் அதிகமாய்ப் பேசப்படுகின்றன.

இங்குவாழும் மாணவர்களுக்குத் தமிழ் ஆங்கிலம் கன்னடம் இந்தி முதலிய மொழிகள் கற்பிக்கப் படுகின்றன.

சூழ்நிலை

ஒரு மனிதன் சூழ்நிலைக்கேற்றவகையில் மாறுபாடுகளை அடைகிறான். அநாகரிக மக்களிடையே வாழ்பவன் அநாகரிகமுள்ளவனாகவும், நாகரிக மக்களிடையே வாழ்பவன் நாகரிகமுள்ளவனாகவும் தென்படுகிறான். ஆதலால் சூழ்நிலையே ஒருவனைப் பலவகையில் மாற்றுகின்றது.

போன். 86125

மதராஸ் வருபவர்களுக்குச் சேவை செய்வதில்
புகழ் பெற்ற இடம்!

அஜந்தா ஹோட்டல்

75 ரூம்கள்

குளிக்கும் அறைவசதிகளுடன் கூடியவை
(ஏர்கண்டிஷன் ரூம்களும் உள்ளன)

ஏராளமான பொருட்செலவில் நிர்மாணிக்கப்பட்ட இடம்

ஒவ்வொரு நபரையும் தனித்தனியாக விசாரித்து
வேண்டியதைச் செய்து உதவி செய்யும் இடம்.

அஜந்தா ஹோட்டல்
ராயப்பேட்டை ஹைரோட், மதராஸ்-14.

Telephone 84128 Telegram: TARAPORECO

TARAPORE & CO.,

ENGINEERS & CONTRACTORS,

175/1, Mount Road, Madras-2.

SPECIALISTS IN REINFORCED CONCRETE

★

UNDERTAKE CONSTRUCTIONS OF
ROAD, BUILDINGS, BRIDGES, FACTORIES,
DAMS, Etc.

ENSURE SPEEDY AND EFFICIENT WORK

★

Branch Office at

No. 6, Spencer Road, Bangalore.

(Mysore State)

Telephone: 4447 : *Telegram:* TARAPORECO

பொன்மொழிகள்

'பன்மொழிப்புலவர்'

[பகுத்தறிவு பெற்றவரே மக்கள் என்றும் அதனைப்பெருதவர் மாக்கள் என்றும் அழைக்கப்படுவர். சிலர் பல திட்டங்களுடன் வாழ்க்கையைச் செம்மையாக நடத்துவர். சிலருக்கு அத்தகைய திறமையே இராது. அதனால், அன்னார் வாழ்க்கை, விலங்கு வாழ்க்கையாக அமையும். வாழ்வாங்கு வாழ விரும்புவோருக்கோ, அனுபவ அறிவு மிகத் தேவையானது. அதற்கு ஓரளவு பயன்படும் வகையிலும், ரசிகர்கள் வரவேற்கும் முறையிலும், பல பொன்மொழிகள், அகரவரிசையில், பல தலைப்புக்களில் அமைத்து அளிக்கப்பட்டுள்ளன.]

1. அன்பு :--

அன்பு என்னும் சொல்லுக்கும் பொருளுக்கும் சிறந்த சக்தி உண்டு. அன்பு செலுத்தும் இரு நண்பர்கள் ஒன்று சேர்ந்து அறிவுக்கு அதிக வேலை தரும் இனிய பேச்சுக்களைப் பேச ஆரம்பித்தால் உணவு, உறக்கம், ஓய்வு முதலியவற்றையே மறந்துவிடுவர். அன்னாரின் ஒவ்வொரு செயலிலும் உண்மை அன்பு வெளிப்படும். உண்மை அன்பு கிடைத்தால் எதுவும் தேவையில்லை. உண்மை அன்பருடன் உரையாடுவது, உலவுவது, உண்பது, விளையாடுவது ஆகிய அனைத்தும் இன்பம் தருவனவாம்.

2. ஆன்மா :--

ஆன்மா என்பது அழிவற்றதாயும், பரவியதாயுமுள்ளது. அது ஜீவான்மா, பரமான்மா என இருவகைப்படும். சிற்றறிவுடையது ஜீவான்மா என்றும், பேரறிவுடையது (எல்லாம் அறிந்தது) பரமான்மா என்றும் கூறப்படும்.

3. இன்பம் :—

இன்பத்திலே சிறந்த இன்பம், பெருஞ் செல்வத்தாலும் பெற முடியாத நற்பண்பு மிக்க நண்பரை நாடோறும் கண்டு, நேரம் பறப்பது தெரியாமல் அரும்பெரும் விஷயங்களை ஆராய்ச்சி முறையில் பேசி, நேரத்தை இனிமையாகப் பயன்படுத்துவதும், பொருமை, செருக்கு, புறங்கூறுதல் முதலிய கெட்ட குணங்கள் நிறைந்த கயவர் இருக்குமிடத்தைவிட்டு நெடுந்தூரம் சென்று, நீண்ட நேரம், எல்லையில்லா மகிழ்ச்சியுடன் பொழுதுபோக்குவதுமேயாகும். அங்ஙனமில்லேல், நண்பருக்கு அடிக்கடி அழகிய கடிதம் எழுதுவதும் சிறந்த இன்பமாகும்.

4. ஈகை :—

ஈகையாளர் பிறருக்காகச் செலவு செய்யும்போது அதற்கென ஒதுக்கப்பட்ட தம் செல்வத்தில் பெரும் பகுதி நல்லோர்க்குப் பயன்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். பொருமை, புறங்கூறுதல், முதலிய தீக்குணம் படைத்தோர்க்கும் கொடுக்க நேரிட்டால் சிறிதளவு கொடுத்து மீண்டும் நெருங்கவிடாமல் செய்வது நல்லது. கைம்மாறு கருதாமல் கொடுப்பது ஈகையாகும்.

5. உதவி :—

உதவி என்பது சொல், செயல், செல்வம் முதலியவற்ருல் செய்பத் தக்கதாகும். உதவி செய்யும் எண்ணமுள்ளவர்கள் தற்காலத்தில் பயனற்றவர்களை ஒதுக்கி முன்னேற்ற மடைவதில் ஆவல் கொண்டு, ஊக்கம் நிறைந்து விளங்கும் உத்தமர்களுக்கு உதவி செய்தால்தான் அதன் மதிப்பைக் காணமுடியும்.

6. ஊக்கம் :—

ஊக்கமே சிறந்த செல்வமாகும். மிகுந்த ஊக்கமுள்ளவன், இழந்த பெருஞ் செல்வத்தையும் மீண்டும் அடைந்து விடலாம். ஊக்கத்தை இழந்தால் எல்லாவற்றையும் இழக்க நேரிடும். ஆதலால் காரியம் நிறைவேறும்வரை விடாமுயற்சியுடன் இருப்பதே ஊக்கமாகும்.

7. எழில் :—

எது உண்மை எழில் என்பதை ஆராய்ந்தால் அறியலாம். வழு வழுப்பான நச்சுப்பாம்புபோல் பளபளப்பான உடலை மட்டும் பெற்ற ஒருவரை மணந்தால் தீமைதான் விளையும். தோலழகு அழிய ஒரு நொடிநேரம் போதும் ஆகவே, நற்பண்பை வளர்க்கும் நல்லறிவே என்றும் அழியாத உண்மை எழிலாகும்.

8. ஏழைமை :—

ஏழைமை என்பது வறுமை நிலையாகும். ஏழைமை என்னும் துன் பத்துடன் பல துன்பங்கள் ஒன்றுசேரும். கயவர் செய்யும் குற்றம் ஏழை மீது எளிதாகச் சுமத்தப்படும். வறுமையால் வாடினுலும் மனம் தளரா மல், மதிப்பிழக்காமல் மானம் காத்துச் செம்மையுடன் வாழ்வோரும் இருப்பர் என்பதை அறிஞரே அறிவர். மூடர்கள் ஆராய்ந்து பாராமல் பிறர்மீது குற்றம் சுமத்துவர்.

9. ஐயம் :—

ஐயம் என்பது ஒரு நோய். அதுமுதிர்ந்தால் பல தீமைகள் விளையும். அதனுல் தம்மையே கெடுத்துக் கொண்டவர் பலர் உண்டு. பொருமைப் பேய்களின் பேச்சைக்கேட்டு உயிர் நண்பரிடம் ஐயமடை தல் அறிவினம் ஆகும். எத்தகைய உதவியையும் எதிர்பாராமல் சிறந்த பண்புகள் பலவற்ருல் கவரப்பட்டும், தமக்கொப்பான பண்புடையார் என்று எண்ணியும், ஆராய்ச்சி கலந்த பல இனிய பேச்சுக்களாலேயே, பொழுது பறப்பது தெரியாமல் பல்லாண்டுகள் கழிக்கலாம் என நினைத்து அன்பு செலுத்தும் உண்மை நண்பர்களின் நட்பைக்குலைக்க, எதற் கும் உதவாத சில கயவர்கள், தக்கதருணத்தை எதிர்பார்த்திருப்பர்.

10. ஒழுக்கம் :—

ஒழுக்க முள்ளவனே உயர்ந்தவன். நல்லோர் ஒழுக்கத்தை உயிரி னும் சிறந்ததாகக் கருதுவர். ஒழுக்கமுடையார் நல்லோர் மனம் புண்படு மாறு கடுஞ்சொல் கூருர். மாசற்ற மனமுடையார் நல்லதெனக் கூறுவதே உண்மையில் நல்லதாகும். அதன்படி நடப்பதே ஒழுக்கமாகும்.

11. ஓவியம் :—

ஓவியம் என்பது கண்களுக்கு மட்டுமல்லாமல் கருத்துக்கும் விருந் தளிக்கும் அரும்படைப்பாகும். ஓவியம் எத்தகைய குறையுமின்றி, அழகாக, அமைந்து விட்டால் அது உயிருள்ளதுபோல் தோன்றும். காவியக் கருத்துக்களை உயிரோவியங்களின் மூலம் காண்பதில் தனித்த இன்பம் ஏற்படும். இலக்கியச் சித்திரங்கள் நிறைந்த வீட்டில் வசிப் பவனே நற்பேறு பெற்ற ரசிகனுவான்.

12. ஔடதம் :—

ஔடதம் என்பது நோயை நீக்குவதற்காகவே ஏற்பட்டதாகும். போலி மருத்துவர்களுக்கு நோய் இன்னது என்பதே நன்கு தெரியாது. அனுபவமற்றவர் கொடுக்கும் மருந்து தீமையை உண்டாக்கும். தவிர்க்கமுடியாத நிலையில்தான் மருந்தருந்த வேண்டும். (தொடரும்)

விட்லோ

மாவுமூலம் இட்லி!

ஊறவைத்து அரைக்காமல், துரிதமாக எளிதில் இட்லிகளை தயாரிக்கலாம்



விட்லோ' இட்லி மாவுடன் 1 மடங்கிற்கு 1½ மடங்கு தண்ணீரை கலக்கவும். அதை ஒரு இரவு முழுவதும் புளிக்க வையுங்கள். பின்னர் வழக்கம்போல ஆவியில் வேக வைத்து எடுங்கள். இட்லிகள் எவ்வளவு மிருதுவாகவும், ருசியாகவும், உரு குலையாமலும் இருப்பதைப் பார்ப்பீர்கள்!

பெரிய பலசரக்கு கடைகளில் 500, 250 கிராம் 'பாக்கெட்'டுகளில் கிடைக்கும்.

இன்றே ஒரு பாக்கெட் வாங்குங்கள்.

தயாரிப்பாளர்:

விட்லோ புட் ப்ராடக்ட்ஸ் கம்பெனி

20, கோபாலகிருஷ்ண ரோடு, தி'நகர், சென்னை - 17

சென்னையில் விற்பனையாளர்:-

டான் ஸ்டோர்ஸ், ஆயிரம்விளக்கு, சென்னை 6 — **புஹாரி ஸ்டோர்ஸ்**, மவுண்ட் ரோடு. சென்னை 2 — **விஜயா ஸ்டோர்ஸ்**, மயிலாப்பூர். சென்னை 4

ஆர். எல். கவுடர் கம்பெனி, பந்தர் தெரு, சென்னை 1

சம்பந்தம் செட்டி அண்ட் சன்ஸ், தி'நகர், சென்னை 17

நாட்டியாலயா

(பரத நாட்டிய ஸ்கூல்)

பெண்களுக்கு மட்டும்

பிரின்ஸிபால் **குமாரி வைஜயந்திமாலா**

சிறந்த ஆசிரியரைக் கொண்டு சாஸ்த்ரீய முறையில் நாட்டிய வகுப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாணவிக்கும் பிரத்தியேக கவனம் செலுத்தப்படுகிறது.

★

விவரங்களுக்கு:

நாட்டியாலயா

ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

காதல் எனும் மாயை

டி. எஸ். கே

அலுவலகத்திலிருந்து திரும்பிய வனஜா, முகத்தை அலம்பிக் கொண்டு தலையை இலேசாக வாரிக் கொண்டவுடன் நேராகத் தன் அறைக்குச் சென்று கட்டிலில் சாய்ந்து விட்டாள். கையில் சிற்றுண்டித் தட்டுடன் அருமைக் குமாரத்தியைத் தேடிக் கொண்டு வந்த பாகீரதி அம்மாள் திடுக்கிட்டாள். அலுவலகத்திலிருந்து வந்ததும் "அம்மா, அம்மா" என்று கொஞ்சியபடி அவளைச் சுற்றிச் சுற்றி வரும் பெண் ஏன் இன்று கட்டிலில் சாய்ந்து கிடக்கிறாள்? காரியாலயத்தில் ஏதேனும் தகராறு? அல்லது உடல் நலமில்லையா?...

பாகீரதி அம்மாளின் தாய்மனம் எண்ணாததெல்லாம் எண்ணிவிட்டது, ஒரு நொடியில்.

"வனஜா, வனஜா!... இதைப் பாரு... உனக்கு என்னடி கண்ணு வந்துவிட்டது?..." பாசம் பொங்க மகளின் முதுகில் அன்போடு தடவிக் கொடுத்தாள், அம்மாள்.

'வனஜாக்கண்ணு' கண் விழித்து அம்மாவைப் பார்த்தது!

"ஏண்டி, படுத்துக் கொண்டு விட்டே?"

"ஆபீசில் ரொம்ப வேலை. கொஞ்சங்கூட ஓய்வு கிடைக்கவில்லை. திரும்பி வரும்போது பஸ் ஸ்டாண்டுக்காகக் காத்து நின்று காலே வலிகண்டு விட்டது...

அம்மாளுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. அவள் நினைத்ததைப் போல் விபரீதமாக ஒன்றும் நேர்ந்துவிடவில்லை என்பதை அறிந்ததும் ஆறுதல் தோன்றியது. கூடவே, மகளின்மேல் கோபமும் உண்டாயிற்று.

"நான் சொன்னால் நீ கேட்கமாட்டேன் என்கிறாய். நீ சம்பாதித்துக் கொட்டவில்லை என்று யார் அழுகிறார்கள்? காலாகாலத்தில் கல்யாணம் பண்ணிக்கொண்டு குடியும் குடித்தனமுமாய்..."

"...ஆரம்பித்து விட்டாயா, உன் புராணத்தை! சரி, தட்டை இங்கே கொண்டு வா. இப்போது நான் டிபன் சாப்பிட்டால் உன் மனம் நிம்மதியாகிவிடும்!"

அம்மாள் தட்டை நீட்டியபடியே சொன்னாள்: "உன்னால் கோபுவுக்கு வருகிற சம்பந்தத்தை எல்லாம் தட்டிக் கழிக்க வேண்டியிருக்கிறது. அவனாவது உன்னைப் பற்றிக் கவலைப் படுகிறானா? இஷ்டப்பட்டபோது கல்யாணம் செய்து கொள்ளட்டுமே என்கிறான்!... நீங்கள் இருவரும் ஆபீசுக்குப் போன பின் நான் மட்டும் வீட்டில் 'கொட்டு, கொட்டெ'ன்று விழித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கு...!'

"ஏன் பக்கத்து வீட்டு மாமியுடன் சண்டையா?"

வனஜா சிரித்துக்கொண்டே கேட்டதும், அம்மாளுக்குப் பொய்க் கோபம் வந்தது.

"கேட்க மாட்டாயோ, பின்னே? உனக்கு அவ்வளவு இடம் கொடுத்துப் போய்விட்டது. கற்ற வித்தையைப் பெற்ற தாயிடமே காட்டுகிறாய்..."

தட்டை வைத்துவிட்டுத் தாயின் அருகே வந்து, 'கோபமா, அம்மா?' என்று கேட்டாள், வனஜா சிறு குழந்தையைப் போல். எந்தத் தாய்க்காவது இந்தச் சமயத்தில் கோபம் தோன்றுமா? பாகீரதியும் இவ்விதிக்கு விலக்கல்ல. மௌனமாக வனஜாவைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பின், சிற்றுண்டித் தட்டுடன் வெளியேறினாள்.

★

அன்றையதினம் ஞாயிற்றுக்கிழமை. வனஜா, கோபு - இருவருக்குமே அலுவலகம் இல்லை. மாலை நாலரை மணி குமாருக்குக்

கோபுவைத் தேடிக்கொண்டு நண்பர்கள் வந்தார்கள். வரவேற்பு அறையில் உட்கார்ந்து கொண்டு அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். தட்டில் சிற்றுண்டியும் காப்பியும் எடுத்துக்கொண்டு வனஜாவே வந்தாள். கோபு, தன் நண்பர்களை அவளுக்கு அறிமுகப் படுத்தினான்.

"வனஜா, இவர்தான் கோபாலரத்தினம்; கணித விரிவுரையாளர்..."

"ஓ!... வணக்கம், ஸார்!..." என்றபடியே அருகேயிருந்த நாற்காலியில் வனஜா அமர்ந்துகொண்டாள். "எனக்குக் கணிதம் என்றால் வேப்பங்காய், ஸார்!... அழுதுகொண்டேதான் கணக்குப் புத்தகத்தைப் பிரிப்பேன்!...ஏ ப்ளஸ் பி ஹோல் ஸ்கொயர்-இஸ் ஈக்வல்டு-ஏஸ்கொயர் ப்ளஸ் பி ஸ்கொயர் ப்ளஸ் டூஏபி-என்ற சூத்திரத்தை நெட்டுருப் பண்ணுவதற்குள் நான் என்ன பாடு பட்டிருப்பேன். தெரியுமா?..."

அது ஒன்றும் அவ்வளவு கஷ்டமில்லையே...' என்று ஆரம்பித்தார் கோபாலரத்தினம். "நான் இம் மாதிரி எவ்வளவோ சூத்திரங்களை மனப்பாடம் செய்திருக்கிறேன்..."

"தேவலையே!..."

"இன்னும்கூட பல சூத்திரங்கள் மனத்தில் பசுமையாகவே இருக்கின்றன..."

"அப்படியா?..." மைனஸ் ஏ ப்ளஸ் பி, மைனஸ் ஸி, ப்ளஸ் டி-ஹோல் ஸ்கொயர்-என்னவென்று சொல்ல முடியுமோ?..."

கோபாலரத்தினம் அசந்து விட்டார். கேள்வியை எதிர்பாராததால் சட்டென்று பதிலும் தோன்றவில்லை. "ஹி...ஹி...வ ந் து... கொஞ்சம் டயம் வேணும்..."

பரவாயில்லை, ஸ ா ர்!...நான் ஏதோ சும்மா கேட்டுவைத்தேன்!" என்றாள், வனஜா. வெளிப்படையாக இப்படிச் சொன்னாளே தவிர, உள்ளுக்குள், 'என்னை என்ன

DRINK GUPTA'S COFFEE

100% Pure & Fresh

★

Manufactured by:

GUPTA'S COFFEE WORKS

No. 435, Mint Street,

MADRAS-1.

நினைத்துக் கொண்டீர்? உம்முடைய பெருமையைக் குலைப்பதற்கும் என்னால் முடியும்!' என்று எண்ணிக்கொண்டதை மற்றமூன்று பேரும்தெளிவாக உணர்ந்தார்கள்.

இன்னொரு நண்பரைச் சுட்டிக் காட்டி, "இவர்தான் கல்யாணராமன்; விஞ்ஞான ஆசிரியர்..." என்று அறிமுகப்படுத்தினான், கோபு.

"வணக்கம்..."

கல்யாணராமனின் முகத்தில் விளக்கெண்ணெய் வழியத்தொடங்கிற்று. 'இந்தப் பெண் நம்மையும் ஏதாகிலும் கேள்விகேட்டுத் திணற வைக்கப் போகிறாளே?' என்ற கவலையுடன், தற்காப்புக்கான முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினார்.

"ஆ...மாம்!... நான் என்ன, ஆராய்ச்சியா செய்கிறேன்?... அன்றைய பாடத்தை வீட்டில் பார்த்துக்கொண்டுபோய், பள்ளிக்கூடத்தில். பையன்கள் எதிரில் அழவேண்டியது! வகுப்பு முடிந்ததும் என்ன கற்பித்தேன் என்பது எனக்கே ஞாபகமிராது!..."

இதைக் கேட்டதும் கலகலவென்று நகைத்தாள். வனஜா. கோபுவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. வீட்டுக்கு வந்திருப்பவர்களை இப்படியா, மறைமுகமாக, அவமானப் படுத்துவது?

"வனஜா, ஏன் இப்போது அநாவசியமாகச் சிரிக்கிறாய்?" என்று கேட்டான், கடுகடுப்புடன்.

"இல்லை, அண்ணா! மிஸ்டர் கல்யாணராமன் சொல்லியதைக் கேட்டதும், அவரிடம் படிக்கும் மாணவர்கள்மீது எனக்கு அனுதாபம் தோன்றியது!...... கற்பித்ததையே மறந்துவிடும் இவர், ஒளியைப் பற்றிப் போதிக்க வேண்டிய வகுப்பில் ஒலியைப் பற்றிச் சண்டப்பிரசண்டமாகப் பேசத் தொடங்கினால், மாணவர்கள் கதி என்ன ஆவது?..."

"நோ, நோ!...அப்படியெல்லாம் நேர்ந்துவிடாது!" என்று புன் சிரிப்



புடன் கல்யாணராமன் சொன்னாலும் உள்ளத்தில் வெறுப்பு மலையாக வளர்ந்திருக்கிறது என்பதை மற்றவர்கள் உணராமல் இல்லை!

நண்பர்கள் விடைபெற்றுச் சென்றதும், வனஜாவின்மீது வசைமாரியாகப் பொழிந்தான், கோபு.

"கல்யாண மாகிறவயசாகவில்லை உனக்கு? நாக்கை அடக்கிப்பேச வேண்டாம்? ஆண்பிள்ளைகளுடன் சமதையாக உட்கார்ந்து என்ன அரட்டை வேண்டிக் கிடக்கிறது?..."

"பின்னே, சமையற்கட்டிலேயே என்னை அடைந்து கிடக்கச் சொல்கிறாயா?"

"நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை. வந்தவர்களிடம் நாகரிகமாக இரண்டு வார்த்தைகள் பேசுவது தான் அழகு..."

வனஜா மேலே கேட்டுக் கொண்டிராமல்தன் அறைக்குள் புகுந்துவிட்டாள்.

ஒரு மாதம் ஆயிற்று

காரியாலயத்திலிருந்து திரும்பி வரும்போதே தன் நண்பன் ஒருவனுடன் வந்தான், கோபு.

வழக்கம்போல், இரண்டு டம்ளர்களில் காப்பியுடன் அறைக்குள் வனஜா நுழைந்தாள். வந்திருந்த நண்பரைக் கண்டதும் அவள் திடுக்கிட்டு விட்டாள். அவசரம் அவசரமாகக் காப்பி டம்ளர்களை டீபாயில் வைத்துவிட்டு அறையிலிருந்து வெளியேறத் தொடங்கினாள், அவள். கோபு விடவில்லை.

"வனஜா, இரு. சங்கரனை உனக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டாமா?..."

ஒரு புன்னகையை வரவழைத்துக்கொண்டு சங்கரனைப் பார்த்து வணக்கம் தெரிவித்து விட்டுத் திரும்பினாள், வனஜா.

"அட ஏன் அவசரப்படுகிறாய், வனஜா? நான் உன்னைப்பற்றி எவ்வளவுதூரம் உயர்வாகச் சொல்லியிருக்கிறேன், தெரியுமோ? பட்டிக்காட்டுப்பெண்ணைப்போல் உள்ளே ஓடுகிறாயே!..."

"இல்லை, அண்ணா: எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது..."

"அப்படியானால் சரி..."

வனஜா அப்பால் சென்றதும், "கோபு, இந்தப் பெண் உன் தங்கையா?" என்று சங்கரன் கேட்டான்.

"ஏன்?...ஆமாம். உனக்கு அவளை முன்பே தெரியுமா?"

"தினமும் ஒரே பஸ்ஸில் தான் இருவரும் காரியாலயம் செல்கிறோம்!..."

"அடி சக்கைன்னானும்!...பேஷ். பேஷ்...என்னிடம் சொல்லவே இல்லையே; அவள்?..."

சங்கரன் வெறுமே புன்னகைத்தான். அதில் ஏதோ அர்த்தம் இருப்பதாகப்பட்டது, கோபுவுக்கு!

இரண்டு தினங்களாக வீட்டில் ஒரே அமைதி. துள்ளிக் குதித்து, சிறு பெண்ணைப்போல் கேலியும் கொம்மாளமுமாய் இருக்கும் வனஜா ரொம்பவும் பெரிய மனுஷிபோல், அடக்க ஒடுக்கமாய்த் தலை நிமிராமல் நடக்கிருள். கோபுவிடம் பேசுவதற்கே கூச்சப்படுகிருள்.

எல்லாம் சங்கரன் வந்துவிட்டுப் போனபின்பிலிருந்து தான்!

கோபுவின் மூளை அபரமாய் வேலை செய்தது. தன் மனத்தில் ஏதோ ரகசியத்தை வைத்துக் கொண்டு சொல்வதற்கு வெட்கப் படுகிருள் வனஜா என்று எண்ணினான். அவளைக் கேலி செய்து பார்க்க வேண்டும்போல் அவனுக்குத் தோன்றிற்று.

அன்று இரவு சாப்பாட்டு நேரம்.

"வனஜா. சங்கரன் என்ன சொன்னான் என்று நீ கேட்கவே இல்லையே?..."

அவளுக்குத் திக்கென்றது. விரிந்த கண்களுடன் கோபுவின் முகத்தைப் பார்த்தாள்.

"அடாடாடா.சங்கரனின் பேச்சை எடுத்ததும் ஆவலைப் பார்..."

வனஜா தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"உன்னை ரொம்ப நாளாய்த் தெரியுமாமே, அவனுக்கு?" வேண்டுமென்றே வேறு எங்கோ பார்த்துக்கொண்டு கோபு சொன்னான்.

தங்கை பதில் சொல்லவில்லை. அம்மா கேட்டாள். "யார் அது சங்கரன்?"

"அன்றைக்கு வரவில்லை—கறுப்பாய் ஒல்லியாய், மூக்குக் கண்ணாடியுடன்!—அவன் தான்..."



குருவாயூர் சகோதரிகள் என்று புகழ் பெற்று நடனத்தில் அதி சீக்கிரம் முன்னேறிவரும் ரங்கா—விஜயா இவ்விருவர்களும் மாங்குடி - துரைராஜ ஐயரின் மாணவிகள். இவர்களுக்கு நல்ல எதிர்காலம் தென்படுகிறது. நடனத்திற்கு வேண்டிய அழகுடையவர்கள்.

வனஜா விருட்டென்று எழுந்து, தட்டையும் எடுத்துக்கொண்டு கொல்லைப்புறம் செல்லத் தொடங்கினாள்.

"ஏண்டி, என்னடி அவசரம்? மோர் வேண்டாமா?"

அவள் காதில் விழுந்தால் தானே?

கடகடவென்று கோபு சிரித்தது கொல்லையில் தட்டைக் கழுவிக் கொண்டிருந்த வனஜாவின் செவிகளில் நாராசமாய் ஒலித்தது.

தட்டை உள்ளே கொண்டு வந்து வைக்கையில் அம்மாவும் அண்ணாவும் மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள். வேறு சந்தர்ப்பமாக இருந்தால், 'என்ன அண்ணா, ரகசியம்?' என்று கேட்டிருப்பாள். இப்போதோ, அங்கே நிற்கக்கூடப் பிடிக்கவில்லை, அவளுக்கு. விர்ரென்று கூடத்திற்குச் சென்றுவிட்டாள்.

சங்கரனை வனஜா நேசிக்கிறாள் என்ற உண்மையை முதன்முதலாகத் தெரிந்துகொண்ட சமயத்தில் கோபுவுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சங்கரனை அழகன் என்று சொல்ல முடியாது. வனஜாவைச் சீண்டுவதற்காகச் சாப்பிடும் போது வர்ணித்தானே, அப்படியே தான் இருப்பான், சங்கரன். வனஜாவைப்போன்றதொருபேரழகிக்குச் சங்கரனைப்போன்ற ஒரு சாதாரண வாலிபனிடம் காதல் தோன்றுவது வியப்புக்கு உரிய செய்தி தானே?

ஆனால், காதல் என்பது தெய்வீகமாயிற்றே! எல்லா பேதங்களையும் கடந்து நிற்பதாயிற்றே! இருவர் உள்ளங்கள் ஒன்றானால் அழகும் அந்தஸ்தும் அங்கே என்ன செய்ய முடியும்?

சங்கரனுக்கு வனஜாவைக் கொடுப்பதில் கோபுவுக்கோ, அவன் தாயாருக்கோ ஆட்சேபணை இல்லை. சங்கரன் நல்ல நிலையில் உள்ளவன், நல்ல குணம் உடையவன்.

சங்கரனும் வனஜாவும் தம் காதலைத் தெரிவிப்பதற்காக எடுத்துக் கொண்ட முறை, கோபுவையும் பாகீரதி அம்மாளையும் வியப்பில் ஆழ்த்தியது. நேரில் சந்திக்க நேர்ந்தபோது, ஒருவரையொருவர் தெரியாதது போலல்லவா நடித்தார்கள்! 'வனஜாவை எனக்கு வெகு நாட்களாகத் தெரியும்' என்று சொன்னபோது சங்கரனின் முகத்தில் அசடு வழிவானேன்? அவனைப்பற்றி இறக்கமாகப் பேசியபோது வனஜா கோபத்தோடு எழுந்து போவானேன்? சாவகாசமாகக் கோபுவிடம் வந்து, 'அண்ணா, அவர் வேறு ஒன்றும் சொல்லவில்லையா?' என்று தயங்கிக்கொண்டே கேட்பானேன்?...

வனஜாவுக்குச் சம்மதம் என்பது நன்றாகப் புரிந்துவிட்டது. அவள் செயல்களால், இனிமேல் சங்கரனைப் பார்த்து திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது தான் என்று தீர்மானித்துக் கொண்டான், கோபு.

காலம் தாழ்த்தக்கூடாது என்பதற்காக அடுத்து வந்த ஞாயிறு அன்றே சங்கரனைப் பார்த்துவிட்டு வரும்படி வற்புறுத்தினாள், பாகீரதி அம்மாள்.

காலை ஏழு மணிக்குச் சென்ற கோபு, பத்து மணிக்குத் திரும்பிய போது உற்சாகத்துடன் காணப்பட்டான்.

"என்னடா, காயா, பழமா?" என்று தாயார் கேட்டாள்.

"ரொம்பவும் கனிந்த, இனிப்பான பழம்!..."

"அப்பாடா!...ஒரு கவலை விட்டது! கடவுள் புண்ணியத்திலே சொச்ச காரியமும் ஒழுங்கா நடந்து முடிஞ்சுடனும்..."

மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள், வனஜா.

"வனஜா, கல்யாணத்தை எப்போது வைத்துக்கொள்வது?" தன் அறையிலிருந்தபடியே கோபு கேட்டான்.

வனஜா, ஒரு கணம் திகைத்தாற்போல் நின்றாள். பின், "யாருக்குக் கல்யாணம்?" என்று கேட்டாள்.

"அடாடா!...சின்னக் குழந்தை! பார்-ஒன்றுமே புரியவில்லை!..."

"என்ன அண்ணு! உளறுகிருய்?"

"சங்கரன் உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லையா?"

"சங்கரனு? அவர் ஏன் என்னேடு பேசுகிருர்?"

கோபு நாற்காலியிலிருந்து எழுந்தான். "அம்மா! இங்கே வாயேன். உங்கள் அருமைப் பெண் என்ன சொல்கிருள் என்று கேளுங்கள்..."

அம்மா வந்தாள்.

"என்னடா?"

"சங்கரனைப் பற்றி ஒன்றுமே தெரியாதுபோல் பேசுகிருள், இவள்..."

"இது என்ன அதிசயமாயிருக்கு!...அதற்குள் அவனேடு உனக்கு மனஸ்தாபமா?..."

"நீங்கள் ரெண்டு பேரும் என்ன சொல்கிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை. சங்கரனும் நானும் தினமும் ஒரே பஸ்ஸில் போகிருேம். அவ்வளவுதான். அவரோடு நான் ஒரு வார்த்தைகூடப் பேசியது இல்லை. அவரை நிமிர்ந்து பார்த்ததும் இல்லை..."

மற்ற இருவருக்கும் இடி விழுந்தாற்போலிருந்தது

"அப்படியானுல்!...நீ...நீ... அவனை...நேசிக்கவில்லையா?..."

"நாசமாய்ப் போச்சு!...நான் என்ன! அவ்வளவு முட்டாளா! அவரைக் காதலிக்க!...அவர் மூஞ்சியும் முகரக்கட்டையும்..."

கோபு பேச்சிழந்து நின்ருன்.

"என்னடி கடைசியில் இப்படிக் கல்லைத் தூக்கிப் போடுகிறே? கல்யாணத்துக்குத் தேதி குறிக்கிற வரை வந்தாயிற்றே?..." அம்மா கேட்டாள்.

"நான் அவரை மணந்து கொள்ள மாட்டேன்."

கோபு உணர்வு பெற்று எரிச்சலுடன் தங்கையைப் பார்த்தான். "பின், ஏன்? அவர் வேறு ஒன்றும் சொல்லவில்லையா?' என்று என்னைக் கேட்டாய்?" என்று உறுமினன்.

ஓகோ. அதைத்தான் நீ தவருக எடுத்துக்கொண்டு விட்டாயா? சரி. இப்போது உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நாலு மாதங்களுக்கு முன்னுல் ஒரு தடவை ஆபீசுக்குப் போகும்போது மணிபர்ஸை எடுத்துக்கொள்ள மறந்துவிட்டேன். பஸ் நகர்ந்த பின்புதான் ஞாபகம் வந்தது. டிக்கட் வாங்க வேண்டுமே? என்ன செய்வது? நான் தவியாய்த் தவித்துவிட்டேன். அதை உணர்ந்துகொண்ட சங்கரன் எனக்கும் சேர்த்து டிக்கட் வாங்கினுர். அதை மறுப்பதற்கு முடியவில்லை, என்னுல் இந்தச் சம்பவத்தை அன்றே உங்களிடம் தெரிவித்திருக்கலாம். இதைப் பெரிய அவமானமாகக் கருதி உங்களிடம் சொல்லாமல் இருந்துவிட்டேன். அவரை நம் வீட்டில் கண்டதும் எனக்குப் பயம் வந்துவிட்டது. அவரே அந்தச் சம்பவத்தைச் சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று அசட்டுத்தனமாகத் தவித்தேன். அதனுல், வேறு ஒன்றும் சொல்லவில்லையா? என்று கேட்டேன். ஒரு தடவை எனக்கு உதவியவர் என்ற நன்றியுணர்வைத் தவிர வேறு எந்த எண்ணமும் எனக்குக் கிடையாது..."

சட்டென்று திரும்பி, ஒவ்வொரு படியாக அடிவைத்துக் கொண்டு மாடியை நோக்கிச் செல்லும் வனஜாவையே பார்த்துக்கொண்டு நின்றனர் தாயும் தனயனும்.

சங்கரனுக்கு என்ன சமாதானம் கூறுவது?' என்ற கடினமான சிந்தனையில் ஆழ்ந்தான், கோபு.

"மாலா"

கலை இலக்கிய மாத இதழ்.

தனிப்பிரதி அணு 0—4—0

வருட சந்தா ரூ 3—0—0

மானேஜர் 'மாலா'

சென்னை-18.

எங்கள் மனமார்ந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

ஸ்டாண்டர்ட் டென்

உறுதியான கார்

பூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்)
பிரைவேட் லிமிடெட்.
சென்னை - பெங்களூர் - உதகை



மன மாற்றம்

பாட்டி மடியில் கதை கேட்டு வளர்ந்தவன்நான். நாள் தவறினுலும் நான் கதைகேட்பதுதவருது. அறியாப் பருவத்திலே, அந்தக் காலத்திலே எனக்குப் பாட்டி சொன்னதுதான் வேதம்.

அரும்புப் பிராயத்திலே பாட்டி உரைத்துதான் நான் பெற்ற அறிவு அமுதம். சாதம் ஊட்டிடும் போது அடம்பிடிப்பேன். அன்போடு நிலவைக் காட்டியும், கதையைக்கூறியும் உணவோடு கருத்தையும் ஊட்டியது என் பாட்டிதான்!

'நீ பெரியவனுனல் இன்சூரன்சு மட்டும் செய்யாதே! ஆயுள் இன்சூரன்சு செய்தால் ஆயுசு குறைந்து விடும்' என்று பாட்டி கூறுவது உண்டு. இதுநடந்தது ஏறத்தாழ 30 வருடங்கள் ஓடி விட்டன. ஆனுல் இப்போதோ, ஆயுள் இன்சூரன்சின் முதல் ஆதரவாளன் நான் தான். இந்த மனமாற்றம் எப்படி ஏற்பட்டது தெரியுமா? அதற்கும் காரணம் பாட்டிதான்...

எனக்கு அப்போது வயது 25. எப்படியோ ஒருவேலை கிடைத்தது. எங்கே தெரியுமா? மதுரையில்! பெற்றோரை இளம் வயதிலேயே 'சாப்பிட்டுவிட்ட' எனக்குப் பாட்டி தான் எல்லாம்! மதுரையில் வேலையை ஏற்றுக்கொண்டபின்னர், சுற்றி அலேந்து ஒரு வீடுகிடைத்தது வாடகைக்கு! அந்த வீட்டுக்காரர் மிகவும் நல்லவர். ஒரு கடையை வைத்துக் காலத்தை ஓட்டிக்கொண்டு இருந்தார். நான் கொடுத்த வாடகைப் பணமும் அவருக்குப் பெரிதும் உதவியது.

காலம் சுழன்றது, கறங்குபோல! ஒருநாள்! அவருக்கு உடல்நிலை சரி இல்லை என்றுபடுத்தார் டாக்டரை அழைத்து வந்து காட்டச் செய்தார்கள். மருத்துவமனையில் சேர்ப்பது நல்லது என்று டாக்டர் சொல்லி விட்டார். நாட்கள் நகர்ந்தன. அவர் தன் ஒரே மகளையும், மனைவியையும் அனுதைகளாக்கிவிட்டுக் கண்ணை மூடிவிட்டார். கடையை இழுத்துச் சார்த்தவேண்டிநேரிட்டது. கொஞ்ச நஞ்சமிருந்த பணமும் கரையலாயிற்று; கடனே நாளுக்குநாள் ஏறிக் கொண்டே போயிற்று. பாவம் அவர்கள்! பாட்டியிடம் யோசனை கேட்க வந்தார்கள் கடனை அடைக்க வீட்டை விற்பதைத் தவிர வேறுவழி இல்லை என்றுணர்ந்த அவர்கள், என்ன செய்வது என்று கேட்க வந்தார்கள்!

அவர்கள் பட்டதுன்பத்தைப் பாட்டி இரக்கத்தோடும், உருக்கத் தோடும் கேட்டுக்கொண்டு இருந்தார்கள். எனக்கிருந்த கவலையெல்லாம் வேறு வீடுபிடிக்க 'வேட்டைக்கு'ப் போகவேண்டுமே! அது பற்றித்தான்.

பணமில்லை என்றுல் பாழும் உலகில் வாழ்வு இல்லை; குணமிருந்தால் மட்டும் குறை இல்லாமல் வாழமுடியாதே! பணம் பந்தியிலே குணம் குப்பையிலே' பாவம்! பணமில்லாவாழ்வு மணம் இல்லாமலே போன்றது. உங்கள் மகளுக்கு வேறு மணம் முடிக்கவேண்டும்...' பாட்டி கொட்டிய இரக்க மொழிகளைக்கேட்டுக் கொண்டே வந்தேன் எனினும் என் சிந்தனை யெல்லாம் இன்னொரு வீட்டைத் தேடிப் பிடிப்பது எப்படி என்பதிலேயே இருந்தது.

பேச்சு, திசை திரும்பியது.

'ஆமாம் உங்கள் வீட்டுக்காரர் இன்ஷ்யூர் செய்ய வில்லையோ?' என்று பாட்டி கேட்டதைப் பார்த்த போது எனக்கு ஏற்பட்ட வியப்பிற்கு எல்லையே இல்லை.

அடகடவுளே! இன்சூரன்சுசெய்தால் வாழ்நாள் சுருங்கிவிடும். இறப்பு நெருங்கிவிடும் என்று பேசும் பாட்டியா இப்படிக் கேட்பது? எனக்கு ஏற்பட்ட ஆச்சரியத்திற்கு அளவே இல்லை!

'என்ன பாட்டி இது! இன்சூரன்சு செய்தால் ஆயுள் குறைந்து போய்விடாதா? நீங்கள்கூட அடிக்கடி சொல்வீர்களே!' என்றேன். 'யார் சொன்னது? இன்சூரன்சு செய்தால் எப்படி ஆயுள்குறையும்? வெள்ளத்திற்கு அணைவேண்டும், வயலுக்கு வேலிவேண்டும், வாழ்விற்குக் காப்புவேண்டும். அவர் இன்ஷ்யூர் செய்து இருந்தால் அவர் குடும்பம் இப்படி நடுத்தெருவில் நிற்காது அல்லவா?' திணறிப் போனேன்; திகைப்பு மேலிட்டது எனக்கு, பாட்டி உரைகேட்டு!

உண்மையில் இப்போதே இன்ஷ்யூர் செய் நீ· உடனடியாகச் செய் நீ; பாட்டியின் அறிவுரை இது! நடந்தது இவ்வளவே! நொடிக்கு நூறு முறை மாறும் இயல்பு கொண்டது பெண்மனமாயிற்றே! பாட்டியின் கருத்து மாற்றத்திற்குக் காரணம் கேட்கமுடியுமோ?

அத்தோடு போயிற்று? பாட்டி முகத்தில் சிந்தனைரேகைகள் படர்ந்தன. வீட்டை ஏன்விற்க வேண்டும் அதற்கு ஒரு வழி இருக்கிறது. பாட்டி பீடிகை போட்டுப் பேசிய போது அந்த அம்மாவின் முகத்தில் ஈயாடவில்லை. எங்க பையனுக்கும் உங்க பெண்ணுக்கும் ஒரு கல்யாணத்தைச் செய்து முடித்துவிட்டால் போகிறது என்று பாட்டி சொன்னபின் மறுத்துப் பேசவோ, தட்டிக்கழிக்கவோ எனக்கு வாய்ப்பேது? உரிமை ஏது?



THE INDIAN BANK LTD.
ESTD 1907

தென்னகம் தன்னில் மிக்கச்
சீருடன் விளங்கும் நல்லோர்

நன்முறை வகுத்து நாளும்
நடத்திடும் பெரிய பாங்காம்.

எண்ணினால் நூற்றி னோடு
நாற்பது கிளைகள் சூழப்

பொன்விழாக் கண்டு மேன்மேல்
புகழுடன் திகழும் பாங்காம்.

அன்புடன், வந்த பேர்க்கு
அகமுக மலர்ச்சி யோடே

உண்மையாய்த் தொண்டுசெய்யும்
ஊழியர் நிறைந்த பாங்காம்.

அன்புடை மக்கள் பாய்ச்சும்
ஆதர வென்னும் நீரால்

என்றுமே செழித்து நிற்கும்
இந்தியன் பாங்கு தானே.

★

G. S. சுந்தரம்
காரியதரிசி

யார் தியாகி!

(கோவை வாணன்)

ஏதோ மனதுக்குள்ளே எண்ணமிட்டவளாய் நடந்துகொண்டிருந்தாள் முத்தம்மா. அவள் இடுப்பின்மேல் நீர்க்குடமொன்று வழி நெடுக பாடிக்கொண்டே வந்தது. 'தளுக் தளுக்கென்று' நீரோசை அவள் கருத்தை ஆதரிப்பதுபோலிருந்தது. அவளது வலக் கையில் வளையல்கள் ஓசை எழுப்பிக் கொண்டிருந்தன. அன்னம்போல் நடைநடந்து சென்றுகொண்டிருந்தாள் முத்தம்மா.

"ஏய், புள்ளே!......வழிவிட்டு நில்லு"—பின்னால் ரேக்ளாவை ஓட்டிக்கொண்டே வந்தான் நல்லப்பன்.

முத்தம்மா எண்ணக் கடலில் மூழ்கி இருந்தமையால் நல்லப்பன் சத்தம் போட்டது காதிலே விழாமல் மீண்டும் அன்னம்போல் சென்று கொண்டிருந்தாள்.

"ஏய், புள்ளே! நான் சொல்லிட்டே வர்றேன்! உனக்கென்ன திமிரா? ஒதுங்கி நடங்கறேன்"-தன் கைத் தடியை வண்டியின் சக்கரங்களிலே கொடுத்து 'கடகட' என்று ஒலியை எழுப்பினான்.

'கடகட' என்ற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டாள் முத்தம்மா. தன் எண்ணத் திரையை விலக்கிப் பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

வண்டியும் அருகில் வந்துவிட்டது.

முத்தம்மா தலை குனிந்தபடி நின்றாள். வண்டியும் அவள் அருகில் வந்து நின்றது. நல்லப்பன் முத்தம்மாவைப் பார்த்தான்.

"ஏய்!... நான் கத்திட்டே வர்றது உன் காதிலே விழலே? ஓரமாப் போனா என்ன? இந்தக் காலத்து பொம்பளைங்களே இப்படித்தான்" நல்லப்பன் அவளை விழுங்கி விடுபவனைப் போலப் பார்த்தான்.

இந்தக் காலத்துப் பெண்கள் என்றவுடன் 'சுருக்'கென்றது முத்தம்மாவுக்கு. கோபம் தலைக்கேறி விட்டது. முகமெல்லாம் 'குப்'பென்று வியர்த்துக் கொட்டியது.

"இந்தாய்யா!......கொஞ்சம் வாயை..."—முத்தம்மாவின் நாக்குக் குழறியது.

நல்லப்பன் முத்தம்மாவையே உற்றுப் பார்த்தான். இப்போதுதான் அவள் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்தான். எங்கோ பார்த்த முகமாக இருந்தது.

நல்லப்பன் முகத்தைக் கண்ட முத்தம்மா, நல்லப்பன் யாரென்

பதைக் கண்டுகொண்டாள். அவள் நாக்குக் குழறியது. அவள் முகம் நாணத்தால் சிவந்தது. மெதுவாகத் தலை குனிந்தாள். "மன்னிச்சிடுங்க' என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள். நல்லப்பன் அவளையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான்.

முத்தம்மா நீர்க்குடத்தோடு வீட்டுக்குள்ளே நுழைந்தாள். அவள் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கண்களிலே கலக்கம் தேங்கி இருந்தது.

"ஏம் முத்து ஒரு மாதிரியா இருக்கிறே!"

"இல்லையே!...ஏம்மா ?"

"இல்லே!...முகமெல்லாம் வேத்துப் போச்சே!...உன்னுடை மொகமே களையிழந்து போயிருக்கு, அதான் கேட்டேன்."

"வேறே ஒன்னுமில்லேம்மா!... கொளத்துக்கு நீர் கொண்டாரப் போனேன் வர்ற வழியிலே..."—தயங்கினாள் முத்தம்மா.

"வழியிலே......என்ன நடந்தது? சொல்லு முத்து!"—முத்தம்மாவின் அன்னை திடுக்கிட்டுக் கேட்டாள்.

"அம்மா!...வேறே ஒன்னும் நடக்கல்லே. உன் அண்ணன் மவன் தான். அவரு வண்டியிலே வந்தாரு. நான் பார்த்துட்டு ஓடியாந்திட்டேன்." "யாரு.........நல்லப்பனா!?"

"க்கும்... நல்லப்பனேதான்!"

"வந்துட்டானா?......உன்னைப் பார்த்தானா முத்து?"

"ம்...பேசினாரு! அவரும், அவர் முகமும், அவருமீசையும்...... அடப்பப்ப......பாக்கவே குலையெல்லாம் நடுங்குது!"

"கொஞ்சம் பார்த்து நல்லா நடந்துக்கும்மா முத்து. அவனொரு முரடன். எங்கண்ணன் நல்லவன் தான். அவனுக்குப் பொறந்தவன் இப்படி இருக்கிறானே"—நொந்து கொண்டாள் முத்தம்மாவின் அன்னை.

2

"அத்தான்!"

"என்ன முத்து ?"

முத்தம்மா விசும்பி விசும்பி அழுதாள்.

"என்ன முத்து? என்ன நடந்திச்சு? சொல்லு முத்து!...ஏன் அழறே ?"

"அத்தான்!"—முத்தம்மா 'கோ' என்று வாய்விட்டு அழுதாள்.

"என்ன முத்து ?... விஷயத்தைச் சொல்லாமே!"—தன் மேல்துண்டால் அவள் கண்களைத் துடைத்தான்.

மருதன், முத்தம்மாவின் அத்தான். சிறிய மாமன் மகன். அதாவது, முத்தம்மாவினுடைய அன்னைக்குத் தம்பி மகன். மருதனும் முத்தம்மாவும் சிறுவயது முதற்கொண்டே ஒன்றுகப் பழகிவந்தனர். மருதன் அதே ஊரில் இருந்ததால் என்றும் ஒன்ருகவே இருக்க முடிந்தது. ஆனல், நல்லப்

பன் அடுத்த ஊரில் இருந்ததால் முத்தம்மாவுக்கு அவனேடு பழக வாய்ப்புக் கிடைக்கவில்லே.

"அத்தான்!...நல்லப்பன் வந்திருக்காரு தெரியுமா ?"

"தெரியுமே !... அவன் தான் போக்கிரி யாச்சே !"

"ஆமா !...அந்தப் போக்கிரி மச்சான் செஞ்ச வேலேதான் இப்போ நமக்குத் தொந்தரவாயிடுச்சு."

"என்ன சொல்றே முத்து ?" வியப்புடன் பார்த்தான் மருதன்.

"நான் உங்களேக் கண்ணுலம் கட்டிக்கக் கூடாதாம். நல்லப்பனேத்தான் கட்டிக்கணுமாம்."

"யார் சொன்னுங்க ?"–மருதன் புருவங்கள் இரண்டும் ஒன்று கூடின.

"பெரிய மாமன்தான் வீட்டிலே வந்து அம்மா கிட்டே சொன்னுரு. அம்மா...!"

"அம்மா......சம்மதிச்சிட்டாங்களா ?"—குறுக்கிட்டான் மருதன்.

"ஆமாம் அத்தான்" என்று கூறியவள் மீண்டும் 'கோ' என்று வாய் விட்டு அழுதாள்.

மருதன் குழம்பிய மனத்துடன், அருகிலிருந்த பாறைமேல் சாய்ந்தான். நீண்ட நேரம் அவர்களிடையே அமைதி நிலவியது. திடீரென்று மருதன் எழுந்தான்

"முத்து !...நல்லப்பன் சம்மதிச்சாரு ?"

"அவரு சொல்லித்தான் பெரிய மாமன் வந்தாரு."

மருதன் நீண்ட பெருமூச்சுவிட்டான். அவன் கண்கள் கலங்கியிருந்தன. அவன் மார்பு விம்மி விம்மித் தணிந்தது.

"வேறே ஏதுனுச்சும் சொன்னுரு முத்து ?"

"ம்......ஆமாம் !... கண்ணுலம் கட்டிக்கிறதுக்குச் சம்மதிக்கலேன்னு,—நாங்க வாங்கி இருந்தோமே ஆயிரம் ரூபாய் கடன், அதைக் கொடுத்திட்டு மறுவேலே பார்க்கச் சொன்னுரு"—முத்தம்மா கண்களேத் துடைத்துக்கொண்டே கூறினுள்.

"முத்து !... பக்கத்திலே வா...!"— அமைதியாக அழைத்தான் மருதன்.

முத்தம்மா; மருதன் அருகில் வந்து நின்ருள்.

"முத்து!...சின்னவயசிலேயிருந்து நானும், நீயும் நெருங்கிப் பழகினேம். இப்போ பிரியவேண்டிய நிலேயிலே இருக்கிறேம். உங்கப்பா இருந்திருந்தா இந்த கண்ணுலத்துக்குச் சம்மதிக்கமாட்டாரு. இல்லேயா முத்து ?"

முத்தம்மா தலேயசைத்து ஒப்புக் கொண்டாள்.

"முத்து ! உன் பெரிய மாமா பணக்காரரு. அவரு நெனச்சது என்னவேணுமானுலும் செஞ்சிடுவாரு. அவரு மகன் நல்லப்பன் கூடத்தான் நல்லவன். அவனேடை சேர்ந்த கூட்டுறவு அவனே இப்படியாக்கிடுச்சு. அவன்தான் என்ன செய்வான்? பாவம்!......காலம் ரொம்பப் பொல்லாததா இருக்குதே! எல்லாம் பணம் வேலே செய்யுது முத்து, பணம் வேலே செய்யுது!"

"அத்தான் !...நீங்க கூடவா இப்படிப் பேசறீங்க ?"

"என்ன செய்யலாம் முத்து? நாம் ஏழைங்க. அவங்க பணக்காரங்க. நம்மாலே என்ன செய்ய முடியும் ?"

"அத்தான்!...உண்மையா நான் சொல்றேன்! எனக்குமட்டும் இந்தக் கண்ணுலம் நடந்திச்சுன்னு, இதே கொளத்துலே விழுந்து செத்துப் போவேனே இல்லாமே பொழேக்கமாட்டேன் தெரியுமா ?" என்று கூறியவள், தனக்கெதிரே இருந்த குளத்தைச் சுட்டிக் காட்டினுள்.

"நல்லா பேசறே முத்து!... அழகா இருக்கு...நல்லப்பன் என்ன கெட்டவனு? இப்போ போக்கிரியா இருப்பான். கண்ணுலம் நடந்து உன்னேக் கண்டப்புறம் தன்னுலே திருந்திடுவான். இதுக்

காக, நீ ஏன் போய் கொளித்துலே விழறேங்கறே, நல்ல பொண்ணு போ !''

" அத்தான்!......இந்தக் கண்ணு லம் நடக்கணும்; பெரிய மச்சானைக் கட்டிக்கணும்னுதான் நீங்களும் சொல்றீங்களா ?''—அவள் குரலில் ஏக்கம் படர்ந்தது.

''முத்து! அவங்க மனசு மாதி ரியே நாம் நடந்துக்கணும் இல் லையா? நல்லப்பனையே நீ கண்ணு லம் கட்டிக்கவேணும். இதுதான் என் விருப்பம் !''

" அத்தான் !'' — வாய்விட்டுக் கத்தினுள் முத்தம்மா!

''ஆமாம் முத்து!...அவங்க தீர் மானம் செஞ்ச பிறகு நான் எப்படி உன்னைக் கண்ணுலம் கட்டிக்க முடி யும்? நல்லப்பனுக்காக நான் உன் னையே தியாகம் பண்றேன்! வீணு சண்டை சச்சரவு வளரக்கூடாது. நமக்குள்ளே எதுக்குச் சண்டை ?''

" அத்தான்!...நான்...வரட்... டுமா... !''

மருதன் தலையாட்டினன். முத் தம்மா நீர்க்குடத்தை எடுத்துத் தன் இடுப்பின்மீது வைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந் தாள். இப்போது அவள் நடையில் அன்னத்தின் சாயல் இல்லை. பதி லாகச் சோர்வே காணப்பட்டது.

மருதன் அவள் சென்ற திசையி லேயே பார்த்துக் கொண்டு இருந் தான். பிறகு, மனத்திற்குள் ஏதோ எண்ணமிட்டவனுய் அவ்விடம் விட்டகன்றான். ஆனுல், புதரில் பதுங்கி இருந்த அந்த நிழலைக் காணுமல் போகவில்லை.

3

மாவிலைத் தோரணங்களும், வாழைக் கன்றுகளும் கட்டப்பட்டு வீடு அழகாகக் காட்சி அளித்தது. திருமணம் மிக விமரிசையாக நடந்தேறியது. முத்தம்மா தான் மிகவும் சந்தோஷப்பட்டாள். மருத னுக்கு மகிழ்ச்சி. நல்லப்பன், தன் எண்ணம் நிறைவேறியதே என்று உள்ளூர மகிழ்ந்தான். நல்லப்ப னின் தந்தை ஓடியாடித் திரும ணத்தை நடத்தினுர்.

" முத்து !''

''......''—அவள் பேசவில்லை. தலை குனிந்து நின்றுள்.

''முத்து!......இத பாரு...வெக் கமா ?''

முத்தம்மா 'கலகல' வென்று சிரித்தாள். " என்னத்தான் ? ஏன் ?'' என்றுள்.

''முத்து!...நீ கொளத்திலே விழ றேன்னு...''

''என்னத்தான் வெளையாடுறீங் களா ?''

''என்ன முத்து? நீதான்...!''

''அதை இன்னும் மறக்கல் லியா?...இனி நான் ஏன் விழ றேன் ?''—மருதன் தோளில் சாய்ந் தாள் முத்தம்மா.

ஆமாம்: திருமணம் முத்தம்மா வுக்கும் மருதனுக்கும் தான் நடந்தது. நல்லப்பனே இருந்து நடத்தினுன். முத்தம்மாவுக்கும் மகிழ்ச்சி; எல்லோருக்குமே மகிழ்ச்சி! நல்லப்பன் பழையபோக் கிரி அல்ல; நல்லப்பனுகவே இருந்து காட்டினுன். நல்லப்பன் திருந்தி விட்டதில் எல்லோருக்குமே மகிழ்ச்சி !

''அத்தான்!......எனக்கொரு சந் தேகம்...!''

" இப்போ சந்தேகமா ?...நல்ல சந்தேகம்போ !...முத்து...!''என்று பரிவோடு அழைத்தான் மருதன்.

அத்தான்......பெரிய அத்தான் எப்படித் திருந்தினுரு? நான் எதிர் பார்க்கவே இல்லையே ''.

" அதுவா? அது பெரிய ரகசி யம் !''

" சொல்லுங்களத் தான் !''— குழைந்தாள் முத்தம்மா

" அன்னிக்கு நாம் பேசிக்கிட்டி ருந்தோமே கொளத்துக்கிட்டே. அப்போ நீ இது மாதிரி கண்ணு லம் நடக்குதுன்னு சொன்னதும். மெய்யாவே நான் பயந்துட்டேன். அப்புறம், பக்கத்திலே இருந்த

புதரிலே என்னமோ 'சலசல'ன்னு சத்தம் கேட்டது. கீழேபார்த்தேன். ரெண்டு பாதங்கள் மட்டும் தெரிஞ்சுது. அது நல்லப்பன் பாதங்கள் தான்னு தெரிஞ்சு கிட்டேன். நாம என்ன பேசறோமுன்னு கவனிக்க நல்லப்பன் வந்திருப்பான்னு நெனைச்சேன். அப்புறமா, ஒரு திட்டம் போட்டேன். அவனையே உசத்தி உசத்திப் பேசினேன் அவன் மனம் குளிர்ந்து போயிருக்கும். "என்னடா இவன் நமக்காக, தன் காதலையே தியாகம் பண்றான். இவன் உண்மையா நம்மை மதிக்கிறான்'னு நெனைச்சிருப்பான். அதனாலேதான் பேசாமே 'கண்ணாலம் வேண்டாமுன்'னு சொல்லிட்டு அவனே இருந்து நம்ம ரெண்டு பேரு கண்ணாலத்தையும் முடிச்சு வைச்சான். எப்படி?''—மருதன் தன்னைத்தானே பாராட்டிக்கொண்டான்.

"நீங்க பெரிய தியாகிதான் போங்க!''

''முத்து!...நானா தியாகி? இல்லை; நம்ம ரெண்டுபேரையும் சேத்து வைச்சானே அந்த நல்லப்பன்தான் உண்மைத் தியாகி!''

''அத்தான்!''—மருதனைக் கட்டிக் கொண்டாள்.

'' என்ன முத்து?'' என்று கேட்க வில்லை மருதன். காரணம், அவள் கனி இதழ்கள் அவன் வாயைத் தடுத்துவிட்டன.

INDIAN COMMERCE & INDUSTRIES COMPANY PRIVATE LTD.,

ESTD. 1907.

Manufacturing Engineers, Machinery and General Merchant

Beehive Buildings, 95, Broadway, Madras-1.

Phones : 21972, 2020 — Grams "LUCKY" "BEEHIVE"

Proprietors :

BEEHIVE FOUNDRY ENGINEERING WORKS, MADRAS.

Structural & Mechanical Engineers

&

KOWTHA STEEL PRODUCTS, RAMAVARAPPADU (Krishna Dt.)

Structural and Mechanical Engineers and Producers of Manganese Steel Casting and other Varities, Traders. Dealers and Assemblers of Industrial Machinery.

Phone : 768 — Grams : "BEEHIVE"

Branches :

" KOWTHA BUILDINGS " Buckinghampet, Vijayawada.

Phone : 80 — Grams : "BEEHIVE"

10, Padmanagar, Secunderabad.

Phone : 74607 — Grams . "BEEHIVE"

மகாவித்துவான்

திருக்கோடிகாவல் கிருஷ்ணையர்

எல்லார்வி

"எதற்கு எது"

லயம் என்றால் புதுக்கோட்டை மான் பூண்டியா பிள்ளை என்பார்கள். புதுக்கோட்டை தட்சிணா மூர்த்தி பிள்ளை, பழனி முத்தையா பிள்ளை முதலிய லயவாத்திய வித்துவான்கள் மான்பூண்டியா பிள்ளையிடம் குருகுல வாசம் செய்தவர்கள்.

அவருடைய உள்ளம் தாள வாத்திய வித்துவான்களைத் தமக்கு வாரிசாக ஏற்படுத்தினதோடு திருப்தியுறவில்லை. சிறந்த வாய்ப்பாட்டு வித்துவான் ஒருவரையும் லயத்துறையில் வல்லவராக்கிப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்று எண்ணினார். அவர் கருத்துக்குக் கோனேரி ராஜபுரம் வைத்திய நாதையர் இலக்கானார்.

மான்பூண்டியா பிள்ளை புதுக்கோட்டை, திருநெல்வேலி இரு இடங்களிலும் தொடர்பு உடையவர். வைத்திய நாதையரைத் திருநெல்வேலிக்கு அழைத்துச் சென்று சில காலம் தம்மோடு இருக்கச் செய்து லயத்துறை நுணுக்கங்களைப் போதித்தார்.

வைத்தியநாதையர் அதற்கு முன்பு பாடிய முறைக்கும் அதன் பின்னர் பாடிய முறைக்கும் மிகுந்த வித்தியாசம் இருந்தது. முன்பு ராகம், கீர்த்தனைகள் முதலிய அம்சங்களில் நடுநிலையான பொதுஜனரஞ்சகம் நிறைவு பெற்றிருந்தது. பின்பு லய முக்கியத்துவம், நிரடான பல்லவிகள், பக்க வாத்திய வித்துவான்கள் பிரமித்து, செயலில் தடுமாறுகிற நிலை எல்லாராலும் நன்கு ரசிக்க முடியாத நிலைமை— இப்படி ஒரு மாறுபாடு. ஆனால் யாரும் அவரை அணுகி எதுவுமே சொல்லவில்லை. அனைவரின் நினைவுகள்-விமரிசனங்கள்—அவரவர் உள்ளத்திலேயே சமாதி பெற்றிருந்தன.

தஞ்சை ஜில்லாவில் ஓர் ஊரில் தனிகர் ஒருவர் இல்லத்தில் வைபவம். கோனேரி ராஜபுரம் வைத்திய நாதையர் கச்சேரி. அன்று அவருக்குத் திருக்கோடி காவல் கிருஷ்ணையர் வயலின்.

வைத்தியநாதையர் பிறந்தது மரத்துறை என்னும் ஊரில். பிற்காலத்தில் வாழ்ந்தது கோனேரி ராஜபுரத்தில். அதனால் அவரைப் பிற்காலத்தவர், 'கோனேரி ராஜபுரம் வைத்தியநாதையர் என்று குறிப்பிட்டனர். ஆனால் முற்காலத்துப் பெரியவர்கள் அன்பு குமிழியிட, மரத்துறை வைத்தா' என்பர்.

கிருஷ்ணையரின் சொந்த ஊர் திருக்கோடி காவல். அம்மான் ஊர் மரத்துறை. அவரும் அங்கேதான் பிறந்தார். அதனால் இளமையிலிருந்தே அவ்விருவரிடையேயும் நெருக்கமான நட்பு உண்டு. வயதில் இளையவரான வைந்தியநாதையரைக் கிருஷ்ணையர் உரிமையுடன் ஒருமையில் அழைத்துப் பேசுவார். வைத்தியநாதையருக்குக் கிருஷ்ணையரிடம் பெரியவர், ஒப்பற்ற கலைஞர் என்ற மரியாதை உண்டு.

அன்றையக் கச்சேரியில் வைத்தியநாதையர் ஒரு பல்லவி

பாடினார். கிருஷ்ணையர் வாசிக்கவில்லை. சற்று நேரம் இடக்கையில் வாத்தியமும் வலக்கையில் வில்லுமாக வைத்தியநாதையரையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். பிறகு வில்லையும் வயலினையும் கீழே வைத்துவிட்டார்.

'ஏன் வாசிக்கவில்லை?' என்று வைத்தியநாதையர் கேட்கவில்லை. தாள வாத்திய உதவியுடன் பாடிக்கொண்டிருந்தார்.

"இப்படி யெல்லாம் பாடினால் நான் உனக்கு வாசிக்கவே வர மாட்டேன்!"

வைத்தியநாதையர் பேசாமல் இருந்தார்.

"வைத்தா, சங்கீதம் ஜனரஞ்சகமாக இருக்க வேண்டும். அதில் லயவேலைப்பாடுகளும் ஓரளவு வேண்டியதுதான். அதுவும் ஜனரஞ்சகமாக பலரும் ஓரளவாவது புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். தலைக்குத் தகுந்தபடி குல்லாயா? குல்லாய்க்குத் தகுந்தபடி தலையா? சாதம் முக்கியப் பொருள் மற்றவை உபபதார்த்தங்கள். அவற்றில் சுள்ளென்று உறைக்கும் ஊறுகாயும் ஒன்று. பெரிய தேங்காய் அளவு மிளகாய்ச்சட்டினியை நடு இலையிலே கொண்டு வைத்து, ஒரு மூலையிலே நாலு பருக்கைகளை வைப்பது எந்த முறையில் சேர்ந்தது? லயம் இசையின் ஓர் அம்சம் என்பதை மறந்து லயவின்யாசத்திற்காகவே இசை என்பதை ஸ்தாபிப்பதுபோல் பாடுவது யாருக்குப் பிரீதி? இது கொஞ்சங்கூட சரி இல்லை!"

வைத்தியநாதயர் அந்தப் பல்லவியை அந்த அளவில் முடித்துவிட்டு மேலே பாடினார்.

அதன்பின் ஒரு போதும் அவர் அந்த முறையில் பாடவே இல்லை. அது மட்டும் அல்ல; கிருஷ்ணையரைத் தமது ஞானசிரியர்போல் பாவிக்கலானார். அடிக்கடி அவரது சிறந்த வாசிப்பை பக்தி சிரத்தையுடன் கேட்கலானார். தாமும் அவர் வழியைப் பின்பற்றிப் பாடத் தொடங்கினார். அவ்வாறு பாடுகிறபோது கிருஷ்ணையர் கூறியதிலே எத்தகைய உண்மை பொதிந்து கிடக்கிறதென்பதை நன்கு உணரலானார்: 'கோனேரி ராஜபுரம் வைத்தியநாதையர்' என்றால் இன்றும் கலைஞர்களும் ரசிகர்களும் கரங்கூப்பி அஞ்சலி செய்யும் மகிமையை அவர் பெற்றார்.

எனக்கும் பதக்கம்

12-12-1911-இல் டில்லி மாநகரில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழா நடைபெற்றது. அப்போது சென்னைப் பிரமுகர்கள் சிலர் கூடி அம்முடிசூட்டு விழாவை ஒட்டிச் சென்னையிலும் ஒரு வைபவம் கொண்டாடத் திட்டமிட்டனர். இந்து பத்திரிகையின் ஸ்தாபகர் கஸ்தூரி ரங்க ஐயங்கார், ஏ. ரங்கசாமி ஐயங்கார், நீதிபதி மணி ஐயர் முதலிய பலரும் இதில் பங்கு கொண்டனர்.

சிறந்த கச்சேரி ஒன்று அதில் இடம் பெற வேண்டும் என்று கருதியபோது, ராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் பூச்சி ஐயங்கார் என்ற ஸ்ரீநிவாச ஐயங்காரின் பெயர்தான் எல்லாருடைய மனத்திலும் தோன்றிற்று. அவர் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவைச் சித்தரிக்கும் பாடல் ஒன்றை இயற்றி, அதைக் கச்சேரியில் பாடச் செய்து, அதற்குத் தங்கப் பதக்கம் ஒன்றைப் பரிசாக வழங்கத் திட்டமிட்டனர். அன்புக்கு என்றுமே கட்டுப்படுகிற பூச்சி ஐயங்காரும் இசைந்தார்.

இந்தச் செய்தி எங்கும் பரவிற்று. திருக்கோடி காவல் கிருஷ்ணையரும் இதைப்பற்றிக் கேள்விப்பட்டார். அவர் உள்ளம் இயங்க ஆரம்பித்தது.

★ மதராசில் மைலாப்பூரில் நவீன வசதிகளுடன் கூடிய ரூம்கள் கொண்டது!

★ சிறந்த முறையில் உணவுப் பதார்த்தங்களைத் தயாரித்து தக்கமுறையில் கவனித்துக் கொள்வது!

★ ஏராளமான இட வசதியுடன், சுத்தமான சாதனங்கள் கொண்டது!

★ சாயந்திர வேளையில் உல்லாசமாக உட்கார்ந்து சந்தோஷத்துடன் சாப்பிடுவதற்குத் தக்க வசதிகள் கொண்ட கார்டன் சர்வீஸ்கள் உள்ளது!

குப்தாஸ்

ஸ்டேட்ஸ் ஹோட்டல்

61, கச்சேரி ரோட் மைலாப்பூர்

மதராஸ்–4.

சென்னை-600 008

208836

Phone : 55585

RAJAN & Co.,

PAPER MERCHANTS,
STATIONERS,
&
QUALITY PRINTERS.

★

Office :

4, CAR STREET : MADRAS-15.

★

Depot :

1, GOOMES STREET : MADRAS-1.

'ஐந்தாம் ஜார்ஜ்' மன்னர் முடி சூட்டு விழா வைபவத்தில் பூச்சி ஐயங்காருக்குத் தங்கப்பதக்கம், அவர் கச்சேரியில் வயலின் வாசிக்கப் போகும் எனக்கு...?'

திரும்பத் திரும்ப இதே கேள்விதான். உடனே சம்பந்தப்பட்ட பிரமுகரைக் கண்டு இதைப்பற்றிக் கேட்டார். அவர் சமாதானம் சொல்லலானுர்.

"உங்கள் யோக்கியதை எங்களுக்குத் தெரியாதா? கச்சேரிக்காக அவருக்குச் செய்கிற மரியாதை உங்களுக்கும் உண்டு."

"விசேஷப் பரிசான தங்கப் பதக்கம்?"

"அது கச்சேரிக்காக அல்ல; அவர் இயற்றிப் பாடப் போகிற பாடலுக்கு."

"இது கொஞ்சமும் சரியில்லை. சமயோக்கியதை உடையவர்களை ஒரே மேடையில் வைத்து ஒருவரை மட்டும் விசேஷமாகச் சம்மானிப்பதா? ஏன், அந்த சாகித்தியத்தை நான் செய்ய மாட்டேனு? எனக்கும் பதக்கம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்."

தன்மான உணர்ச்சியின் வலிமையே வலிமை! அதற்காகக் கிருஷ்ணையர் எவ்வளவுதூரம் போவார் என்று பிரமுகர்கள் நன்ருக அறிந்திருந்தனர். வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு பிரமுகர் சொன்னுர்: "சரி, நீங்களும் விழாவைச் சித்தரிக்கும் பாடல் ஒன்றை இயற்றி அன்று அவையில் பாடிவிடுங்கள்; உங்களுக்கும் பதக்கம் அளித்துக் கௌரவிக்கிருேம்."

கிருஷ்ணையர் அதே வேகத்தில் அங்கிருந்து வெளியேறினுர். வழியில் பூச்சி ஐயங்காரின் மாணவர் ஒருவரைச் சந்தித்தார். அவரிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்துப் பூச்சி ஐயங்கார் இயற்றியிருக்கும் பாடலைத் தெரிந்து கொண்டார். பிறகு தமிழ்ப் பண்டிதர் ஒருவரின் உதவியுடன் சாகித்தியம் ஒன்றைத் தொகுத்து அழகான வர்ண மெட்டும் அமைத்து விட்டார்! அவர் உள்ளம் களிப்பில் மூழ்கியது.

குறிப்பிட்ட தினத்தில் விழா நடந்தது. பூச்சி ஐயங்கார் கச்சேரி நடந்தது. கச்சேரி நடுவே புதிய பாடலை அவர் அழகாகப் பாடினுர். அவையோர் பல முறை கரகோஷமிட்டுப் பாராட்டினர். அது முடிந்ததும் நிர்வாகி கிருஷ்ணையருக்குச் சமிக்ஞை செய்தார். அவர் தம் சாகித்தியத்தை வாத்தியத்தில் இசைத்தார். வர்ணமெட்டு அற்புதமாக இருந்தது. ஆனுல் சாகித்தியம்?

அவையினர் அவர் பிடிவாதம் பற்றிப் பேசிக்கொண்டார்கள். வர்ணமெட்டின் உயர்வை ரசித்துப் பாராட்டினுர்கள். வாத்தியத்தின் மூலம் சாகித்தியத்தை வெளியிட்டதை எண்ணி நகைத்தார்கள். எப்படியாலுல் என்ன? பூச்சி ஐயங்காரைப்போல் அவரும் பதக்கம் பெற்று விட்டார்!

கிருஷ்ணையரின் கலை ஆற்றல் எவ்வளவு பிரசித்தமோ, அவ்வளவுக்கு அவருடைய முரட்டுப் பிடிவாதமும் உலகப் பிரசித்தம்! அந்தப்பிடிவாதத்தைக்கொண்டு அவர் எவ்வளவோ அரிய பெரிய செயல்களைச் சாதித்துக் கொண்டிருக்கிருர். அதற்குக் காரணம் மற்றவர்களுக்கு அவரிடம் உள்ள அன்புதான் என்று சிலர் கூறுவார்கள். அதில் ஓரளவு உண்மை உண்டுதான். ஆனுல் எல்லாருக்கும் அவரிடம் அத்தகைய மாசற்ற அன்பு தோன்றி வளரக் காரணம்? அவரிடம் நிறைந்திருந்த இணையற்ற கலைச் சிறப்பே அல்லவா? அத்துடன் அவர் அனைவரோடும் ஒட்டிப் பழகும் இயல்பும் உடையவர். வீண் வம்புகளில் ஈடுபட்டுத் தமது பொழுதைப் பாழாக்கிக் கொள்ளமாட்டார். ஆனுல், கலை சம்பந்தமாக எவருக்கும் தாழ்ந்து போகவும் மாட்டார்.

'திருக்கோடி காவல் கிருஷ்ணை யர்' என்றால் ரசிகர்கள் உள்ளத்திலே அன்பும், கலைஞர்கள் உள்ளத்திலே மட்டற்ற மரியாதையும் தோன்றி வளர இவரே காரணம் ஆகும்.

வராளி

சென்னை திருவல்லிக்கேணியில் 1910-இல் தனவந்தர் ஒருவர் இல்லத்தில் திருமண வைபவம் நிகழ்ந்தது. அதில் சிறந்த சங்கீதக் கச்சேரி ஒன்று நடைபெற்றது.

பாடகர் சிறந்த யோக்கியதை உடையவர். மகனீயர் ஒருவரிடம் முறையாகக் குருகுல வாசம் செய்து இசை பயின்றவர். கந்தர்வ கானம் பொழிபவர். இனிமையும் இசைச் சிறப்பும் நிறைந்த அநேகக் கிருதிகளை இயற்றியவர். ணக்குகுன்ருகவிளங்கியவர். நேர்மையில் வழுவாத சீலர்.

வயலின் இசைத்தவரும் சாமானியர் அல்லர். சிறந்த குரு பரம்பரையில் வந்தவர். தெளிவான ஞானம் படைத்தவர். அவர் காலத்தில் அவர் கையாண்ட வாத்தியத்தில் அவருக்கு இணை எவருமே இல்லை.

கச்சேரி நடுவே வித்துவான் வராளி பாடினார். அவர் பாடி விட்டதும் வயலின் வித்துவான் வாசிக்க ஆரம்பித்தார். மிகப் பிரமாதமாக வாசிக்கத் தொடங்கினார். பாடகர் பாடிய வழிமுறைகளையும் மீறி எங்கெங்கெல்லாமோ சஞ்சாரம் செய்தார். அந்த வாத்தியத்திற்கும் அந்த ராகத்திற்கும், அவருடைய ஞானத்திற்கும், அவர் வாசிப்பு முறைக்கும் உள்ள பொருத்தம்!

ரசிகர்கள் 'ஆகா ஆகா' என்று ஆர்பரித்த வண்ணம் குதூகல உணர்வுடன் ரசித்துக்கொண்டிருந்தனர்.

அந்நிலையில் வயலின் வித்துவான் புங்கானு-புங்கமாய்க் கற்பனையைப் பொழிந்து கொண்டிருக்கையில்-வாய்ப்பாட்டு வித்துவான் குறுக்கிட்டார். அவர் அவ்வாறெல்லாம் நடந்து கொள்ளும் இயல்புடையவரல்லர். ஆகவே ரசிகர்கள் திகைத்தார்கள், வருந்தினார்கள். வயலின் வித்துவானுக்கு அளவு கடந்த வருத்தம்; கோபமும் கூட!

வாய்ப்பாட்டு வித்துவான் அனைத்தையும் உணர்ந்தே இருந்தார்; ஆனால் உணராதவர் போல் செயலில் ஈடுபட்டு மேல் நடவடிக்கைகளைத் தொடரலானார். கச்சேரி மேலே தொடர்ந்தது.

கல்யாண வீட்டின் ஒரு பகுதியிலேயே வாய்ப்பாட்டு வித்துவானுக்குத் தங்க இடமளித்திருந்தார்கள். நாலு வீடுகள் தள்ளி ஒரு வீட்டில் வயலின் வித்துவான் தங்கியிருந்தார். அந்த வீட்டுக்காரர் சிறந்த ரசிகர். பாடகருக்கு நன்கு பரிச்சயம் உடையவர். இரவுச் சாப்பாட்டுக்குமேல் அவரை அழைத்துப் பாடகர் இரகசியமாகச் சொன்னார் :

"எல்லாரும் படுக்கப்போகுமுன் உங்கள் வீட்டு வெளிக் கதவைத் திறந்து வையுங்கள்."

ரசிகர் திகைத்தார். "ஏன்" என்று கேட்டார்.

"அந்த நேரத்தில் வயலின் வித்துவான் வயலின் வாசிக்கத் தொடங்குவார்."

"அப்படியா? உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"கச்சேரியில் அவர் வராளி வாசித்துக் கொண்டிருக்கையில் பாதியில் அவர் வாசிப்பை நான் தடைப்படுத்தியதை மறந்துவிட்டீர்களா?"

"மறக்கவில்லை; ஆச்சரியப்பட்டேன்; பலரும் ஆச்சரியப்பட்டார்கள். அப்படி ஏன் செய்தீர்கள்?"

"காலவரையறையின்றி அந்த ராகத்தை அவர் வாசித்துக் கேட்க வேண்டுமென்றுதான்."

"புரியவில்லையே?"

"அவர் உள்ளத்திலே எழுந்த வேகம் தடைப்பட்டால் அது ஒன்றுக்கு நூருகப் பெருக்கெடுக்கும். இரவு முழுவதும் வராளி வாசிப்பார், கேளுங்களேன்."

"அது சரி தெருக்கதவை ஏன் திறந்து வைக்கச் சொல்கிறீர்கள்?"

"நான் அங்கே வந்து வராந்தாவில் ஒளிந்திருந்து அவர் வாசிப்பைக் கேட்கத்தான்."

"நேரில் வந்து கேட்டால் என்ன?"

"அது ஒரு ரகசியம். தாம் வாசிப்பதை யாராவது கேட்க முயல்கிருர்கள் என்று தெரிந்தால் அவர் வாசிக்கவே மாட்டார். அது அவர் இயல்பு. வீட்டின் முன்புறத்திலே அமர்ந்து வாசித்தால் தெருப்பக்கத்திலிருந்து கேட்டுவிடக்கூடும் என்று உட்புறத்திலே உட்கார்ந்து வாசிப்பார்."

ரசிகர் வியப்புடன் விடை பெற்ருர்.

இரவு மணி பன்னிரண்டு. வயலின் வித்துவான் வீட்டின் உட்புறத்தில் முற்றத்து ஓரமாக அமர்ந்து வாசித்துக் கொண்டிருந்தார். வராளிதான். தெருக்கதவு தாளிடாமல் வெறுமனே சாத்தியிருந்தது. மெல்லச், சந்தடியின்றி அதைத் திறந்து கொண்டு உள்ளே வந்த வாய்ப்பாட்டு வித்துவான் வராந்தாவில் கிடந்த பெஞ்சில் படுத்தார். அங்கவஸ்திரத்தால் அங்கமெல்லாம் மூடி மறைத்துக்கொண்டார். உள்ளே இருந்து பொங்கி வரும் இசையில் மூழ்கிப் போனுர்.

நேரக் கணக்கு வாசிப்பவருக்கும் தெரியாது; கேட்பவருக்கும் தெரியாது. வாசிப்பைச் சிறிது நிறுத்தித் தாம்பூலம் தரித்துக் கொண்ட வயலின் வித்துவான் மீண்டும் வாசிக்கலானுர். நேரம் செல்லச் செல்ல வாயில் தாம்பூல எச்சில்நீர் மிகுந்தது. அதைத் துப்புவதற்காக வாயிற்புறம் வந்தார் அவர். வாய்ப்பாட்டு வித்துவானும் அதை எதிர்பார்த்திருக்க வேண்டியவர்தாம். தெரிந்திருந்தும் மறந்ததுபோல் இருந்தார்.

'பெஞ்சில் படுத்திருப்பவர் யார்......?...இந்த அங்கவஸ்திரம் யாருடையது?......'

இப்படி எண்ணமிட்டபடி அருகில்சென்ற வயலின் வித்துவான் படுத்திருந்தவர் மேலிருந்த அங்கவஸ்திரத்தை விலக்கினுர். வாய்ப்பாட்டு வித்துவான் எழுந்து நின்ருர். கூப்பிய கரத்துடன் முறுவலித்துக்கொண்டே "எதிர்பார்த்த பாக்கியம் கிடைத்து விட்டது. வராளி மிகமிகப் பிரமாதம்!" என்று வாய் நிறையப் புகழ்ந்தார்.

அதற்குமேல் வயலின வித்துவான் வாசிப்பைத் தொடரவில்லை.

வாய்ப்பாட்டு வித்துவான் ராமநாதபுரம் ஸ்ரீநிவாச (பூச்சி) ஐயங்கார்; வயலின் வித்துவான் திருக்கோடி காவல் கிருஷ்ணையர் அவர்கள்தான்.

கலையைப் பெறுவதிலும் தருவதிலும் கிருஷ்ணையர் ஆண்ட வழிமுறைகள் குறிப்பிடத் தக்கன. தம்மிலும் சிறந்த ஆற்றல் உடைய வேறு வாத்திய வித்துவான்கள், வாய்ப்பாட்டு வித்துவான் முதலியோரிடமிருந்து மேன்மையான அம்சங்களைப் பெறுவதில் அவர் சற்றும் பின்வாங்கமாட்டார். கௌரவம். தாழ்வு என்ற பாகுபாடுகள் அந்த அம்சத்தில் அவருக்கு இல்லை. வீணை தனம்மாள், மதுரை புஷ்பவனம் ஐயர் முதலியோரிடமிருந்து அபூர்வமான சில 'சங்கதி'களை அவர் பெற முயன்றது உண்டு என்பர் பெரியோர். அதே மாதிரி தம்மிடம் உள்ள சிறப்புக்களையும் யாரும் எளிதில் அறிந்து கொண்டுவிட அவர் இடமளிக்க மாட்டார்.

(தொடரும்)

WITH

BEST COMPLIMENTS

★

FROM

Bimal Roy Productions,

ANDHERI : BOMBAY-58

கங்கா, மாதவி என்ற இந்த இரு நடனக் கலைஞர்கள் பரத நாட்டியம், ஒரியண்டல் நடனம் முதலியபலவகைகளை முறைப்படி கற்றுக்கொண்டு பல இடங்களில் நடனம் புரிந்து வருகிறார்கள். இவர்களது அழகு நடனத்திற்கு மிகவும் வசீகரமாக உள்ளது விரைவில் இவர்கள் சிங்கப்பூர் சென்று நாட்டியம் ஆடி மேலும் புகழடையப் போகிறார்கள்.



'பாவை விளக்கில்' இந்தக் காட்சியை யாரும் மறக்கமுடியாது.

Grams : MYWOODS

Phone : 84391
5-Lines

WITH
BEST COMPLIMENTS
from

WOODLANDS

BOARDING & LODGING

ROYAPETTAH **MADRAS-14.**



தற்பொழுது பல படங்களில் கதாநாயகியாக நடித்து வரும் ஈ. வி. சரோஜா அவர்கள் பரத நாட்டியத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர். நல்ல உணர்ச்சியுடன் நடிக்க வேண்டிய இடத்தில் இவர் அபாரமாகவே நடிக்கிறார். "படிக்காத மேதையில்" இவரது நடிப்பை எல்லாரும் பாராட்டினர். தமிழ் நாட்டில் சிறந்த நடிகை என்ற பெயரை இவர் அதிசீக்கிரம் அடைந்து விடுவார்.

நான்கு அறிஞர்கள் ★ ★ ★ ★

அரசியல் அறிஞர்

இராஜாஜி அவர்கள், இரைச்சல் இல்லாது படாடோபமில்லாது தாம்மேற்கொண்ட எத்துறையிலும் முதன்மைபெறும் வாய்ப்பைப் பெற்றவர். அரசியல் சதுரர் என்று அனைவராலும் புகழப்பெற்றவர். பாரதத்தாயின் தவப்புதல்வரான அண்ணல் காந்தியடிகளின் அரிய நண்பர். அரசியல் வேலைகளில் அதிகப் பங்கு கொண்டவர். இந்திய நாட்டின் சுதந்தரத்திற்குப் பன்முறை சிறைசென்றவர். இன்று தள்ளாதவயதிலும் மனோதைரியத்துடன் 'சுதந்திரா' கட்சியை அமைத்துப் பொதுமக்களின் தொண்டுகளிலே தம் காலத்தைக் கழித்து வருகின்றார். ஆன்மீயத்துறையிலும் அரும்பாடுபட்டுவருகிறார்.

அனுபவ அறிஞர்

டாக்டர். சி. பி. இராமசுவாமி ஐயர் அவர்கள் முகத்தோற்றத்திலேயே முதிர்ந்த அறிஞர் என்பதைப் புலப்படுத்தும் அமைப்புக்கொண்டவர் அரசியல், கலை, முதலிய எத்துறைகளிலும் வல்லுநர் என்பது உண்மை. திருவிதாங்கூர் சமஸ்தானமே சொல்லும் இவரது நுட்பத்திறனை. கூரிய அறிவு பெற்ற இவரது ஆற்றலைப் பயன்படுத்திக் கொண்டவர் பலராவர். இவரது நுட்ப அறிவைக்கேட்டு முன்னுக்கு வந்த பலதொழில் வல்லுநர்களும் உண்டு.

தொழில் அறிஞர்

ஜி.டி. நாயுடு அவர்கள் இந்தியர்களால் அரிய பொருள்களை உற்பத்திசெய்ய இயலுமா என்று சங்கைகொண்டவர்களுக்கு ஒரு சவாலாக விளங்கும் ஒரு தொழிலதிபர். இன்று கோயம்புத்தூரிலே இவரது தொழிற்கூடம் கருத்துக்கும் கண்ணுக்கும் விருந்தாக உள்ளது மேல்நாட்டு விஜயத்திற்குப்பின் கூரிய அறிவுத்திறன் காரணமாய் நூதனமாக உற்பத்தி செய்த உபயோகக் கருவிகளின் சாதனங்கள் பல. இவர்கருமமே கண்ணாய் உழைப்பவர். இவரது சேவை பெரிய அளவிலே பயன் படுத்தப்படும் காலம் வரவேண்டும்.

இசை அறிஞர்

அரியக்குடி அவர்கள் வயது எழுபதானாலும் எள்ளளவும் தளர்ச்சியில்லாது இசை மழையைப் பொழிந்துவரும் அறிஞராவர். இளம் பருவத்திலே இடைவிடாது இசைப் பயிற்சி செய்துவந்ததால் இவ்வளவு வயதாகியும் தலை சிறந்துவிளங்குகின்றார். தென்னிந்தியாவிற்குப் புகழ் வாங்கித்தந்த இவரது இசை நுட்பத்திறனைப் பாராட்டி இந்திய அரசாங்கம் இவருக்குப் பல பட்டங்களை வழங்கியிருக்கின்றது வடமொழியில் நல்ல அறிவு பெற்ற இவரது சங்கீதம், வார்த்தை சுத்தமாகவும், கம்பீரமாகவும் விளங்குகின்றது இவரது சிஷ்யர்களுக்கு நல்லபெருமை இருந்து வருகிறது தற்பொழுது.

—த. ரா. ரா.

குறிப்பு:– இந்த நான்கு அறிஞர்களையும் சைத்ரீகர் திருதூதன் அவர்கள் பென்ஸிலினால் வரைந்துள்ளார்.



அரசியல் மேதை ஸ்ரீராஜகோபாலாச்சாரி அவர்கள்

அனுபவ மேதை ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள்



தொழில் மேதை ஜி. டி. நாயுடு அவர்கள்.

சங்கீத மேதை ஸ்ரீமான் அரியக்குடி அவர்கள்



"அம்மா, போயிட்டு வாரேன்..."

தென்னிந்தியாவில் ஒவ்வொரு நாளும் சுமார் இரு கோடி மக்கள் பஸ் பிரயாணம் செய்கின்றனர். முக்கியமான ஒவ்வொரு கிராமத்துக்கும் திறமையான பஸ் போக்கு வரத்து உண்டு.

பஸ் பிரயாண போக்கு வரத்தில் ஒரு தரத்தை நிர்ணயிப்பது மட்டும் போதாது. இதனை 1920ஆம் ஆண்டு முதலே டிவிஎஸ் உணர்ந்திருக்கிறது. புது பஸ் கம்பெனிகள் பலவற்றை அமைப்பதற்கு ஆக்கம் அளித்த ஸ்தாபனம் டிவிஎஸ். புதுக் கம்பெனிகளுக்கு வேண்டிய பொருளாதார உதவி செய்தல், பஸ் பாடிகளைக் கட்டுதல், பஸ்களைச் சரிவரப் பராமரிப்பதற்கு வேண்டிய பயிற்சி அளித்தல், டயர்களை ரீடிரெட் செய்து புதுப்பித்தல், தேய்ந்து போன உருப்புக்களுக்கு புத்துயிரளித்தல் முதலிய பணிகளைச் செய்ய தென்னகத்தில் டிவிஎஸ் ஸ்தாபனம் தோன்றியது. தென்னிந்தியாவின் சாலைப் போக்குவரத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்க டிவிஎஸ் ஸ்தாபனங்களின் வளர்ச்சி ஓர் அளவு கோலாகும். மோட்டார்த் தொழிலில் நாள்தோறும் பெருகி வரும் தேவைகளை டிவிஎஸ் ஸ்தாபனங்கள் பூர்த்தி செய்கின்றன.

பஸ் பிரயாணத்தில் பயமில்லை; பத்திரமாக குறித்த காலத்தில் போய்ச் சேரலாம். இதனாலேயே "போயிட்டு வாரேன்" என்று சொல்லும் பொழுது மன உறுதி செயலாக உருவாகிறது.

டி. வி. எஸ். ஸ்தாபனங்கள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்
சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட். மதருஸ்-பெங்களூர்-செகந்திராபாத்
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
புதுக்கோட்டை-மதருஸ்-கோயமுத்தூர்
மதருஸ் ஆட்டோ ஸர்விஸ் பிரைவேட் லிமிடெட், மதருஸ்-பெங்களூர்
சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை
மதருஸ் மோட்டார் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட், மதருஸ்
இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்ட் அக்ஸெஸரீஸ் பிரைவேட் லிமிடெட் மதருஸ்
சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட், மதருஸ்

TVS டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை

JWT/TVS/U 927a

டாக்டர் பார்க்கவி

கிருஷ்ணா

வண்டிக்கு இரண்டாவது மணியும் அடித்து விட்டான்...லேடி டாக்டர் பார்க்கவி பிளாட்பாரத்தை அடைந்ததும், கார்டு பச்சைக் கொடியையும் காட்டி விட்டான்.

இஞ்சின் ஊதியது. நகரும் வண்டியினுள் அவசர அவசரமாக தன் உடம்பைப் புகுத்திக் கொண்டாள் பார்க்கவி. சிறு தோல் பெட்டியையும், ஹோல்டாலையும் போர்ட்டர் ஓடிக்கொண்டே ஜன்னல் வழியாகக் கொடுத்தான். ஒரு ரூபாய் நோட்டை அவன் கையில் வேகமாகத் திணித்து விட்டு உட்புறம் திரும்பினாள் பார்க்கவி.

அது ஒரு மூன்றும் வகுப்புப் பெண்கள் பெட்டி. பார்க்கவியிடம் முதல் வகுப்பு டிக்கட் இருந்தது. இனிமேல் காலையில் வண்டி ஒலவக்கோடு ஜங்ஷனில் நின்ற பிறகுதான் மாற்றிக்கொள்ள வேண்டும். எக்ஸ்பிரஸ் ஆதலால் மற்ற ஸ்டேஷன்களில் நிற்காது.

பெட்டியையும் ஹோல்டாலையும் தொங்கு பலகை மேல் வைத்து விட்டு ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டாள் பார்க்கவி. ஜன்னல் வழியாக வீசிய காற்று இதமாக இருந்தது. வளர்பிறைச் சந்திரன் தந்த மங்கலான ஒளியில், வானும், மலையும், மரங்களும், ஓடி வரும் கனவுலோகமாகக் காட்சியளித்தன.

பார்க்கவி வண்டியினுட்புறம் பார்வையைத் திருப்பினாள். அதிகக் கூட்டமில்லை. ஒரு நாயர் குடும்பம்...நாகரிகமான பெண் தான். தன் குழந்தையை, கீழே தளத்தில் படுக்கையை விரித்துவிட்டிருந்தாள். சற்றே உதடுகள் பிரிய, கண்கள் செருக, அந்தப் பெண் அடிக்கொரு தரம் தூங்கி வழிந்து கொண்டிருந்தாள். அவளுக்கு அந்தத் தூக்கமும் ஓர் அழகாகத்தானிருந்தது. எதிர் ஸீட்டில் கன்னங்கரேல் என்று ஒரு கொங்கு நாட்டு மங்கை இருந்தாள். வெற்றிலைக்காவி படிந்த பற்கள் வெளியே தெரிய, சாய்ந்த நிலையில், கூடைமேல் முழங்கைகளைப் போட்டவாறு குறட்டை விட்டுக்கொண்டிருந்தாள் அவள். காதுகளில் தொங்கிய பாம்படம் ரயில் ஆட்டத்திற்கொப்ப ஆடியது. அவள் மடியில் தலைவைத்தவாறு ஸீட்டை நிறைத்துக்கொண்டு ஒரு பன்னிரண்டு வயதுப் பையன் படுத்திருந்தான்.

பார்க்கவிக்கு அலுப்பாக இருந்தது. 'சை!' இந்த மீனாட்சி சாம்பசிவம் வற்புறுத்தியிருக்காவிட்டால் நான் இந்தப் பக்கமே வந்திருக்க மாட்டேன்...மண் வாசனை என்னை மறுபடியும் பிடித்துக்கொண்டு விட்டதே!...என்று நினைத்துக் கொண்டாள்.

உண்மைதான். பார்க்கவியின் மதிப்பிற்குரிய சிநேகிதி மீனாட்சி தன் ஒரே மகனின் கல்யாணத்திற்காக வற்புறுத்தி பார்க்கவியை அழைத்திராவிடில் அவள் ஏன் சென்னையைவிட்டு கோயமுத்தூருக்கு வரப்போகிறாள்!...கோயமுத்தூர் வரையிலும் தான் வந்தோமே, நம் பழைய ஊரையும்... குறிப்பாக...அந்தந்த இடங்களையும் பார்த்துவிட்டுப் போகலாமே என்ற நசைதான் உள்ளத்தைப் பிடுங்கியிருக்குமா?...ஒரு வேளை கல்யாணம் நடந்திருந்தால் நேராக சென்னைக்கே போயிருப்பாளோ என்னமோ? என்ன காரணத்தாலோ கல்யாணம் நடக்கவில்லை. சிநேகிதியிடம் அதைப்பற்றி

குடைந்து குடைந்து விசாரிக்க விரும்பாத பார்க்கவி. எடுத்த லீவை வீணாக்க விரும்பாமல், ரயி லேறிவிட்டாள் தன் ஊருக்கு.

கொச்சி எக்ஸ்பிரஸ், இருளைக் கிழித்துக்கொண்டு கேரளத்தினுட் புகுந்தது. வண்டியின் சத்தத்தில் எதிர் ஸீட்டு அம்மணியின் குறட்டை ஒலியும் அடங்கிவிட்ட படியால் இதர சப்தம் ஒன்றுமே யில்லை. இந்த நிலையில் திடீரென்று பேச்சுக்குரல் கேட்டது.

"நீங்கள் எந்த ஊருக்குப் போகி றீர்கள்?"

வைக்கத்துக்கு."

"சொந்த ஊரா? அல்லது வைக் கத் தப்பனை தரிசனம் செய்யப் போகிறீர்களா?"

"நான் கூட ஒரு தரம் வந்திருக்கி றேன், அஷ்டமிக்கு. அங்கே சுந்தர நம்பி என்று ஒருவர் இருக்கிறரல் லவா. அவரைத் தெரியுமோ?

"தெரியாமலென்ன...அவருக் குக்கூட அஞ்சாறு குழந்தைகள் உண்டோ......ஸூப்பரிண்டாக வேலை பார்த்தவர்......" "ஆ! அவரேதான்..." அவர் வீட்டில்



'யானைப்பாகனில்' ஒரு முக்கிய கட்டம்

தான் தங்கியிருந்து சுவாமி தரிசனம் செய்தோம்.

“அப்படியா? எங்க வீடு கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியை அடுத்து இருக்கிறது. மாம்பள்ளி விளாகம் என்று கேட்டால் சொல்லுவார்கள். நீங்கள் வந்தால் அவசியம் எங்க விட்டுக்கும் வரணும்.”

“ஓ! பேஷாக...”

பேச்சு தொடர்ந்து நடந்தது. அவர்கள் இருவருடைய பேச்சும் தடுப்புப் பலகையின் இந்தப் புறத்தில் உட்கார்ந்திருந்த பார்க்கவியின் காதுகளில் கணீரென்று விழுந்தது வைக்கத்து அஷ்டமி... மாம்பள்ளி விளாகத்துமடம் ‘சங்கர்!...சங்கர்... உன் வீடல்லவா அது! பேசுவது யார்? அவளாகத்தான் இருக்க வேண்டும். அம்முக்குட்டி.

பார்க்கவி தடுப்புப் பலகையின் இடை வழியாகக் கண்களை ஓட்டினாள்...

அம்முக்குட்டியே தான்... தலை நரைத்து சுருங்கிய முகத்துடன் சுட்ட கத்தரிக்காயைப் போலிருந்தாள் அவள். அவள் பக்கத்தில் ஒரு பதினெட்டு வயதுப்பெண்! தமயந்தியின் சித்திரம்போல சோகப் பதுமையாய் ஏக்கமாய் உட்கார்ந்திருந்தாள். சங்கரனின் தங்கையாக இருக்குமோ? அந்த ஜாடைகூட தெரிகிறதே!... ஆ! நினைவு வந்துவிட்டது. சரியாய் பாவாடைகூட உடுத்தத் தெரியாமல் அலைந்தாளே அந்தச் சின்னக்குட்டி சாரதா- அவளே தான் இவள்.

பார்க்கவி தலையை இந்தப் புறமாய் திருப்பிக்கொண்டாள் ‘முடியாது. நான் அவர்கள் கண்களில் படவே கூடாது என்று சொல்லிக் கொண்டாள். இடதுகை வலதுகை மணிக்கட்டைத்தடவியது, இரண்டு கருவளையல்கள்! பொன் பொதிந்த இரு யானைமுடி வளையல்கள்!...

கறையான் புற்றுப் போல காலம் சரிந்தது. இறந்த காலத்தில் மன வண்டு ரீங்காரமிட அங்கு சங்கரன் மலர்க்கொத்தாகச் சிரித்தான்.

சிறு குடுமியும், முழங்கால் வரையிலும், போன வருஷத்தில் எடுத்த ஓணக்கோடித் துண்டுமாக அவன் பார்க்கவியைத் தேடிக்கொண்டு வருவான். வேம்பநாட்டு ஏரிமேல் மிதந்து செல்லும் ஸ்டீம்-லாஞ்சுகளை வேடிக்கை பார்ப்பது இருவருக்குமே ஒரு பொழுதுபோக்கு. பள்ளிக்கூடம் விட்டால் நேராக அவர்களை போட்-ஜெட்டியில் பார்க்கலாம். பார்க்கவி பணக்காரவீட்டுப்பெண். அவளுக்கு நெய்யப்பம் பால், பாயசம் வத்சன் எல்லாம் அடிக்கடி கிடைக்கும். சங்கரன் வீட்டில் மரச்சீனிப்புழுக்கு வைத்திருப்பார்கள். சங்கரன் பங்குக்கு அதுகூட அதிகமாய் வராது. சொற்பம் கிடைத்தாலும் ஓர் இலையில் அதை மடித்து எடுத்துக்கொண்டு ஏரிக்கரைக்கு பார்க்கவியைத் தேடிக்கொண்டு வந்து விடுவான் அவன். ஆஸ்பத்திரிக்கும் போட் ஜெட்டிக்கும் இடையே உள்ள நிலப்பரப்பே இவர்களுடைய விளையாடுமிடம். சிற்றலைகள் ஆர்க்கும் வேம்பநாட்டு ஏரியில் கால்களைத் தொங்கவிட்டு நீரை அலைப்பதன் மூலம்-ஒன்றி, விளையாடுவதன் மூலம்-கிடைப்பதை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுதல் மூலம் - இருவருடைய மனமும் அவர்களை யறியாதவாறே ஒன்று சேர்ந்து விட்டனவோ?- நற்பண்பு அவர்களுடைய நல்லுணர்ச்சிகளையும் ஒன்றுகவே வளர்த்து வந்தது. உலகை அவர்களால் தனியாய்ப் பார்க்கமுடியவில்லை. இருவருமாகவே பார்த்தார்கள். கேட்டார்கள். உணர்ந்தார்கள். மிருதுவான உள்ளங்களில் அன்புவிதை ஆழமாகப் பதிந்துவிட்டது. பாவம்! அதை அந்தக் குழந்தைகள் அறியவில்லை

★

வைக்கத்தஷ்டமி வந்தது.

கேரளத்தின் பிரதான திருவிழா அது. ஒவ்வொருவரும் தத்தம் வீட்டிலேயே பண்டிகை போலக் கொண்டாடுவார்கள். ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே ஆலயத்தில் ஊட்டுப் புரையில் ஊர் மக்களுக்கு

தீபாவளி முதல் சென்னை பாரகன், பிரபாத்,
சரஸ்வதி மற்றும் தென்னகமெங்கும்

விருந்துணவு கிடைக்கும். பெண்களும் ஆண்களும் புனித நீராடி, விபூதி நிறைந்த மேனியோடு, நெற்றியிலே சந்தனக் குறி துலங்க ஆலயம் சென்று வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

கேரளத்தின் திருவிழாக்களில் முக்கியமாகப் பங்கு கொள்வது யானை. வைக்கத்து அஷ்டமிக்காகச் சில யானைகள் வந்திருந்தன. யானைமேல் சுவாமியை ஆரோகணித்து வீதி வலம் வருவார்கள். பெரிய யானை நடுவில் கம்பீரமாக வர, மற்ற யானைகள் இருபுறமும் வரிசையாய் அணிவகுத்து வருவதும், வாத்திய முழக்கங்களும் பக்திபரவசத்தை யூட்டுவதாக இருக்கும். திருவிழாவுக்காக வரவழைக்கப்பட்ட யானைகளுக்கு, ஒவ்வொரு தினமும் ஊர்வாழ்மக்கள், தத்தம் வீட்டிலிருந்து. அவரவர் சக்திக்குத் தகுந்தபடி ஏதாவது சாப்பிடக் கொடுப்பது வழக்கம்.

யானைப்பாகன் காலையில் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வருவான். அநேகமாக ஒவ்வொருவீடும், தனித்தனியாய் அவரவர்களுக்குச் சொந்தமான தோப்புக்குள் தான் இருக்கும். குடும்பத்தலைவர் தேங்காய்கள், வாழைப் பழக்குலை, தென்னை மட்டைகள் போன்றவைகளை எடுத்துக் கொள்ள அனுமதி தருவார். யானை தும்பிக்கையை உயர்த்தி தென்னை மடலைப் பிடித்து வலித்து இழுத்து முறித்துச் சாப்பிடும். இதைப் பார்ப்பதற்கென்று ஏராளமான சிறுவர் கூட்டமும் அங்கே குழுமிவிடும்.

அன்று யானைப் பாகனிடம் பார்க்கவியின் தந்தை இரண்டு குலை வாழைப் பழங்களையும் கொடுத்து, சில தேங்காய்களையும் கொடுத்து, தென்னை மரத்திலிருந்து மடல்களையும் பிய்த்துக் கொள்ளச் சொன்னார்.

யானை ஒவ்வொன்றாக கபளீகரம் செய்ய ஆரம்பித்தது. சிறுமி பார்க்கவியும் சங்கரனும் யானை உண்பதையே பிரமித்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தனர். பார்கவிக்கு ஓர் ஆசை. எதிர் வீட்டு ஓமனக்குட்டி அவளுடைய தந்தம் போன்ற கரங்களில் யானை முடியால் செய்த வளையல் போட்டிருந்தாள்; பார்க்கவிக்கு யானையைப் பார்த்தவுடன் அது நினைவுக்கு வந்தது.

‘சங்கர்’ எனக்கு அந்த யானைக் காரனிடம் சொல்லி யானை முடி வாங்கித்தர மாட்டாயா?’ என்று கெஞ்சினாள்.

‘ஓ! வாங்கித்தரேனே!’ என்றான் அவன்.

‘யானைக்காரா’ பார்க்கவிக்குட்டிக்கு இரண்டு யானை முடி தரமாட்டியா?—’’ என்று மிடுக்காகக் கேட்டான்.

யானைப்பாகன் சிரித்துக்கொண்டே 'தராம்...சக்ரம் கொண்டு வன்னிட்டுண்டோ?’ என்று கேட்டான்

‘காசா? காசு எதுக்கு? பார்க்கவியோட கோட்டத்திலே விளைஞ்சது தானே இதெல்லாம். யானை திங்கறதே!... நாங்க குடுக்கல்லியா! இரண்டு யானை முடி குடுத்தா என்னவாம்?’’ என்று விரனைப் போல முறைத்தவாறு கேட்டான்.

‘ஆ! கொள்ளாம்! பார்க்கவிக்காயிட்டு நீ எந்தினா சோதிக்குன்னு குஞ்ஞே! பார்க்கவியே கல்யாணம் கெட்டான் போகுன்னோ?’ என்று எதிர்க் கேள்வி கேட்டான் யானைக்காரன். சங்கரனுக்கு வெட்கமாய் போய்விட்டது. பார்க்கவியின் கையைப் பிடித்துக்கொண்டு ‘‘இதோ பாரு யானைக்காரா! இந்தக் கையிலே கறுப்பு வளை போட்டா எவ்வளவு அழகா இருக்கும் தெரியுமா? உனக்கு ஒன்னுமே தெரியல்லியே.’ என்றான். சொல்கையிலேயே அவன் கண்களில் ஜலம் வந்துவிட்

மாலா

விலை 25 காசு.

★ பிரதி மாதம் 10ஆம் தேதியன்று எங்கும் கிடைக்கும்.
★ ரயில்வே புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி ஆடைகள்

ஆடைக்கும் இதர பல அலங்காரங்கட்கும்

சென்னை இராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்
"பாலசுந்தரம் கட்டிடம்" எழும்பூர், சென்னை-8.

SISTA'S

டது. யானைப்பாகன் சிரித்துக் கொண்டே யானையின்வாலிலிருந்து சில முடிகளை எடுத்துக் கொடுத்தான்.

சந்தோஷத்துடன் அதைவாங்கிய சங்கரன் அதை பார்க்கவியின் கை களிலே வளையல் போலச் சுற்றிக் கட்டி முடிபோட்டான். சொல்லி வைத்தாற் போல. கோவிலில் காலை பூஜைக்கான மணி முழங்கியது.

★

விநாடித்துளிகள் வெள்ள வருஷங்களாகப் பெருகிக் காலக்கடலில் சங்கமித்துப் பேரலைகளை எழுப்பிக்கொண்டிருந்தன.

முன்பெல்லாம் அரையில் ஓணக் கோடியுடன் விளையாட வந்த சிறு குடுமிச் சங்கரனல்ல அவன் இப்போது. அவளும் வெறும்பாவாடையுடன் வெளிப்பட்ட பார்க்கவியல்ல.

யௌவன வசந்தமலர்கள் முகிழ்த்தன. அரும்பு மீசையும் புடைத்த நரம்புகளும். நிமிர்ந்த புஜங்களும் நேர்கொண்ட நடையும் ஆண்மைக்குக் கட்டியம் கூற. பலகோடி மலரைத் தாங்கிக் குலுங்கும் செடி போல பார்க்கவியின் பெண்மையழகும் குலுங்கி நின்றது.

இதுவெறும் வெளியழகு; உள்ள ழகோ ஒளிரும் தீபமென முத்துச் சுடர் பரப்பி ஒன்றையொன்று தழு



சென்ற மாதம் கிண்டியில் இண்டஸ்டிரியல் எஸ்டேடில் வருஷாந்திரக் கொண்டாட்டம் நடைபெற்றது:—அவ்வமயம் குமாரி "வைஜயந்திமாலா" அவர்களின் நடனம் நடைபெற்றது. அதற்கு அன்பளிப்பாக ஸ்ரீமான் மனுபாய்ஷா அவர்கள் ஓர் பரிசைக் கொடுக்கிருர். நம் சென்னை ராஜதானியில் இவ்வளவு தூரம் தொழில்கள் முன்னேற்றம் அடைந்ததற்கு முக்கிய காரணஸ்தர் யார் என்பது ஜனங்களுக்கு நன்ருகப் புரியும். அவர்தான் "வைஜயந்திமாலாவின்" பக்கத்தில் படத்தில் இருக்கும் கனம் மந்திரி R. வெங்கட்ராமன் அவர்கள்.

தீபாவளி தினத்தன்று சென்னை: பிளாஸா, கிரௌன், சயானி மற்றும் தென்னாடெங்கும்.

ELEGANT

விக்கொண்டிருந்தன. பருவத்தின் புதுமை தந்த நாணத்தினால் முன் போல இருவரும் சந்திக்கமுடிய வில்லை...

சங்கரன் வேலை நிமித்தம் சென்னை சென்றிருந்தான். இண்டர் வகுப்புடன் தன் கல்வியை நிறுத்திக்கொண்ட பார்க்கவி தந்தைக்கு ஒத்தாசையாக இருந்து வந்தாள். பார்க்கவி தந்தையாகிய மார்த்தண்டன் ஆஸ்பத்திரியில் தலைமை வைத்தியராகப் பணியாற்றி வந்தார். இரக்க உள்ளமும் கருணைநோக்கும் கொண்ட பார்க்கவிக்கு அந்தத் தொழில் பிடித்திருந்தது. தந்தையிடமே பயிற்சி பெற்று வரலானாள்.

தன் அருமை மகளின் மனமறிந்தொழுகும் மார்த்தாண்டன் அவளை சங்கரனுக்கே கொடுக்க விரும்பினார். அதைப் பற்றி சங்கரனின் தந்தையுடன் அவரே பேச்சு வார்த்தை நடத்தவும் செய்தார். சங்கரனின் தந்தைக்கு பார்க்கவியை தம் மருமகளாக ஏற்றுக் கொள்ளக் கசக்குமா என்ன?... ஆனால் அவர் தம் சுதந்திரத்தை இழந்தவர்... ஆம்...

சங்கரனின் சிற்றன்னை தான் அம்முக்குட்டி, சங்கரனின் தந்தைக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் பட்டு, எவ்வித சுகத்தையும் அடையாது வறுமையில் உழல்பவள். குறுகிய மனப்பான்மை கொண்ட அவளை மாளாத துன்பங்கள் ஒரு துரகங்காரியாக மாற்றிவிட்டிருந்தன. அனாதை போல தன் கைச் சோற்றுக்கு ஏங்கியிருந்த பிள்ளைக்கு இத்துணைப் பெரிய இடத்துப் பெண்ணா? என்று அவள் நினைத்தாள்!

அதுவும் காதலாமே! ... சே! கருகிப்போன அவளது ஆசாபாசங்கள் பார்க்கவியின் மேல் காரணமற்றதொரு துவேஷத்தை உண்டுபண்ணியது. தனக்கில்லாத ஒரு பாக்கியம் அவளுக்கா!...

தன்னால் சகித்துக் கொள்ள முடியாத ஒன்றாக அம்முக்குட்டிக்குத் தோன்றியது.

தன் தம்பி நாணுவுக்கே பார்க்கவியைச் செய்து கொண்டால் என்ன? என்று ஒரு யோசனையும் அம்முக் குட்டியின் உள்ளத்தில் தோன்றுமலில்லை... சேர்த்தலையில் ஒரு சொந்த வீடும் கொஞ்சம் நிலமும் அவனுக்கு இருந்தன.

அம்முக்குட்டி நாணுவை உடனே ஒரு கடிதம் போட்டு வரவழைத்து விட்டாள். சங்கரன் ஊரிலில்லாத சமயத்தை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள விரும்பியது அவளது கெடுமதி.

நாணு வந்து சேர்ந்தான். காதளவு இறங்கிய கிருதாவும் பம்மியகிராப்பும் நறுக்கு மீசையும், புகையிலை வாயுமாய் அசட்டு விழிகளுடன் விளங்கும் அவன் தன்னை நாகரிக உலகின் பிரதிநிதி யென்று சொல்லிக்கொண்டு ஊரில் வளையவந்தான்.

'நாணு! சிண்டுமணிக்கு உடம்பு சரியில்லை. ஆஸ்பத்திரிக்கு தூக்கிக் கொண்டுபோயிட்டு வாயேன்!' என்று மருந்துப் புட்டியையும் குழந்தையையும் கொண்டுவந்து தம்பியிடம் கொடுத்தாள் அம்முக்குட்டி. அக்காவின் யோசனைப்படி நாணு மருந்து வாங்கும் சாக்கில் ஆஸ்பத்திரியில் இருந்த பார்க்கவியையும் ஒரு கண் பார்க்கத்தவறவில்லை.

நாணு தோற்றத்தில் எப்படியிருந்தாலும் உள்ளத்தில் அதிகமாக மாசுபடியாதவன். அக்காளின் திட்டத்தினுள் ஒரு சதி பதுங்கியிருக்கிறது என்பதை உண்மையிலேயே அவன் அறியமாட்டான். வெகுளி அவன். களங்கமில்லாமல் எவருடனும் பழகிவரும் பார்க்கவி நாணுவுடனும் பழகி வந்தாள்.

ஓய்வு தினங்களில் நாணுவை பார்க்கவியின் வீட்டில் பார்க்கலாம். பிரபல சினிமா நடிகர்கள் போல அவன் அபிநயித்துக்காட்டுவதும் பேசுவதும் பாடுவதும் பார்க்கவியின் மனதுக்கு மேலெழுந்த வாரியான ஒரு பொழுது போக்காக இருக்கும். அவள் அதிகமாய் சினிமா பார்ப்பதும் கிடையாது.

"உழைத்துச் சலித்து வரும் மன துக்கு நாணுவின் கோமாளிக் கூத்து ஓரளவு ஆறுதலைத் தந்தது என்றும் சொல்லலாம்.

'வரம் கொடுத்த மங்கை' படத் தின் வசனத்தை அப்படியே ஒப்பு விக்கட்டுமா பார்க்கவி! கேளேன்'' என்று சொல்லிவிட்டு அப்படியே ஒப்புவிப்பான் நடிப்புடன்.

''சபாஷ் நாணு! கதாநாயகன் உன்னிடம் தோற்றேயாக வேண் டும். ஆமாம், நீ ஏன் சினிமாவில் சேரக்கூடாது! அவர்களுக்குத் தானே இப்பொழுது நல்லகாலம்!''

''என்ன செய்வது பார்க்கவி! அதிர்ஷ்டம் வேண்டாமா? ஊடடுப் புரையில் அகப்பை பிடித்து இவ றிக்கொண்டிருந்தானே குட்டப் பன், இன்று அவன் ஹீரோவா. 'பெண்ணும்–பொன்னும், என்ற படத்தில நடிக்கிருனும்!''

''நீயும முயன்று பார் நாணு! உனக்கு! நிச்சயம் வெற்றி கிடைக் கும் என்பாள் பார்க்கவி.''



குமாரி கற்பக வாணி, பரதநாட்டியம், ஓரியண்டல் நடனங் கள், கதக்களி முதலியவைகளை இளம் வயதிலேயே கற்று நன்கு தேர்ச்சி பெற்று, பல இடங்களில் ஆடி மக்களின் அபி மானத்தைப் பெற்றிருக்கிருர். வெகு விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கும் நாட்டிய நட்சத்திரம்.

பார்க்கவியோடு நேசமாய் இருந்து அவள் மனதைக் கவர வென்றே திட்டமிட்டு வரவழைக்கப்பட்ட அவன், அவளுடைய புனித முன்னிலையில் குழந்தை போலப் பழகினன். நல்ல சக்தியின் முன் தீமை கருகிப்போயிற்று.

விளைவின் முடிவைப்பற்றி அம்முக் குட்டி சலனப்படவில்லை. தம்பிக்கு சாமர்த்தியமில்லாவிட்டாலும் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டுவிட்டாள் அவள்.

"பார்க்கவியைத்தானே" என்ருள் ஒருநாள், சீரன் குளத்தடியில் குளிக்கும்போது.

'பார்க்கவிக்கு என் தம்பி மேல் கொள்ளை ஆசை. அவளை இங்கே வரவிட்டால்தானே! என்னமோ, சின்னதுகள் சந்தோஷமாக இருக்க வேண்டியதுதானே!" என்ருள் அடுத்தவீட்டுப் பாருக்குட்டியிடம்.

"கேட்டாயாடி சங்கதியை, நாணுவுக்கு பார்க்கவி எழுத்து எழுதியிருக்கிருள்..."

"நேற்றைக்கு இருவரும் முருகன் டாக்கீஸுக்கு இங்கிலீஷ் படத்துக்குப் போய் வந்தார்கள்..."

இப்படியாக அம்முக்குட்டியின் விஷநாக்கு சுழன்றது. அந்த ஒலிகளின் கருத்துக்கள்—அபவாதக் கோட்டையாய் தன்னைச் சுற்றி எழும்பிவருவதை உணரவில்லையே அந்தப் பெண்!

காதல் மாளிகை மணல் வீடாகி விட்டால், அங்கே லைலாமஜ்னு-கதைகள் மிஞ்சும்...

சங்கரன் லீவில் ஊருக்கு வந்தான். விவாகப் பேச்சு பலப்பட்டிருக்கும் என்ற குதூகலத்துடன் வந்தான். பார்க்கவிக்காக மெல்லிய கண்ணுடி வளையல்கள் புதிய போஸ்தரில் வாங்கிவந்திருந்தான். யாருக்கும் தெரியாமல் இரகசியமாய் அவள் கையில் தானே போட வேண்டும்—அப்படி ஓர் ஆசை அவன் மனதில்.

ஊரில் வந்ததும் வராததுமாய் அம்முக்குட்டி அவனிடம் சொல்லி விட்டாள்... நாணுவுக்குத்தான் பார்க்கவி மாலையிடப் போகிருள் என்று......

சங்கரன் நம்பவில்லை... காலத்தாலும் அழிக்க முடியாத காதல் தங்களுடையது என்று எண்ணினன்.

பார்க்கவியைப் பார்க்கவென்று ஆசை ஆசையாய் அவன் போன பொழுது......

அப்பொழுதுதான் குளித்துவிட்டு வந்திருந்த பார்க்கவி சோபா ஒன்றில் உட்கார்ந்திருந்தாள். வெள்ளை ஸாரியும், வெள்ளையிலேயே சோளியும் அணிந்திருந்தாள் அவள். அடர்ந்துநீண்டிருந்த அலைக்கூந்தலை ஒரு முடிக்குள் அடக்கி முதுகிலே புரள விட்டிருந்தாள். காதில் ஒரு பொன் கம்மலும், கழுத்தில் ஒரு மெல்லிய செயினும். கைகளில் பொன்னால் பொதியப்பட்ட சங்கரனின் இதய நிறைவான யானை முடி வளையிலுமே இருந்தன.

தூய்மையின் தேவதைபோல் ஒளி வீசிய அவள் முன்பு நாணு பிரபல படமொன்றின் டூயட் பாட்டை அபிநயத்துடன் பாடிக் கொண்டிருந்தான்.. பார்க்கவி குதூகலமாய் சிரித்தவாறு இருந்தாள்.

சங்கரன் வாசற்படியில் நிற்பதை அவள் கவனிக்கவே இல்லை. 'அடி பெண்ணே! விதியின் பள்ளத்தில் விழப்போகிருயே!...என்று காலம் சிரித்தது...

'பார்க்கவி!'

உள்ளத்தின் அதிர்வு குரலை முழக்கியது. முழக்கம் அறையெங்கும் எதிரொலித்தது.

இருவருமே திடுக்கிட்டனர். பார்க்கவி சங்கரனைப் பார்த்தாள். 'நீங்களா?... வாருங்கள் சங்கர்!... உள்ளத்தின் மகிழ்ச்சி, புன்னகையாய் மலர எழுந்தோடி வந்தாள் பார்க்கவி.

'நில் அப்படியே!'— சங்கரனின் குரலா அது?

பையினுள் கைவிட்டுத் தான் வாங்கி வந்திருந்த வளையல்களை எடுத்தான். பார்த்தான் 'ஹூம்' என்று வெறுப்பை உமிழ்ந்துவிட்டு வீசி யெறிந்தான் அவள் முன்.

அப்புறம் அவன் அங்கு நிற்கவில்லை.

கலகலத்தது கண்ணுடித் துண்டா அல்லது காலமெல்லாம் அன்புச் செங்கல் அடுக்கிச் சமைத்த அவர்களது காதல் மாளிகையா?...

'அம்மா!... என்றுள் பார்க்கவி. திகைப்பும் சோகமும் நேரத்தை விழுங்க உயிர்ப்புழு தத்தளித்தது. இதயக்கூடு அதிர்ந்தது. கோழை நாணு பயந்து வெளியே ஓடிவிட்டான்.

★

'அப்பவே தெரியுமே!... நீ ஏன் அங்கே போனுய்'... அவள் தான் நாணுவுக் கென்று தீர்மானமாகி விட்டதே!...

'போ, சித்தி... பேசாதே!...

'காத்திருந்தவனுக்கு கசக்கத்தான் செய்யும் அதற்காக என்ன செய்வது? பார்க்கவிக்கு நாணு மேல் கொள்ளை ஆசை!'

'சித்தி! உனக்கடங்கிய சங்கரனல்ல நான் இப்பொழுது... கொன்று விடுவேன் என்னைக் கொலைகாரனுக்கி விடாதே! மரியாதையாய் உள்ளே போய்விடு!... உம்...'

குப்புறப் படுத்திருந்த சங்கரன் எழுந்தான்.

அம்முக்குட்டி அதற்கும் மேல் பேசவில்லை. விதையைத்தான் சரியாகவே ஊன்றிவிட்ட திருப்தியுடன் உள்ளே போய்விட்டாள். அவள் கணவர்தான் அவள் கைக்குள் ஆடும் பாவையாயிற்றே!...

சங்கரன் இரண்டொருநாள் தான் ஊரில் இருந்தான். அதற்குள் அவனிடம் ஊர் முரசறைந்து விட்டது நாணு பார்க்கவி நேசத்தைப்பற்றி.

மலர்ந்த வேகத்திலேயே கருகிய எண்ணங்கள், அவற்றின் சூடு அவனைத் தகித்தது. சீ! அவளும் ஒரு பெண்ணு!...

பார்க்கவி ஓடிவந்தாள். அவளைப் பார்க்கவும் மறுத்து ரயிலேறிவிட்

மவுண்ட் ரோட் என்றாலே

மை காபி பார்

என்றுதான் ஞாபகம் வரும்!

வகை வகையான சிற்றுண்டிகளுக்கும், உயர்தர போஜனத்திற்கும் உகந்த இடம்.

ஒருமுறை விஜயம் செய்தாலே புரியும்!

ஸ்பெஷல் டீ பார்ட்டி, டின்னர் முதலியவைகளுக்கு விசேஷ ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

மை காபி பார்

போன்: 86350

மவுண்ட் ரோட், மதராஸ்-2.

டான் அவன்!... அவசரக்காரன்! தன் வாழ்வையே இழந்து விட்டான்...

பழிமிஞ்சியது.

★

'குழந்தாய்! இனி நீ என்ன செய்யப்போகிருய் அம்மா!... என்ருர் மார்த்தாண்டன்.

'அப்பா!...'

'கலங்காதே யம்மா! நானே சங்கரனிடம் நேரில் போய்... 'வேண்டாம்'னு பாவனையில் கையமர்த்திஞள் பார்க்கவி.

'அப்பா!... நான் தோற்றுவிட்டேன்... அவர் என்னைப் புரிந்துகொள்ளவில்லை... என்னை நான் ருசுப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு நான் எந்த விதமான தவறும் செய்யவில்லை... அப்பா! நான் தீர்மானித்துவிட்டேன்... என் வாழ்க்கை இனி மக்களுக்காகத்தான்...'

'என்ன சொல்லுகிருய் அம்மா!.

'அன்பு என்னைச்சுற்றி அரவணைத்தது... அதை கருங்கோட்டையாக, கொடும்பழியாக மாற்றி விஷக்களங்கத்தைப் பரப்பிவிட்டாளப்பா ஒருத்தி... சூதறியாமல் ஏமாந்துவிட்டேன் நான். என்மேல் பூசப்பட்ட கறுப்புத்தான், அவர் கண்களுக்குத் தெரிந்ததே யொழிய என் உள்ளம் தெரியவில்லை... அதை அவராகத் தெரிந்துகொள்ள வேண்டும்... அப்பா! என்னைத் தயவு செய்து டாக்டருக்குப் படிக்க வையுங்கள்?...''

உறுதியுடன் கூறும் மகளை ஒரு கணம் உற்றுநோக்கினுர் மார்த்தாண்டம்

'குழந்தாய்... பெண் மனம் ஆசாபாசங்கள் நிறைந்தது...'' பல்லைக் கடித்துக்கொண்டு பார்க்கவி கூறினுள்.

'என் மனம் பாறையாகிவிட்டது, அப்பா என்னை நீங்கள்நம்புங்கள்..' என்றவள் உள்ளே போய்விட்டாள்

மார்த்தாண்டம் தம் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

★

கொச்சின் எக்ஸ்பிரஸ் ஓடிக்கொண்டே இருந்தது லேடிடாக்டர் பார்க்கவி தன் மூக்குக் கண்ணுடியைக் கழற்றிவிட்டு கைக்குட்டையால்கண்களைத்துடைத்துக்கொண்டாள். அன்று சொன்னது போல பாறையாக்கிக் கொண்டுவிட்டாள் மனதை. மெடிகல் காலேஜில் அவள் சேர்ந்த இரண்டே மாதங்களில், கிடைத்த சங்கரனின் மறைவுச் செய்தியும் அந்தப் பாறையை உடைக்கவில்லை. சற்று அதிர்ந்து மீண்டும்இறுகிவிட்டது அவ்வளவு தான்.

யானைமுடி வளையல்களை அவள் கையைவிட்டுக் கழற்றுவதேயில்லை. அவற்றிற்குச் சில சமயம் கண் மலரால் அவள் அபிஷேகம் செய்வதுண்டு பாறையில்கூட நீரூற்று உண்டல்லவா!...

மீண்டும் இன்று பழைமையுடன் மோதல்!... இந்த அம்முக்குட்டியைச் சந்திப்பதைவிட நாகசர்ப்பத்தைச் சந்திக்கலாமே...

பார்க்கவி தன் பெட்டியையும் ஹோல்டாலையும் எடுத்துத் தயாராக வைத்துக் கொண்டாள் வண்டி நின்றதும் வேறு வழியில் இறங்கி விடுவதற்காக. ஊரையும் பார்க்கவேண்டாம் சீரையும்பார்க்க வேண்டாம் திரும்பச் சென்னை போய்ச் சேர்ந்தால் போதும்...

நிலக்காட்சிகள் தெளிவடைய ஆரம்பித்தன... இருள் காவலன் கடமைமுடிந்து ஓய்வுக்குப் புறப்படலானுன்...

ஆழ்ந்த துயிலின் மூச்சை, குறட்டைகளாக அனுப்பிக்கொண்டிருந்த கொங்கு மங்கை திடீரெனக் குதித்தெழுந்தாள் தன்னுடன் இருந்த சிறுவனை சேர்த்தணைத்துக் கொண்டாள். உடம்போடு அழுத்திப்பிடித்தும் பையன் துடித்தான்.

பார்க்கவிக்குப் புரிந்துவிட்டது.

பையனே தாயின் கைக்கடங்காமல் தத்தளித்தான். கையும்காலும் 'விலுக்...விலுக்' கென இழுத்து வாங்கியது. வாயில் நுரை கொப்புளித்து வந்தது.

'அடி ஆத்தே! என் ராசா! என்னடா செய்வேன்? யாராச்சும் வண்

டியை கிப்பாட்டுங்களேன் ...!' என்று கதறினுள் அவள். பையனை ஸீட்டில் விட்டு, இரும்புச் சாவியை அவனிடம் கொடுத்தாள்...

அந்த கம்பார்ட்மெண்டில் உள்ளவர்கள் எல்லோரும் கூடிவிட்டனர் அம்முக்குட்டி உட்பட. ஒருவருக்கும் ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. பார்க்கவியின் வைத்தியக்கை அங்குச் செயலாற்றத் தொடங்கியது.

தன் பெட்டியைத் திறந்து பையன் உடம்பில் அவள் ஏதேதோ மருந்துகளைப் பற்றினுள்.

பத்து நிமிஷத்தில் பையனுக்குக் கொஞ்சம் அடங்கியது. அந்தப் பையனின் தாயார் பார்க்கவியின் காலில் விழுந்து கும்பிட்டாள். அவளுக்குத் தன் நன்றியை எப்படித் தெரிவிப்பதென்பதே தெரியவில்லை.

அம்முக்குட்டி பார்க்கவியைநன்கு பார்த்தாள். புரிந்தும்கொண்டாள்.

'நீ பார்க்கவிதானே?' என்று கேட்கவும் செய்தாள்.

'உம்—' என்றுள் பார்க்கவி தன் தோல் பெட்டியைமூடிக்கொண்டே. — அம்முக்குட்டியின் விழிகளில் நீர் நிறைந்தது.

'பார்க்கவீ!... என்றவள் திடீரெனக்குனிந்து பார்க்கவியின் கைகளை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

'என்னம்மா இது?'— பார்க்கவி தன் கைகளை விடுவித்துக்கொள்ள முயன்றுள்... என்னவேண்டிக் கிடக்கு! மன்னிப்பும் இன்னுென்றும். அவளுக்குப் பிடிக்கவில்லை... ஆனுல் அம்முக்குட்டி விடுவதாயில்லை...

'பார்க்கவி! நான் அறிந்து பாபம் செய்தேன்...இன்று அந்தப் பாபம் என்னையே பிடித்துக் கொண்டுவிட்டது... சாரதாவைப் பார்த்தாயா? ...கோயமுத்தூரில் சாம்பசிவத்தின் பிள்ளைக்கு நிச்சயம் பண்ணியிருந்தேன் ... கடைசிநிமிஷத்தில் கல்யாணம் நின்று விட்டது.

'ஏன்? என்றுள் பார்க்கவி தன்னைமறந்து... அந்தக் கல்யாணத்

தந்தி : சங்கர்கோ போன் : 4554

அன்பர்கள் அனைவருக்கும் எங்கள்
தீபாவளி வாழ்த்துக்கள்

கிர்லோஸ்கர், எலக்டிரிக் மோட்டார்ஸ், ஆயில் என்ஜின்,
பம்பு செட்டுகள் மற்றும் ஸ்பேர் பார்ட்ஸ்களும்
நியாயமான விலையில் கிடைக்கும்.

சங்கர் டிரேடிங் கம்பெனி

38, லிங்கிசெட்டி தெரு, மதராஸ்-1.

தை உத்தேசித்துத்தானே அவள் வந்தது.

'பெண் சரியில்லையாம்... ஏதோ சினேகமாம்... எவனே சாரதாவுக்குக் கடிதங்கள் எழுதினனும்...என்னவோ போயேன்! அதிகம் சொல்வானேன்... என் வினை என் மடியிலேயே பழுத்து விழுந்தது...இனி என் சாரதாவை யார் ஏற்றுக்கொள்வார்கள்?......

அம்முக்குட்டியின் வயதான தேகம் புலம்பலினுல் குலுங்கியது.

'பார்க்கவி! உன்னைப் பார்த்ததில் என் மனபாரம் எவ்வளவோ குறைந்துவிட்டது... வீட்டை விற்றுக்கொண்டு இப்படியே பட்டணத்துக்குப் புறப்படலாமென்றிருக்கிறேன்' என்ருள் அம்முக்குட்டி. கண்ணுக்குள் விழுந்த எண்ணெய் கரிக்கத்தானே செய்யும். புருவத்தில் பட்டால் கரிக்காது... பெற்ற பெண்ணுயிற்றே!... தாய் மனம் தன் குற்றமுணர்ந்து துடித்தது.

பார்க்கவி நெகிழ்ந்துவிட்டாள். சாரதாவை ஏறிட்டுப் பார்த்தாள். சங்கரனின் தங்கையல்லவா அவள். களங்க மற்றிருக்த அந்த முகத்தில் தான் எவ்வளவு ஏக்கம்!...

—'அம்மா! கவலையைவிடுங்கள்! வீட்டை விற்கவேண்டாம். சாரதாவுக்கு இந்தக் கல்யாணத்தை நானே முடித்து வைக்கிறேன். மீனுட்சி என் சிநேகிதிதான். வீண் அபவாதத்திற்கு அவள் மதிப்புக் கொடுப்பவளல்ல... நான் சொன்னுல் சரியாகிவிடும்...'

சாரதா பார்க்கவியின் கரங்களை அன்புடன் பற்றிக் கொண்டாள்... பார்க்கவியின் நயனமலர்கள் மீண்டும் கருவளைகளின்மேல் நீர் சிந்தின. சாரதாவை அணைத்துக் கொண்டாள்,

ஒலவக்கோடு ஜங்ஷனில் வண்டி நின்றது.

அம்முக்குட்டி வியப்புடன் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே பார்க்கவி வண்டியை விட்டிறங்கி எதிர் பிளாட்பாரத்தில் இருந்த வண்டியில் ஏறிக் கொண்டாள் கோயமுத்தூருக்காக.

அம்முக்குட்டியின் விழிகளில் கண்ணீர்! அது ரயில்புகையால் ஏற்பட்டதல்ல.— அது நிச்சயம்.

அழகிய அச்சு வேலைகளுக்கு :

ஸ்ரீ ஸுதர்சன் பிரஸ்

(புரொப்ரைட்டர்: ஸ்ரீ எஸ். எஸ். சர்மா)

''காங்கிரஸ் பில்டிங்ஸ்''

111, மவுண்ட்ரோட், தேனும்பேட்டை.

சென்னை—6.

புத்தொளி
பூத்துக் குலுங்க...
எண்ணற்ற விளக்குகள் விழாவிற்கு எழில் சேர்க்கும். இதயங்களோ இன்பப்பண் ஆர்க்கும். கண்கள் ஒளி சேர்க்கும். விழா, கவலையினைத் தீர்க்கும். களிப்பினை வார்க்கும், எல்லோருக்கும்!
பாதுகாப்பான உணர்விற்குப் பாதை அமைக்கின்றன, மகிழ்வும், மனநிறைவும்!
உங்களுக்கும், உங்கள் அன்பிற்கு உரியவர்களுக்கும், உறுதியான வருங்காலப் பாதுகாப்பிற்கு வகைசெய்ய ஆயுள் இன்சூரன்சு அல்லால் வேறு வழியும் உளதோ?
ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை
ASP LIC-SP-8

கஷ்டம் விலகி, தனவசதி ஏற்பட மேன்மையும் நன்மையுமிருக்கும் விவகாரங்கள் வெற்றிகரமாக முடிவடையும். தெய்வானுகூலத்திற்கு, வேண்டி, தமது குலதெய்வத்தை ஆராதனை செய்து வருவது நன்று.

கடகராசி புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம் ஆயில்யம் நீண்ட நோயால் வருந்தியவர்களுக்கு சென்றமாதம் ஓரளவு சுகமென்றாலும், இம்மாதம் திரும்பவும் ஸ்ரமம் இருக்கக்கூடும். பணநெருக்கடி இருக்கக் கூடும் கடன் காரரின் தொல்லை யதிகம் வரவிற்குமேல் சிலவும் அதிகம் வெறுப்புண்டாகும்படிபலதுறைகளில் மனவேதனையிருக்கும் உத்தியோ கத்தில் மேலதிகாரி மாற நூதன அதிகாரியிடம் உழைக்கவும், அதிக வேலை செய்யவும் நேரும். தொழில்மூலம் கஷ்டமும் நஷ்டமும் இருக்க லாம். சேவகர்கள் ஒத்துழைப்பு குறையும். இல்லறவாழ்க்கையில் இம்மா தம் இன்பம் இராது. அனுவசிய அலைச்சலும், திடீரென கோபிக்கவும், ஆயாசமும் எதிர்பார்க்கலயம். புத்திரர்கள் உத்தியோகம் மாறுவது மனை விக்கு மாத்திரம் மிக நன்று பிதாவிற்கும் சிலவும் சிறு பிரயாணங்களும் இருந்துவரும். நூதனப் பொருள்கள் வாங்குவதால் தனம் முடங்கும். சேவகர்கள் ஒத்துழைப்பு குறைவாலும், போனஸ் கொடுப்பதாலும் கடனேறும்.

சிம்மராசி மகம், பூரம் உத்திரம் 1-ம் பாதம் தேக சுகமேற்பட்டு வரும் யத்தனபலித மேற்பட, எதிர்பாராத நன்மையுண்டாக நண்பர் மூலம் மேன்மையுமிருக்க உற்சாகமதிகமாகும். தனவசதி திருப்திகரமாக இருக்கும் முடங்கிய தனத்தைத் திரும்பப் பெறலாகும்; வரிமூலமிருந்த ஸ்ரமம் ஒழியும். வைத்தியச்சிலவு குறையும். விரயமோ, நிரந்தரசொத்துக் கள் மூலமேற்பட்டு வந்தசிலவோ இனிஇராது உத்தியோகத்தில் உயர்வு உண்டாகி அதிகாரி ஆதரவு இருக்க, தனக்கு ஸர்வ ஸௌக்கியமுண்டு எனும் ஸ்தலத்திற்கு மாறுதல் கிடைக்கும். தொழில் நூதனமாக ஆரம் பிக்க அரசாங்க உதவியும் சேவகர்கள் ஒத்துழைப்பும் சமமானவர்களு டன் திருப்திகரமான ஒப்பந்தமும் யத்தனபலிதமும் எதிர்பார்க்கலாம். வியாபாரத்தில் சுறுசுறுப்பும் இவ்வாண்டிற்கே இம்மாதம் அதிக லாபமும் இருக்கும். திருட்டால் இழந்த சொத்தும் திரும்பப் பெறலாகும் தம்பிக்கு தேகசுகக்குறைவு தாய்க்கு க்ஷேத்ராடனம். புத்ரர்களுக்கு உத் தம பலன் ஆரம்பம். மனைவிக்கு இஷ்டசித்தி. பிதாவிற்கு பலதுறைகளில் உற்சாகம் மதிப்பு சுகம்.

கன்னிராசி உத்திரம் 2,3,4 பாதங்கள் ஹஸ்தம் சித்திரை 1, 2 பாதங்கள் தேக சுகமேற்பட்டுவரினும் கண் நோயும் பல் வலியும் ஜல தோஷமும் சிறு உபத்திரவங்களை ஓரளவு அளிக்கும். ஓயாத உழைப்பும், தீராத யோஜனையும், அபாரச் சிலவும் அதிகமென்றாலும், இவைகளெல் லாம் தனது நன்மைக்கும் மேன்மைக்குமே யாவதால், உற்சாகமதிகம் சிறுபிரயாணங்கள் செய்ய நேரலாம். இல்லையேல் குடிமாறும் இடப் பெயர்ச்சியிருக்கக்கூடும் அரசாங்க மூலம் நன்மையுண்டாக வேண்டின் தற்சமயம் முயற்சி செய்துவரலாம் மாதமுடிவில் கிடைக்கும். லைசென்ஸ் கிடைக்க தாமதம். முதலில் எதிர்ப்பு இருக்கக்கூடும். வரிமூலம் ஸ்ரமம் இருந்துவரும். தம்பிக்கு வேலைமாறும் தாய்க்குதனலாபம் புத்திரர்களுக் கும் உத்யோகமேன்மை பரீக்ஷைதேறும் விவாஹம் நிச்சயமாகும். மனை விக்கு தேகசுகம் திருப்திகரமாகயிராது. பிதாவின் கஷ்டம் ஒருவாறு முடி வடைய, இடம் பெயர சுகமதிகம்.

துலா ராசி: சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம், 1, 2, 3 பாதகங்கள். தேக சுகம் திருப்திகரமாயிராது. ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி போக நேரிடும். வீண் சிலவும் முற்பகுதியில் அதிகம். அப்பால் மாதப் பிற்பகுதியில் வரவு அதிகமாகும். உத்தியோகத்தில் பொறுப்பும் மதிப்பும் ஏறிக்கொண்டே வரும். உதவி குறையும். தன்னுடன் பணிபுரிபவர்

தயாரிப்பாளர்:

T.A.S. ரத்தினம் பிரதர்ஸ்

தபால் பெட்டி 1151, மதரூஸ்-21

S.R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

For Fine Process and For Best

LINE
HALF-TONE
TRI-COLOUR
BLOCKS

Contact

Phone 86729 Grams "NEWTYPES"

NEWTON & Co.,

THE LEADING BLOCK MAKERS OF MADRAS.

80, WALLAJAH ROAD, : : MADRAS-2

மாறுவதால் தானே அதையும் சேர்த்து வேலை செய்ய நேரிடும். புத்திரரின்றி யிருந்தவர்களுக்கு இவ்வருஷ முடிவு நன்று. சிலர் மனைவி ப்ரசவத்தை யொட்டிப் பிரிய நேரிடும். தம்பியும் வெளியூர் செல்ல, மாதாவிற்கு சுகமேற்பட, புத்திரருக்கு கஷ்டம் விலக மனைவிக்கு நூதன பொருள்கள் சேர, பிதா திரும்பக் கூடி மகிழவும் நன்று.

விருச்சிக ராசி: விசாகம் 4-ம் பாதம். அனுஷம் கேட்டை தேக சுகம் ஓரளவு பாதிக்கப்படும். மனசஞ்சலம். வேதனை. யோஜனை மேலும் அதிகரிக்கும். தனவசதி குறையும். பண நெருக்கடி யிருக்கும். முடங்கிய தனத்தைப் பெற தாமதம். உத்தியோகத்தில் உழைப்பும் அலைச்சலும் கடுமை. லாபமின்றி வறுமை வாட்டும். தொழில் மூலம் நஷ்டமிராவிட்டாலும். திருப்திகரமான லாபம் இராது. சேவகர்களுக்கு போனஸ் முதலியன கொடுப்பதால் அதிகச் செலவு. வியாபாரம் நடைபெற்றாலும். கடன் மூலம் அதிகமாக நடைபெறுவதால் லாபபமடைய தாமதம். தை முதலே புனர்ஜன்மம் பெற்றதுபோல் நன்மையும் மேன்மையும் இஷ்டசித்தியும் செய்வானு கூலமும் லாபமும் தனப் பெருக்கும் இருக்கும் கஷ்டத்தை நிவர்த்தி செய்துகொள்ள ஆண்டவன் அருள் உண்டு. ஆகவே யாவற்றையும் சமாளிக்கக்கூடும். தம்பிக்கும், மாதாவிற்கும் சுப பலனிருக்க, புத்திரர்களும் நோயால் வருந்த, மனைவி ஓரளவு தனக்கு ஸௌகர்யம் செய்து கொண்டு, மற்றவர்களின் மன வேதனை குறையுமாறு தைர்யம் சொல்ல, பிதா தனது ஸ்ரமம் இன்னும் தீரவில்லையென சொல்லும்படி பலாபலன்கள் நடைபெறும்.

தனுர்ராசி: மூலம். பூராடம். உத்ராடம் 1-ஆம் பாதம் ஜன்மச் சனியின் தொல்லைவிட்டது என சொல்லும்படி யத்தன பலிதமும் கார்ய சித்தியும் தன வசதியும் நண்பர் உதவியும், அரசாங்க மூலம் ஆதரவும் தன் முயற்சியால் சகல சுகமும் ஏற்படும். தேக சுகமும் திருப்திகரமாக இருக்கும். கடன் குறையும், லாபமும், எதிர்பாராத நன்மையும் ஏற்பட்டுக் கொண்டேவரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ரஜாவில் செல்ல, தனது வேலையையும், அவரது வேலையையும் செய்ய நேரும். மாடு முதலியன மூலம் நற்பலனேயுண்டாகும். தம்பிக்கு கஷ்டம் விலக, மாதா உடல் நலம் குறைய புத்திரர் சிறு பிரயாணம் செய்ய. மனைவி இன்புறிருக்க, பிதா உத்தியோக உயர்வால் இடம் மாற இம்மாதம் நன்று. வரி மூலம் ஸ்ரமம் இராது. விரோதம் குறைய. துரோகி என கருதப்பட்டோர் மறைய, ஆத்திரமின்றி, நிம்மதியாக இனி இவர்களுக்கு இருக்கும். உற்சாகம் உண்டாகும்.

மகர ராசி: உத்திராடம் 2,3,4 பாதகங்கள் திருவோணம் அவிட்டம் 1, 2. பாதங்கள். தேகசுகம் ஏற்பட்டுக்கொண்டுவரும். யத்தன பலிதமும் இனி உண்டு. தாமதத்தால் இனி வேதனையிராது. இடையூறும் எதிர்ப்பும் குறைந்து கொண்டேவரும். ஏமாற்றமும் இராது. நண்பரின் உதவியாலும் தனது மனோதைரியத்தாலும் பெரிய காரியங்களையும் சாதிக்க நேரும். எதிரிகளும் ஆதரவு அளிப்பார். உத்தியோகத்தில் மேலதிகாரி நட்பும், உயர்விற்கு வேண்டிய ஏற்பாடும் நடைபெறும். மகரராசி பெண்கள் பலருக்குப் பலித மேற்பட்டுக் கொண்டுவரும். தம்பிக்கு தேக அசௌக்யமிருக்க, வைத்தியம் செய்பவரின் நீண்ட நோயும் சில மாதங்களில் குணமடையும். மாதாவிற்கு உடல் நலம் தானிராது. இதர ஸௌகர்யங்கள் இருந்து வரும். புத்திரர்கள் கஷ்டம் விலகிக்கொண்டு வருகிறது. மனைவிக்கும் இரண்டு மாதங்கள் பொறுத்தே சுபபலன். பிதாவிற்கு சுபவ்ரயம் அதிகமாக யிருந்துவரும்.

கும்பராசி: அவிட்டம் 3, 4 பாதங்கள் சதயம். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள். தேக ஆரோக்யம் திருப்திகரமாக யிருக்கும். பீடை விட. கஷ்டம் விலக, நஷ்டமின்றி, இஷ்டசித்தியுண்டாக இனி நன்று. வேதனை

We construct

MODERN BUILDINGS

★

We specialise in

MODERN SANITATION

★

Consult :

King & Company,

321, THAMBU CHETTY STREET,

MADRAS-1.

குறையும், எதிர்ப்பு மறையும். ஏமாற்றம் இராது. இனி தோல்வியில்லை. தன நெருக்கடி குறையும். உதவி கிட்டும். மதிப்பு ஓங்கும். மனதில் இனி உதயமாகும் எண்ணங்கள் தனது நன்மைக்கும் மேன்மைக்குமே என நம்பலாம். தனக்கு நல்ல காலம் எப்பொழுதாவது இருக்கக்கூடுமா என ஏங்கியவர்கள் இனிதொடர்ந்தாற்போல்சிலமாதங்கள் சுபபலன் அடைந்தே தீர்வார். உத்தியோக உயர்விற்கு தடையிராது. தொழில் ஆரம்பிக்கப் பலரின் ஆதரவு கிடைக்கும். மனைவிக்கு இனியே நன்று. உற்சாகம் பிதாவின் தேகசுகம் பாதிக்கப்படினும், இஷ்டசித்தியும், ப்ரமோஷனும், பலர் உதவியும் கிடைக்கும்.

மீனராசி: பூரட்டாதி **4**-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி. சற்று தேகசுகம் திருப்திகரமாகயில்லை யெனின், உடனே வைத்தியம் செய்துகொண்டு. வியாதியை வளரவிடாமல் தடுக்க வேண்டும். விரோதிகளுடன் யாதொரு சம்பந்தமும் வேண்டாம். நண்பரே பகைக்க நேருமாயின்.சத்துருக்கள் எல்விததிங்கிழைக்க தீர்மானிப்பார்கள் என ஆலோசிக்கவும் உத்யோகத்தில் மேலதிகாரி அடிக்கடி உபத்ரவம் அளிப்பார். உற்சாகம் குறையும், வெறுப்புண்டாகும். வ்யாபாரம் மந்தம். தனம் முடங்கும், கடனை திருப்பிக் கொடுக்க கேட்டாலோ, மனஸ்தாபம். தொழில் மூலம் சேவைகளால் தொந்தரவு அதிகம். ஆகவே இம்மாதம் எச்சரிக்கையுடன் இருக்கவும். ஆகவே சில வாரங்கள் நிதானித்து நூதன முயற்சி யெடுக்கவும். தம்பி கஷ்டம் விலக, பிரிந்திருந்த மாதா கூடிமகிழ, புத்திரர் மூலம் மேலும் சிலவு ஏற்பட, மனைவிக்கு நூதனப் பொருள்கள் சேர, பிதாவிற்கு மேலும் கஷ்டமதிகமாக இருக்கும். பொறுத்தார் பூமியாள்வார் என்பதை சில மாதங்களில் நீங்களே நிரூபிக்கலாம்.

S. S. L. C. 1961
SARMA'S TAMIL GUIDES

—★—

1.	தமிழ்த் துணைவன் (பொது சிறப்பு) தமிழ் வினா-விடை	0 10 0
2.	தமிழ் வினாக்கள் (Public Model Questions)	0 4 0
3.	தமிழ்ப் பொதுக் கட்டுரை	0 10 0
4.	தமிழ் மொழி பெயர்ப்பு (English-Tamil)	0 6 0

(ஒவ்வொரு பிரதிக்கும் (Book-Post) தபாற் செலவு 2 அணா சேர்த்து M. O. மூலம் தொகையை அனுப்ப வேண்டும்.)

கிடைக்குமிடம்:

சர்மா பதிப்பகம்

1-G, C P. Ramaswamy Iyer Road, Alwarpet. Madras 18.

53, Perumal Koil Street, Madurai.

தீபாவளி வாழ்த்துக்கள்!

கலைஞனின் கைத்திறன்
கண்கவர் வண்ணங்கள்

உறுதி, உழைப்பு, எல்லாம்
ஒருங்கே அமையப் பெற்ற

பட்டாடைகளுக்கு

ராதா ஸில்க்ஸ்

தன் பில்டிங்
175/1, மவுண்ட் ரோட், சென்னை-2.

தலைமை ஆபீஸ். ராதா ஸில்க் எம்போரியம், சென்னை-4.

ஆறுமுகம் முத்திரை உள்ள

ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

தலைவலி, ஜலதோஷம், கைகால் வலி ஜுரம்
முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.

புட்டி 1க்கு விலை 75 காசுகள்.

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான
இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

எங்கள் ஆர், எஸ், பதி மருந்து மூவர்ண அட்டைப் பெட்டிகளில் மட்டுமே விற்பனையாகிறது. காகிதத்தில் சுற்றப்பட்டு விற்பனையாவது கிடையாது.

போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ.,

ஸ்தாபிதம் 1909

த.பெ. எண் 99. 214 & 215 மேலமாசி வீதி. மதுரை

திருச்சி, தஞ்சை, வட, தென் ஆற்காடு ஜில்லாக்களுக்கு
சோல் கேன்வாசிங் ஏஜண்டுகள்

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்,

தபால் பை எண் 172
218, மேலமாசி வீதி, மதுரை-1.

சைகிள் காரி

"கௌடில்யன்"

மாலை ஆறுமணி எழும்பூர் மாதா கோவிலின் மணி மாலைக் காற்றில் வெகு தூரம் சென்று ஒலித்தது. அந்த வேளையில் அந்த மணியின் நாதம் சுற்றுப் புறத்தில் தெய்வீக அமைதியை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது.

ஜுரம் அடித்துக் கிடந்த நண்பன் மோகனைப் பார்த்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். ரங்கபாஷ்யம். மாலை மயங்கியது. அஸ்தமன சூரியன் பட்டிணத்தின் பனை மரங்களின் பின்புறம் மெள்ள மெள்ள இறங்கிக் கொண்டிருந்தான், இருள் பரவி விட்டது. போதாக் குறைக்கு வானம் வேறு உறுமிக் கொண்டிருந்தது. நடு நடுவே மின்னல் ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தது. மாலையில் நன்றாக இருந்த வானத்திற்கு இப்போது என்ன கேடு வந்தது?

சைகிள் பெடலை வேகமாக மிதித்தான் ரங்கன். காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாகப் பறந்தது. சைகிள் கூடவே மழையும் தொடங்கி விட்டது. முதலில் சிறிதாக ஆரம்பித்து பிறகு வலுத்துவிட்டது. தொப்பலாக நனைந்து விட்டான் அவன். சில்க் ஷர்ட் நன்றாக நனைந்து அவன் முதுகோடு ஒட்டிக் கொண்டது. சில்லென்ற ஈரத்தினால் அவனுக்கு குளிர் எடுத்தது.

மணி அடித்துக் கொண்டே அந்த ரோட்டு முனையில் திரும்பினான் ரங்க பாஷ்யம். அதே சமயம்:—

வேகமாக வந்த சைகிள் ஒன்று அவன் சைகிள்மீது மோதி அவனை நிலைத்தடுமாறி விழச் செய்தது அவனுக்குக் கோபம் எல்லை மீறிவிட்டது. எழுந்து தன் மீது சைகிளை மோதியவனை நன்றாக உதைக்கத்தான் எண்ணினான்; ஆனால் அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

அவனுடைய சைகிளில் மோதிய ஆசாமி பக்கத்தில் தேங்கிக் கிடந்த மழை ஜலத்தில்போய் விழுந்தான்.

தன்னை மெள்ள சமாளித்துக் கொண்டு எழுந்தான் ரங்கன். அதே சமயம் அந்த ஆசாமியும் எழுந்து ஜலத்தில் நனைந்த தன் ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தான்.

அருகில் சென்று பார்த்தான் ரங்கன். இது என்ன? அந்த சைகிள் காரன் புடவைக்கட்டிக் கொண்டிருக்கிறான்!

பளிச்சென்று ஒரு மின்னல்! அவனுக்கு புரிந்துவிட்டது. அவன் மேல் மோதியவன் சைகிள் காரன் அல்ல சைகிள் காரி! அதுவும் அவள் அவனுடன் கல்லூரியில் படிக்கும் சகுந்தலா தான் என்று அவனுக்குப் புரிய அதிக நேரமாகவில்லை.

மழை நின்று வானம் துல்யமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மேற்கு வானில் வெண்மதிக் கிளம்பிக் கொண்டிருந்தது. தார் ரோட்டை நிலவு வெள்ளி முலாம் பூசிக்கொண்டிருந்தது.

தன் சைகிளை எடுத்து ஸ்டாண்டு போட்டு விட்டு அவள் சைகிளை எடுக்க அருகில் சென்றான். ஆனால் அதற்குள் அவள்— சகுந்தலா, "தொடாதீர்கள்! உங்களுக்கு வெட்கமாயில்லை. ஒரு பெண்மேல் உங்கள் சைகிளை மோதி உங்கள் பலத்தைச் சோதித்துப் பார்த்தீர்களாக்கும்? தூ! வெட்கம் கெட்ட ஜென்மம்" என்று பொரிந்து கொட்டிக் கொண்டே தன் ஜார்ஜெட் சேலையில் படிந்திருந்த

சேற்றை உதறிக் கொண்டிருந்தாள்.

பெண் பாம்பைப் போல் அவள் சீறியதைக் கண்டு அவன் திகைத்து நின்றான். யார்மேல் தவறு? அவன் திரும்பும்போது மணி அடித்துக் கொண்டு தானே திரும்பினான்? அவளும் மணி அடித்திருந்தால் அவன் அவ்வளவு வேகமாகத் திரும்பி இருக்க மாட்டானே...? தன்மேல் ஹிமாலயத் தவறை வைத்துக் கொண்டு அவனை 'வெட்கம் கெட்ட ஜென்மம்' என்று திட்டுகிறாளே! இது என்ன அக்கிரமம்! என்று எண்ணிய ரங்கனுக்குச் சினம் பொங்கியது.



எனினும் அடக்கிக்கொண்டான். அவன் பண்பாடு மிக்கவன் பெண்களை மரியாதையுடன் போற்றும் குணமுள்ளவன். இவள் காரணமாக அவன் தன் நிதானத்தை இழக்க விரும்பவில்லை.

“மன்னிக்க வேண்டும் ‘நான் மணி அடித்தேன் ஆனால், என்னவோ தவறு நேர்ந்துவிட்டது’’ தன்னிடம் தவறு இல்லையாயினும் அவன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

ஆனால், அவள் அளித்த பதில்! ‘‘மன்னிப்பா? உங்களைப் போன்றவர்களுக்கு செருப்பால்தான் மன்னிப்புக் கிடைக்கும்’’

சொல்லிவிட்டு சைகிளை எடுத்துக்கொண்டு விர்ரென்று கிளம்பிப் போய் விட்டாள் சகுந்தலா. புயல் வீசி ஓய்ந்ததுபோல் இருந்தது ரங்கனுக்கு.

★ ★ ★

வீட்டுக்கு வந்து படுக்கையில் படுத்ததும் ஏனோ சகுந்தலாவுக்குத் தூக்கம் வரவில்லை அடிக்கடி ரங்கபாஷ்யத்தின் முகம் வந்து போய்க் கொண்டிருந்தது. தவறைத்தன்மேல் வைத்துக்கொண்டு அவனைத் திட்டியதை நினைத்துக் குன்றிப் போனாள். அத்தனைக்கும் அவன் வாயைத் திறந்தானா? எவ்வளவு பெருந்தன்மையுடன் மன்னிப்புக் கேட்டான். அதற்கு அவள் அளித்த பதில்? வேதனை அவள் உள்ளத்தைப் புழுப்போல் அரித்தது.

அவனை அவளுக்கு நன்றாகத் தெரியும். அவளுடன்தான் இண்டர் இரண்டாம் வகுப்பில் படிக்கிறான். பிராக்டிகல் வகுப்பில இருவருக்கும் ஒரே மேஜைதான் கிடைக்கிறது. பரிசோதனை செய்ய. அப்பொழுது எல்லாம் அனாவசியமாக அவன் அவளிடம் பேச்சுக் கொடுத்தது உண்டா? ஊஹூம் கிடையாது! அவளை ஒரு தடவைகூட நிமிர்ந்து நோக்கியவன் கூட அல்லவே!

அப்படி தெரியாதவள் போல் அவனைப் பேசிவிட்டு வந்தது தவறுதான். தவறா? மன்னிக்கமுடியாத குற்றம்! அவன் கள்ளங்கபடில்லாத குழந்தை முகம் அவள் செருப்படி என்றதும் எப்படி சுருங்கி வேதனை அடைந்தது.

சிந்தனை நின்றது.

மனப் பாரத்தைத் தாள முடியாத அந்த பேதை தலையணையில் முகத்தைப் பதித்து, விக்கி விக்கி அழுதாள். எவ்வளவு நேரம் அழுதாளோ? தலையணை நன்றாக நனைந்துவிட்டது!

பேதை! அழுது என்ன செய்வது? கொட்டிய வார்த்தைகளைத் திரும்ப வாய்க்குள் எடுத்துக் கொள்ளமுடியுமா? அவள் அழுகையும் கண்ணீரையும் கொஞ்சம்கூட லட்சியம் செய்யாத இருள் தன் போக்கில் வைகறையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

கல்லூரிக்கு நேரமாகிவிட்டது இரவுபூராவும் தூங்காமல் இருந்ததால் சகுந்தலாவின் உடம்பு அசதியில் தள்ளாடிக் கொண்டிருந்தது. கண்கள் அழுது அழுது வீங்கி சிவந்துஜொலித்தன. தலையை வேறு ‘விண், விண்’ என்று தெரித்தது. கல்லூரிக்கு போவோமா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டிருந்தாள். ரங்கபாஷியத்தின் நினைவு வந்ததும் இன்று எப்படியும் அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும், அதற்காகவே இன்று கல்லூரிக்குப் போகவேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டாள்

★ ★ ★

சைகிளில் ஏறி உட்கார்ந்து வேகமாக மிதித்தாள். சைகிள் தார் ரோடில் ஓடிக்கொண்டிருந்தது. கல்லூரிப் பாலத்தில் ரங்கபாஷியத்தைச்சந்தித்தாள் சகுந்தலா. அவள் முகம் பிரகாசமடைந்தது. முகத்தில் மெல்லிய புன்முறுவல் அரும்பியது.

பெடலை ஓர் அழுத்து அழுத்தி அவன் அருகில் சைகிளைக் கொண்டு போனாள். முன்னாள் நிகழ்ச்சியை மறக்காத ரங்கபாஷ்யம் இது ஏதடா வம்பாக இருக்கி

For

SAREES

CHOLIES, PAVADAIS,
DAVANIES & Etc.,
From
All Parts of India
To Suit
All Occasions

★

Visit

Saree Centre

142. MOUNT ROAD,
THOUSAND LIGHTS, MADRAS-6.

Telephone: 85163.

றது. என்று நினைத்தவனாய், தன் சைகிளை வேகமாக மிதித்தான். அடுத்த கணம் முன்னால் சென்று கொண்டிருந்த தன் நண்பர்கள் குழாத்தில் கலந்து கொண்டுவிட்டான்!

இது சகுந்தலாவுக்கு முகத்தில் அடித்தாற்போல் இருந்தது. அவள் கண்களில் ஜலம் தளும்பி நின்றது. யாராவது கவனித்துவிடப் போகிறார்களோ என்று அச்சமடைந்தவளாய், கைக்குட்டையினால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

பரிசோதனை வகுப்பு நெருங்க நெருங்க இன்னதென்று விவரிக்க இயலாத பீதி சகுந்தலாவின் நெஞ்சை அடைத்தது. அவள் அந்த வகுப்பை அடைவதற்கு முன்பே அங்கு சென்று விட்டான், ரங்கபாஷ்யம். அவளுக்காக அவன் காத்திருக்கவில்லை. நைட்ரிக் அமிலத்தை டெஸ்டிங் டியூப்பில் விட்டு அதன் குண குணத்தை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

அவன் அருகில் வந்து நின்றாள் சகுந்தலா. 'ஈவினிங் இன் பாரிஸ்' கும்மென்று அடித்தது. அவள் உடுத்திருந்த மைசூர் கிரேப் சேலை காற்றில படபடத்தது. அது அவன் உடலையும் ஸ்பரிசித்துக் கண்ணும் பூச்சி ஆடியது. ஓரக் கண்ணால் கவனித்தான் ரங்கபாஷ்யம். அவன் ஆராய்ச்சி செய்வதையே கவனித்துக்கொண்டிருந்தாள். அடிக்கொரு தரம் மை வழிந்த கண்களால் அவனை மலர்ந்து நோக்கினாள்.

அவன் திணறித்தான் போனான். என்ன கட்டுப் படுத்தியும் அவன் மனம் அவளிடமே சுற்றிச் சுற்றி தட்டாமாலை ஆடியது. இன்னும் கொஞ்சம் அழவிட்டுத்தான் பார்ப்போமே என்று எண்ணியவன் மௌனமாகவே வேலையில் ஈடுபட்டான்.

அவள் அவனிடம் பேச்சுக் கொடுத்தாள். அவன் அமைதியாகப் பதில் அளித்ததைக் கண்டு தைரியம் அடைந்தவளாய் "நேற்று நடந்த சம்பவத்திற்கு மிகவும் வருந்துகிறேன். மன்னியுங்கள், நான் அப்படி பேசி இருக்க வேண்டாம், என்றாள்" அவள் குரலில் வருத்தம் நிறைந்திருந்தது.

"தங்களைப் பொறுத்த வரையில் மன்னிப்பு என்றால் செருப்பு என்றுதான் நினைக்கிறேன்! தனிமையில் எவ்வளவு வேண்டுமானாலும் செருப்பினால் அபிஷேகம் செய்யுங்கள். ஆனால் தயவு செய்து இங்கு எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் இருக்கின்றனர் என்பதை நினைவு மூட்டுகிறேன்" என்றான். அவன் குரலில் சிறிது ஏளனம் கலந்து ஒலித்தது.

"சொல்லுங்கள்; சொல்லுங்கள்! ஆயிரம் தரம் அல்ல, பதினாயிரம் தரம்; சொல்லுங்கள்! அப்பொழுதேனும் எங்கள் பின்புத்தி எங்களை விட்டு ஓடுகிறதா, பார்ப்போம்! அது எங்கே போகும்? எவ்வளவுதான் இந்தப் பாழும் பெண்கள் படிக்கட்டுமே: அவர்கள் புத்தி அவர்களை விடுமா?" அவள் தன்னையும்-தங்கள் சமூகத்தையும் வெறுத்துக் கொண்டு பேசினாள்.

"உண்மையாகச் சொல்லுகிறேன் உங்களைப் பேசியதினால் லஜ்ஜையின் காரணமாகக் குன்றிப் போனேன். நேற்று இரவு பூராவும் என் செய்கையை நினைத்து நினைத்து அழுதிருக்கிறேன் போறுமா?" சகுந்தலாவின் குரல் தழ தழத்தது.

அவள் முகத்தை ஏறிட்டு நோக்கினான் ரங்கபாஷ்யம். அவள் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை என்று அவள் வாடிய முகம் பறை சாற்றிக் கொண்டிருந்தது.

"மன்னிக்க மாட்டீர்களா?" என்று மன்றாடினாள் சகுந்தலா.

"தயவு செய்து என்னை பரிசோதனையில் ஈடுபட விடுங்கள். உங்களுக்குப் புண்ணியமாக இருந்து விட்டுப் போகட்டும். டெமான்ஸ்டேரட்டர் கவனித்துக் கொண்டிருக்கிறார்" என்றான் கண்டிப்புடன்.

"என்ன மிஸ்டர் ரங்கபாஷ்யம்? என்ன பேச்சு நடக்கிறது? அடுத்த "குரூப்" காத்துக் கொண்டிருக்கிறது என்பது நினைவில் இருக்கிறதல்லவா?" என்று மெல்ல சிரித்துக்

7 ஆண்டுகளுக்கும் 275 நிர்மாணிப்பு வேலைகளை
குறைந்த காலத்தில் நிறைவேற்றி இருக்கிறோம் !
கீழ்க்காணும் ஸ்தாபன நிர்வாகிகளுக்கு

எங்கள் பாராட்டுதல்களும் நல்வாழ்த்துக்களும் !

ஜுபிடர் டாக்கீஸ், கும்பகோணம்.
ஜெயலக்ஷ்மி டாக்கீஸ், குனூர்.
ஆஞ்சநேயா டாக்கீஸ், தோட்டகும்மடா.
பாலாம்பிகை டாக்கீஸ், குளித்தலை.
பாலன் டாக்கீஸ். வந்தவாசி.
அசோக் டாக்கீஸ், படகாரா.

இந்த தியேட்டர்களில்
BAUER - KLANGFILM
பவர்–க்ளாங்பில்ம்
புரொஜக்டர் (ஸவுண்டு ஸிஸ்டம்)
நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

பொது ஜனங்களுக்கு விரைவில் திறக்கப்படும்

கீழ்க்கண்ட இடங்களில் நமது நிர்மாண வேலைகள் நடை பெற்று வருகின்றன.

ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர் பாலஸ், குண்டூர்.
அய்யப்பன் டாக்கீஸ், மதுக்கூர்.
ஜெயலக்ஷ்மி டாக்கீஸ், அலங்காநல்லூர்.
காளீஸ்வரி டாக்கீஸ். வத்ராயிருப்பு.
தேவகிரி தியேட்டர்ஸ். சென்னிமலை.
ஜெயா டாக்கீஸ், சாத்தூர்.
கனகா மஹல், நெல்லூர்.
லக்ஷ்மி டாக்கீஸ், ஆரணி.
எவரெஸ்ட் பிக்சர்ஸ், மதுரை.
சிவாஜி டூரிங் டாக்கீஸ், ராமனாதபுரம்.
அஜந்தா டாக்கீஸ், பரவை.
ஜோதி டாக்கீஸ், திருப்பதி.

எஸ். வி. கே. டாக்கீஸ், பள்ளிகொண்டா.
லக்ஷ்மி டாக்கீஸ், பர்லகிமெடி.
அருணா டாக்கீஸ், திருச்சிராப்பள்ளி.
மஹாலக்ஷ்மி டாக்கீஸ், பேட்டவாய்த்தலை.
ராஜன் டாக்கீஸ், வடுகபட்டி.
ஜெயசீலன் டாக்கீஸ், தேவதானம்பட்டி.
ஸ்ரீ வெங்கடேஸ்வரா டாக்கீஸ், நாயுடுபேட்டை.
ஜெயராம் ராவ் R. பவார், காளஹஸ்தி.
மூர்த்தி டூரிங் டாக்கீஸ். வேடசந்தூர்.
கங்காவதி பம்பதெப்பா & ஸன்ஸ், ஹக்கரிபொமனஹள்ளி.
கிருஷ்ணா டாக்கீஸ், செய்தூர்.

உங்கள் தியேட்டருக்கான **“இஸ்கரா-யூனிவர்ஸல்”** (ISKRA-UNIVERSAL) சிக்கனத் திட்டமும் எம்மிடம் உள்ளன

விவரங்களை கீழ்க்கண்டவர்களிடம் கேட்கவும் :

ITEC
இன்டர்னேஷனல் டாக்கி எக்விப்மென்ட் கம்பெனி
பிரைவேட் லி-ட்.,
18, மவுண்ட் ரோட், சென்னை-2.

தந்தி : “SOUNDHEAD” போன் : 84276
தலைமை ஆபீஸ் : 17 நியூ க்வீன்ஸ் ரோடு, பம்பாய்-4.
கிளைகள் : டெல்லி & கல்கத்தா.

கொண்டே கேட்டார் டெமான்ஸ்ட்ரேட்டர் சங்கரன்.

"நான் பேசவில்லே ஸார், மிஸ் சகுந்தலாதான் என்னைப் பேச்சுக்கு இழுக்கிருர்" என்ருன் அமைதியுடன்.

"சகுந்தலாவின் முகம் இருண்டு விட்டது. கோபத்துடன் பல்லேக் கடித்த வண்ணம் மரியாதை தெரியாத முட்டாள்! ஜடம்!" என்று முணுமுணுத்தவளாய் வகுப்பில் இருந்து போகக் கிளம்பிஞள்.

"என்ன சொன்னீர்கள்!"

"ஒன்றும் சொல்லவில்லே, தலையை வலிக்கிறது. நான் லேப்ரெரிக்குப் போகிறேன் என்று சொன்னேன்!" என்று பதிலளித்துவிட்டு வேகமாகச் சென்று விட்டாள்.

ரங்கபாஷ்யத்தின் முகத்தில் குறும்புப் புன்னகை மலர்ந்தது.

மாலே மணி நாலரை.

கல்லூரி மாணவர்கள் அவரவர் சைக்கிளில் வீட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர். எல்லோரும் போன பிறகு தன் சைகிளில் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தாள் சகுந்தலா. பரிசோதனே வகுப்பில் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை நினைத்து மனம் புழுங்கிக் கொண்டிருந்தாள்.

எவ்வளவு தாழ்ந்து போனுள்? தன் கௌரவத்தை எல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு அல்லவோ அவனிடம் கெஞ்சினுள். அந்த இரக்க மற்றவன் துளியேனும் அசைந்து கொடுத்தானு?

எண்ணத்தில் மிதந்துக் கொண்டே பாலத்தைக் கடந்தாள் அவள்.

அதே சமயம்:

பின்னுல் ஒரு சைகிள் வேகமாக வந்து அவள் சைகிளுடன் மோதிக் கொண்டது. ஐயோ! என்று திடுக்கிட்டுக் கூவிய சகுந்தலா கீழே விழப் போனுள் அதற்குள் வலிமை மிகுந்த இரண்டுகரங்கள் அவளேத் தூக்கி நிறுத்தின!

சமாளித்துக் கொண்டே சகுந்தலா தன்னைத் தூக்கியவனே நிமிர்ந்து நோக்கினுள்.

அவள் முகம் சிவந்தது. அது கோபத்திலுலா அல்லது அவன் தூக்கியதினுல் ஏற்பட்ட வெட்கத்திலுலா என்று சிரித்தமுகத்துடன் நின்று பார்த்துக் கொண்டிருந்தான் ரங்கபாஷ்யம்.

சுற்று முற்றும் பார்த்துவிட்டு அவளிடம் நெருங்கி "மன்னிக்க வேண்டும். அறியாமல் தவறுசெய்து விட்டேன்!" பணிவுடன் கூறி மென்மையான அவள் கரங்களேப் பற்றினுன் முகத்தில் குறும்புப் புன்னகை கூத்தாடியது.

என்ன துணிச்சல்!

"மன்னிப்பா? மன்னிப்பு—உங்களுக்கு..." அவளேப் பேசவிடாமல் அவள் சிவந்த வாயைப் பொத்தினுன் ரங்கபாஷ்யம்.

'இது என்ன? யாராவது கவனிக்கப்போகிருர்கள்!' என்று அவன் கைகளேச் செல்லமாக அகற்றி அகம் மலர, முகம் மலர மொழிந்தாள் சகுந்தலா.

பிறகு என்ன?

என்னவா? ஜோடி சைகிள் தார் ரோடில் ஆனந்தமாகச் சென்றுக் கொண்டிருந்தன.

அறிவிப்பு!

பல வாசக நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்கி நமது மாலாவில் "ஜயதேவரின் அஷ்டபதிகளுக்கு" படங்களுடன்-விரிவான விளக்கம்—டிஸம்பர் இதழ் முதல் வெளிவரும்.

"சந்திரனில் தீபாவளி" ★

★ ★ ★ ★

சுப்பு

'ராக்கெட் வெடியின் உதவியால் நான் வானோக்கிச் செல்கின்றேனே!... ஆகா! வானவீதியின் அதிசயத்தை என்ன வென்பேன்? பரந்த பூ மண்டலத்திலிருந்து அலுத்துப்போன என் உடலிற்கு வலிமையையும், இதயத்திற்கு இன்பத்தையும் அளிக்கும் சந்திரனுக்கல்லவா நான் செல்லுகிறேன்.

என்ன இது?...நான் ராக்கெட் மூலம் மேலே செல்ல செல்ல என் உடலே இலேசாக இருக்கிறதே. என்னுடைய ராக்கெட் மணிக்குச் சாரசரி 2500 மைல் வேகத்திலல்லவா, பறக்கிறது? சந்திரனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் 2,50,000 மைல்களல்லவா? பாதிதூரத்தைக் கடந்துவிட்டோமே! அதோ சந்திரன் தெரிகிறான். இன்னும் சில மணிகளில் சந்திரனை அடைந்து விடுவோமல்லவா?

என்ன கமலி, நீயும் ராக்கெட்டில் ஏறி, என்னுடனே வந்துவிட்டாயா? நான் உன்னை இப்போது தானே பார்த்தேன் அதோ பார் கமலி! சந்திரனை நெருங்கிவிட்டோம். நமது ராக்கெட்டும் நின்றுவிட்டது அங்கு உயர்ந்து நிற்கும் மலையைப் பார்த்தாயா? சந்திரனிலும் மலைகளும், செடிகளும்கொடிகளும்வளர்ந்திருக்கின்றனவே! கடல்களும் கொந்தளிக்கின்றனவே! என்ன ஆச்சரியம்! பூமியில் நாம் காணும் மலைகள், கடல்கள் மண் ஓடைகள் யாவும் இங்கும் உள்ளனவே கமலி!

ஆனால் உயிர்கள் ஒன்றும் வாழ்வதாகத் தெரியவில்லையே!... இப்பரந்த சந்திரனில் கமலி! நீயும் நானும் தான் உயிர்கள் போலும்! என்ன குளுமை! பனிகள் உறுகி ஆறாக ஓடுகின்றனவே கமலி!... இது நம் தலை தீபாவளியல்லவா...! நாம் இந்த புனித நதியில் ஸ்நானம் செய்தால் என்ன? இந்தத் தீபாவளியை நாம் சந்திரனில் அல்லவா கொண்டாடுகிறோம்! மனிதவர்க்கத்திற்கே ஏற்படாதபாக்கியம்மல்லவா நமக்கு ஏற்பட்டுள்ளது. விஞ்ஞான உலக மேதைகளான ரஷ்யர்கள் கூட இச்சந்திரனில் மனிதரை அனுப்ப முடியவில்லை. நம்ம ராக்கெட்டோ நம்மிருவரையும் சந்திரனில் சேர்த்துவிட்டதே!

கமலி, இங்கேபார்த்தாயா? சந்திரனிலும் பள்ளத்தாக்குகள் பலவிருக்கின்றன. பூ மண்டலத்திலிருக்கும் அறிஞர் பலரின் பெயர்கள் இப்பள்ளத்தாக்கிற்கும் அளிக்கப்பட்டுள்ளன. ஹிப்பார்கில், இராடோஸ்தனிஸ், பிளாடோ, கிரிமால்டி, கோபர்னிகஸ் ஆகிய பெயர்கள் முக்கியமானவை.

கமலி!... ஏன் நடுங்குகிறாய்?— குளிருகிறதா? சந்திரனின் ஒரு பாகம் குளிரும் மற்றொருபாகம் வெப்பமாகவுமிருக்கு மென்று நீ படிக்கவில்லையா?... நாம் இப்போது இருக்கும் பாகம் குளுமையானவிடம். புறப்படு உஷ்ணபாகத்தையும் பார்த்து விடலாம்...

கமலி!... அதோ பார் எவ்வளவு பிரதேசம் சூன்யமயமாக விருக்கிறது. இங்கு நம் இந்திய மக்கள் குடியேறிவிட்டால் ஆகா! எவ்வளவு ஆனந்தமாக விருக்கும். கண்ணுக்கும் கருத்துக்கும் எவ்வளவோ வளங்கள் நிறைந்துள்ளனவே! இதை விஞ்ஞானிகள் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்க்க முடிந்ததே தவிர நம்மைப்போல் நேராக— அதுவும் தம்பதிகளாக இங்குவந்து தீபாவளிக்கொண்டாடுவதென்றால்?... அது தெய்வ கிருபை தானே.

கமலி!... எனக்கும் வயது இருபத்திநாலாகிறது. பதினைந்துவருடங்கள் தீபாவளியைப் பார்த்தேன். என்ன பயன்? இந்தத் தீபாவளியை

என் எழில் ராணி, உன்னுடன் சந்திரலோகத்தில் கழிக்கக் கடவுள் அருள் புரிந்தாரல்லவா! அவருக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? ராக்கெட் வெடியின் உதவியாலல்லவா நாம் இருவரும் ஜோடியாக வாயு மண்டலம், மேக மண்டலங்களைத் தாண்டி இங்கு வந்தோம்: நாம் நம் ஊரில் ஒரு சிறு கல்லைக்கூட புரட்ட மாட்டோமே! இங்கு என்ன வென்றால் நம் கால்கள் பட்டவுடன் இந்தப் பாறைகளெல்லாம் உருண்டோடுகின்றனவே!

"கமலி!... அப்பப்பா இங்கு வெயில் கடுமையாக வல்லவா தாக்குகிறது!" என்று உளறிய வண்ணம் கட்டிலின் மேலிருந்து புரண்டு விழுந்தான் நாகு.

"போதுமே! உங்கள் சந்திரலோக வர்ணனை விடிந்துவிட்டது. அப்பா காத்திருக்கிறார் எழுந்து எண்ணை தேய்த்துக் கொள்ளுங்கள்!" என்றாள் கமலி.

"கமலி!— என்ன இது!... என் ராக்கெட் எங்கே? சந்திரனிலிருந்து இங்கு எப்படி வந்தேன்?" என்று கூறி விழித்தான் நாகு.

"இதோ! உங்கள் ராக்கெட்" என்று வெடித்த ராக்கெட் துண்டைக் காட்டி கை கொட்டி நகைத்தாள் கமலி.

அருகிலிருந்த எல்லோரும் கை கொட்டிச் சிரித்தனர்.

'சந்திரனுக்குச் சென்றதாக நான் கனவுதான் கண்டேனா?' என்று நாகுவும் சிரித்தான்.



எமது அபிமானிகளுக்கும்

வாடிக்கைக்காரர்களுக்கும்

தீபாவளி வாழ்த்துக்கள்!

★

மரம் சம்பந்தமான உங்கள்

எல்லாவித தேவைகளுக்கும்

எங்களைக் கேளுங்கள்.

★

The Brilliant Trading Corporation Ltd.,

TIMBER MERCHANTS

4-A, BASIN BRIDGE ROAD,

Post Box No. 1971

MADRAS-1.

Phone: **3876** Grams: **"YESKAR"**



தொடர்க்கதை வாசகர்களுக்கு

தீபாவளி மலர் என்பதினால் விக்ரமன் எழுதும் "திருவிளக்கு" என்னும் தொடர்கதையைப் பிரசுரிக்கவில்லை.

—ஆசிரியர்,

Edited and Published by S. S. Sarma, 1-G. Dr. C.P. Ramaswamy Iyer Road. Alwarpet, Madras-18.
Printed by S S. Sarma at Sri Sudarsan Press, 111, Mound Road, Madras-6.

நிரந்தர எழில்

பல நூற்றுண்டுகள் கழிந்த பின்பும் இன்றும் அதே வர்ண ஜ்வலிப்பு! அவ்வளவு ஜீவனுடன் விளங்குகின்றன, அஜந்தாவின் எழிலோவியங்கள். என்ன கம்பீரமாக ராஜபவனி வருகிறது பாருங்கள்!

Spartan

இதே நிரந்தர எழிலை, பிரசித்தி பெற்ற "ஸ்பார்ட்டன்" வண்ணங்கள் மூலமாக எங்கும் பரப்ப பாடுபட்டு வருகிறது அடிஸன்ஸ் பெயிண்ட் ஸ்தாபனம்.

மெம்பர்: இந்தியன் பெயிண்ட் அஸோஸியேஷன்

அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் & கெமிகல்ஸ்.,
பிரைவேட் லிமிடெட்.,
செம்பியம் - மதராஸ்-11.

APC-656

வருகிறது! . . .

உமா பிக்சர்ஸ்



சித்தூர்ராணி பத்மின

திரைக்கதை–வசனம் :
ஸ்ரீதர்

★

டைரக்ஷன் :
ஸி. எச். நாராயணமூ[illegible]தி

Sri. S[illegible]san Press, Madras-6.